விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii


பக்கங்கள்: இருபது

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 11 புதன்கிழமை (27.07.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 220

ராம்கோ RAMCO
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# காணி, பொலிஸ் அதிகாரமில்லாத அரசியல் தீர்வு சாத்தியமில்லை

## சுரேஷ் எம்.பி. உறுதிபடத் தெரிவிப்பு



(கொழும்பு)

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைப் பகிராமல் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை காண்பது சாத்தியமற்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## போர்க்குற்ற விசாரணை வேண்டாம் லண்டனில் சுமந்திரன் எம்.பி. உரை

(கொழும்பு)

போர்க்குற்ற விசாரணை வேண்டாம்– என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்தார்.

லண்டனில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிரித்தானியக்கிளை ஒழுங்கு செய்திருந்த கூட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குள் தேசியப்பட்டியல் மூலம் நுழைந்த சுமந்திரன் உரையாற்றினார்.

புலம்பெயர் தமிழ் மக்களின் செயற்பாடுகளை தான் பிரித்தானியாவிலும் வேறு இடங்களிலும் சந்தித்த இராஜதந்திரிகள் விமர்சித்ததாகவும், புலம்பெயர் தமிழ் மக்களின் செயற்பாடுகளை தாம் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை (20ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத்தமிழர் விவகாரம்

## முதல்வர் ஜெயலலிதாவை சந்தித்துப் பேசினார் சீமான்

(சென்னை)

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் நேற்று தமிழக முதல்வர் ஜெயலலிதாவை தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சீமான், இலங்கைத் தமிழருக்கு ஆதரவாகவும் கச்சதீவை மீட்க வலியுறுத்தியும் தீர்மானங்களை நிறைவேற்றியதற்காக முதல் (20ஆம் பக்கம் பார்க்க)



## காங்கேசன்துறை துறைமுகத்தின் புனரமைப்பு பணி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை துறைமுகத்தின் புனரமைப்பு பணியை நேற்று இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தா ஆரம்பித்து வைத்தார்.

இந்தியாவின் நிதியனுசரணையுடன் மேற்கொள்ளப்படும் புனரமைப்பு பணியின் ஆரம்ப நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, கப்பல்துறை பிரதி அமைச்சர் ரோகித அபேய குணவர்த்தன, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ்.மாவட்ட சிரேஷ்ட பிரிகேடியர் பிராங்கிளின் றொற்றிக்கோ, தெல்லிப்பழை பிரதேச செயலர் முரளிதரன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (எ-6)

## இலங்கை மீது பொருளாதாரத் தடை அமெரிக்காவின் தீர்மானத்தை தடுக்க பல்தேசிய நிறுவனங்கள் முனைப்பு

(கொழும்பு)

இலங்கையுடனான வர்த்தக உறவுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்குமாறு பல் தேசிய நிறுவனங்கள் சில அமெரிக்காவுக்கு அழுத்தம் கொடுக்க முற்படுவதாக தெரிய வருகின்றது.

இலங்கைக்கான உதவிகளை தடைசெய்வதற்கு அமெரிக்க காங்கிரஸின் வெளிவிவகார குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையிலேயே இம் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாக தகவல்கள் வெளிவந்துள்ளன.

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான வர்த்தக உறவுகளை வலுப்படுத்தும் வகையில் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கவுள்ளதாக (20ஆம் பக்கம் பார்க்க)

## த.தே.கூட்டமைக்கு சவால் விடுத்த அமைச்சர்

(கொழும்பு)

சிங்களமக்களுக்குவிரக்தியை ஏற்படுத்தாத வகையில் வட பிரதேசத்தை கட்டியெழுப்ப தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

இந்த கோரிக்கையினை அமைச்சர் பாடலி சம்பிக்க ரணவக்க முன்வைத்துள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப் பின்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

## பதுமனுக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட முன்னாள் கட்டளைத்தள பதி பதுமனுக்கு எதிரான வழக்கு இன்று திருகோணமலை மேல் நீதி மன்றத்தில் விசாரணைக்கு (20ஆம் பக்கம் பார்க்க)

## அழகியல் பட்டதாரிகளுக்கு நாளை நியமனக் கடிதம்

## ஜனாதிபதி வழங்கி வைப்பார்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்திலிருந்து ஆசிரிய நியமனத்துக்கென தெரிவு செய்யப்பட்ட அழகியல் பட்ட தாரிகளுக்கு நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு நாளை வியாழக்கிழமை அலரி மாளிகையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜனாதிபதி மகிந்த (20ஆம் பக்கம் பார்க்க)

கண்ணைக்கவரும் டையில்களை உங்கள் கனவு மாளிகையில் இன்றே பதியுங்கள்
OPEN EVERY DAY

நவீன் செரமிக்
Naveen Ceramic
#212, பலாலி வீதி, யாழ்ப்பாணம் 021 222 0033 / 021 222 0044
#5, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம் 0212224777 / 0212224888
Metro Engineering (Pvt) Ltd

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**வர்த்தகப் பெருமக்களே...**

பெருமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:-0729994777


# உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் பாடசாலை மட்ட 15 வயதுப் பிரிவு தேசிய மட்டப் போட்டிகள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 23, 24, 25 திகதிகளில் நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டியில் பங்குபற்றும் பாடசாலைகளுக்கிடையிலான யாழ். மாவட்டப் போட்டிகள் செப்டெம்பர் மாத முற்பகுதியில் நடைபெறவுள்ளது என சம்மேளன இணைப்பாளர் பேட்டி பனிஸ்ரர் தெரிவித்துள்ளார்.

போட்டியில் பங்குபற்ற விரும்பும் பாடசாலை அணிகள் இணைப்பாளருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)


**FINANCIAL SPONSORSHIP**

UK, USA, Canada, Australia

போன்ற நாடுகளில் கல்வி கற்பதற்கு

**SPONSORSHIP**

பிரச்சினையா?

உடன் தொடர்பு கொள்ளுங்கள்

VTL மெனேஜ்மென்ட் சேர்விஸ் (பிரை) லிமிடெட்,

இல.1, டீன்ஸ்டன் ஹவுஸ்,

டீன்ஸ்டன் பிளேஸ், கொழும்பு 3.

072-9994777/011-7902938


# 'பாதை' நடைப் பவனியின் இறுதி நாள் நிகழ்விற்கு ஒன்றிணையும் டயலொக்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வடக்கு மக்களின் புற்று நோய்க்கு எதிரான போராட்டத்திற்கு கைகொடுக்கும் முகமாய் பாதை முன் நடத்தும் நடைப் பவனியின், இன்று இடம்பெறவுள்ள இறுதிநாள் நிகழ்விற்கு இலங்கையின் முன்னணி தொலைத்தொடர்புகள் நிறுவனமான டயலொக் ஆசிஆட்டா ஒன்றிணைகின்றது.

யாழ்.போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் பிரிவை நிறுவுவதற்குத் தேவையான நிதித் தொகையைத் திரட்டும் பொருட்டு இலங்கையின் தெற்கு தெய்வேந்திர முனை தொடக்கம் வடக்கு பருத்தித்துறை வரையான 670 கிலோ மீற்றர் பயணிக்கும் இந்த நடைப் பவனியிலே பல்வேறு தரப்பட்ட வியாபார செயற்றிட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படுகின்றன.

அந்த வகையில் இதற்காய் பாதை வணிகப் பொருட்களை விற்பனை செய்யும் 03 விற்பனை நிலையங்களையும் டயலொக் நிறுவியது குறிப்பிடத்தக்கது. இந்த விசேட புற்றுநோய் சிகிச்சை பிரிவுத் திட்டத்தின் மூலம் வடக்கு, வட மத்திய மற்றும் கிழக்கு மாகாண மக்கள் கொழும்பிற்கு வருகை செய்து புற்றுநோய் சிகிச்சை பெற வேண்டிய தேவையின்றி யாழ். போதனா வைத்தியசாலையை அணுகலாம்.

வடக்கு, கிழக்கு மக்களின் அபிவிருத்தியின் ஒவ்வொரு தருணத்திலும் அவர்களுடன் இணைந்திருக்கும் ஒரே வலையமைப்பு என்ற வகையில் டயலொக் நிறுவனம் இந்த நடைப்பவனியிலும் தனது தடம் பதிப்பது குறிப்பிடத்தக்கது. டயலொக் ஆதரவுடன் இடம்பெறவிருக்கும் இந்த இறுதிநாள் நிகழ்வானது, அத்துடன் முற்றுப்பெறாமல் எம்மவர்களின் உயிர்களை புற்று நோயிடமிருந்து காக்கும் முயற்சியின் தொடக்கமாய் அமையவிருப்பது குறிப்பிடத்தக்கது.

இலாப நோக்கற்ற நிறுவனமான, கலர்ஸ் ஓஃப் கறேஜ் ட்ரஸ்ட் ஆனது 2008 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது முதல் இலங்கையில் புற்றுநோய்க்கு எதிராய் சிகிச்சை பெறுவதற்குத் தேவையான அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்பு செயற்பாடுகளுக்காய் தனது வளங்களை பயன்படுத்தி வருவதுடன் இந்த பாதை செயற்றிட்டத்தினையும் ஆரம்பித்து வைத்தது. தற்போது மஹரகமவில் உள்ள புற்றுநோய் வைத்தியசாலை தவிர, இலங்கையில் அதிகரித்துவரும் 20 மில்லியன் சனத்தொகைக்கேற்ப கொழும்பின் வெளி மாவட்டத்தில் மற்றும் ஒரு வைத்தியசாலையை நிறுவுதல் மிகவும் முக்கியமானதொரு தேவை ஒன்றாகும். அந்த வகையில் வெளி மாவட்டங்களிலிருந்து தங்கள் வாழ்க்கையைக் காக்கும் பொருட்டு நீண்ட தூரம் பயணிக்கும் மக்களுக்கு உதவும் முகமாய் விசேட புற்றுநோய் சிகிச்சைப் பிரிவுகளை நிறுவுவதற்கான செயற்றிட்டங்களை வரைவதில் கலர்ஸ் ஓஃப் கறேஜ் ட்ரஸ்ட் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு வருகிறது. (எ)

# அங்கவீனருக்கான இராணுவ மையம் திறப்பு

(அநுராதபுரம்)

யுத்தத்தால் அங்கவீனர்களான இராணுவத்தினருக்காக நிர்மாணிக்கப்பட்ட அஹிமங்சலநிலையம்நேற்று ஜனாதிபதியால் திறந்துவைக்கப்பட்டது. அநுராதபுரத்தில் இது அமைந்துள்ளது. இதற்காக 220 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இராணுவத்தினர் சேவைகள் பிரிவில் இது நிருவகிக்கப்படவுள்ளது. இந் நிலையம் திறக்கப்பட்டு இதன் முதலாவது இராணுவ உறுப்பினரின் பதிவும் ஜனாதிபதியால் மேற்கொள்ளப்பட்டது. (எ)

# புலிகளைத் தோற்கடித்தது அரசியல்வாதிகள் அல்ல

## பொன்சேகா தெரிவிப்பு

நாட்டில் 30 வருடமாக நிலவி வந்த புலிப் பயங்கரவாதத்தை தாமே தோற்கடித்ததாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வெள்ளைக்கொடி விவகார வழக்கிற்காக நீதிமன்றில் ஆஜரான போது அவர் இதனைத் தெரிவித்தார். நாட்டில் நிலவிய பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு 6 ஆயிரம் படையினரை இழந்த அதே நேரம் ஆயிரம் படை வீரர்கள் அங்கவீனமாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இவ்வாறானதொரு இழப்புக்களுக்கு மத்தியிலே நாம் பயங்கரவாதத்தைத் தோற்கடித்தோம். இந்த பயங்கரவாதத்தை அரசியல்வாதிகள் தோற்கடிக்கவில்லை. அதேபோல் செயலாளர்களுக்குப் பின்னர் சென்ற மேஜர் ஜெனரல்களும் அல்ல எனவும் குறிப்பிட்டார். (எ)

# உருவப்பட திரைநீக்கம்

காரைநகர் பலகாட்டைச் சேர்ந்த அமரர் இராலிங்கம் திருவாதிரை அவர்களின் உருவப்படத் திரை நீக்கமும், ஆத்ம சாந்தி வழிபாட்டு நிகழ்வும் எதிர் வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு காரைநகர் வியாவில் கணபதீஸ்வரக் குருக்கள் நூலகத்தில் இடம்பெறும்.

வியாவில் ஐயனார் தேவஸ்தான அறங்காவலர் மகாராணி க. சோமசேகரம் தலைமையில் நடை பெறும் இந் நிகழ்விற்கு பிரதம விருந் தினராக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக செஞ்சொற் செல்வர் இரா. செல்வவடிவேலும், கௌரவ விருந்தினராக ஆசிரியர் ந.கணேசமூர்த்தியும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (எ-8)

# நுணாவிலில் நேற்று விக்கிரகங்கள் திருட்டு

(நுணாவில்)

நுணாவில் கந்தசுவாமி வைரவர் கோவிலிலிருந்த விக்கிரகங்கள் நேற்று திருடப்பட்டுள்ளன.

ஐம்பொன்னாலான விக்கிரகங்களே இவ்வாறு திருடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ந)

# கலைமாணிப் பட்ட பொது நிர்வாக பரீட்சையில் சித்தியடைந்தோர்

(யாழ்ப்பாணம்)

2010 ஆம் ஆண்டிற்கான யாழ். பல்கலைக்கழக கலைமாணிப் பட்ட பொது நிர்வாக பரீட்சையில் சித்தியடைந்தோர் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் பரீட்சையில் சித்தியடைந்தோரின் பெயர் விபரம் வருமாறு,

எஸ். அன்ரனிராசன், திருமதி ரி.பாபு, டாக்டர் எஸ்.கணேசன், ஜி.கோபாலகிருஷ்ணன், எஸ்.ஐயாத்துரை, ஆர்.ஜோய் இன்பராஜ், ரி.கபிலன், பி. கஜேந்திரன், கே.கவிதரன், ஏ.கிரிதரன், ஏச். கிருஷ்ணஜோதி, எஸ்.குமாரசாமி, ஜி.லோகநாதன், ரி.முகுந்தன், திருமதி ஆர். முகுந்தன், ஆர். முகுந்தன், என். நவநீதன், எம்.நிமலன், எ.நிதர்சன், எம். பற்றிக் டிரஞ்சன், என். பிரபாகரன், கே. பிரபாகரன், எஸ். பிரசாந், திருமதி ரி. பிரேம் ஆனந், பி. ராஜகுலவீரசிங்கம், எஸ்.சதீஸ், கே. சதீஸ்,

எஸ். சத்தியசீலன், கே. செல்லத்துரை, கே. சாந்தகுமார், எஸ். சிவகுருநாதன், எஸ். சிவகுமார், எஸ். சிவநாதன், திருமதி ஏ. சிவனேஸ்வரன், எஸ். சிவசுப்பிரமணியம், ஏ. சோதிநாதன், பி. சுதாகரன், எஸ். தனேஸ்வரன், ரி. தங்கராசா, எஸ். திருச்செந்தூரன், என். திருலிங்கநாதன், திருமதி எஸ். வைகுந்தவாசன், திருமதி எல்.வி. ஜெயதிலக், திருமதி எஸ். சுதாகர். (ஸ்ரீ-2)

# வெளிவாரிப் பரீட்சை 300 பேருக்குப் பட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகினால் நடத்தப்பட்ட கலைமாணி இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்து கலைமாணிப் பட்டம் பெறுவோர் பட்டியல் வெளியாகியுள்ளது.

இம் முறை 300 மாணவர்கள் கலைமாணிப் பட்டம் பெறுவதுடன், இவர்களில் 2 மாணவர்கள் இரண்டாம் தர மேற்பிரிவிலும் 18 மாணவர்கள் இரண்டாம் தர கீழ்ப் பிரிவிலும் 280 மாணவர்கள் சாதாரண சித்தியிலும் சித்தியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

மாணவர்கள் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகுடன் தொடர்பு கொண்டு பரீட்சைப் பெறுபேறுகளை பெற்றுக் கொள்ளலாம் என வெளிவாரி பரீட்சைப் பிரிவின் இணைப்பாளர் க.சிவராஜா அறிவித்துள்ளார். (எ)

# மாணவர்கள் கௌரவிப்பு

(வட்டக்கச்சி)

கிளிநொச்சி கொமர்ஷல் வங்கியில் அருணலு வங்கிக் கணக்கு வைத்திருக்கும் 2010 ஆம் ஆண்டு தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா நாளை பிற்பகல் 3.30 மணிக்கு கண்டி வீதியில் அமைந்துள்ள கிளிநொச்சி வங்கிக் கிளையில் நடைபெறவுள்ளது. (எ-86)




**சிவபார்வதி ஜோதிட நிலையம்**

**பண்டித்-மஞ்சுநாத சுவாமி**

தொ.பே. இல: 077 8949044

அன்பானவர்களே!

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள சுவாமி அவர்கள் வம்சாவளியாக காளி அம்மன் அருள் கொண்டு கைரேகை மூலம் துல்லியமாக நடந்தவை, தொழில், வியாபாரம், லட்சுமிகர விடயமான பொருத்தம் போன்ற விடயங்களையும், கணவன்-மனைவி ஒற்றுமையின்மை, கோர்ட் வழக்கு, உடல் நலமின்மை போன்றவற்றிற்கு பரிகாரம், பிரிந்தவர்கள் ஒன்று கூடுதல், வெளியூர் பயணங்கள், கல்வி உத்தியோகம், திருமணயோகம், குழந்தை பாக்கியம், வாஸ்து சாஸ்திரம், எதிரிகள் கண்திருஷ்டி போன்ற எல்லாவித பிரச்சினைகளையும் எதிர்கால பலாபலன்களையும் தெரிவிப்பார்.

**சண்ஜெய உணவகம் (மேல்மாடி)**

414, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(HNB வங்கி அருகில், யாழ். பஸ் நிலையம் முன்பாக)

நேரம்:- காலை 7.00 மணி முதல் மாலை 7.30 மணி வரை

(சி-3852) கட்டணம் ரூபா 101/-



**வீடு விற்பனைக்கு**

சுண்டுக்குளிப் பகுதியில் 2 பரப்புக் காணியில் அமைந்த பெரிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:-
0776181216
0718475028

(5553)



**ஆட்கள் தேவை**

ஹைப் செற்றிங் தெரிந்த பெண்பிள்ளைகள் தேவை. பயிலுனர்களும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். மெசின் மைண்டர் தேவை- முழு நேரம் / பகுதிநேரம்

9.00Am-5.00Pm வரை நேரில் வரவும்.

ஐங்கரன் ஓவ் செற்
சிலையடி, மந்திகை
T.P. 0212263641

(5552)



**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை**
**வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு**

**வெளிவாரிப் பரீட்சை- 2009**

இசைமாணி (2ம், 3ம் மற்றும் 4ம் வருடப் பரீட்சைகள்)

நடனமாணி (1ம், 2ம், 3ம் மற்றும் 4ம் வருடப் பரீட்சைகள்)

மேற்படி இசைமாணி மற்றும் நடனமாணி பட்டக் கற்கை நெறிகளுக்கான பிற்போடப்பட்ட பரீட்சைகளை எதிர்வரும் 15.08.2011 (திங்கட்கிழமை) தொடக்கம் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

| | |
|---|---|
| நடனமாணி- முதலாம் வருடத் தேர்வு<br>இசைமாணி/நடனமாணி- மூன்றாம் வருடத் தேர்வு | 15.08.2011-18.08.2011 |
| இசைமாணி/நடனமாணி- இரண்டாம் வருடத் தேர்வு<br>இசைமாணி/நடனமாணி- நான்காம் வருடத் தேர்வு | 19.08.2011-23.08.2011 |

பரீட்சை தொடர்பான புதிய நேர அட்டவணைகளை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகுடன் தொடர்புகொண்டு அறிந்து கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 0212223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
25.07.2011

(சி-3852)

## இன்று ஒரு தகவல்

# ரிபு முனிவர்

ஓர் ஊரில் ரிபு என்ற முனிவர் ஒருவர் இருந்தார்.

அவருக்கு நிதாதர் என்பவர் சீடர்.

ஒரு சமயம் ரிபு முனிவர் வெளியே எங்கேயோ சென்றார். பின்னர் ஆயிரம் வருடங்கள் கழித்து திரும்பி வந்தார்.

"அது எப்படி ஆயிரம் வருடங்கள்?" என்றெல்லாம் நாம் கேட்கக் கூடாது. இது புராணக் கதை. புராணங்களில் இப்படி சில நிகழ்ச்சிகள் உண்டு.

ஆயிரம் வருடங்கள் கழித்து ரிபு முனிவர் திரும்பி வந்ததால், சீடர் நிதாதருக்குத் தன் குருவை அடையாளம் தெரியவில்லை.

அதனால் அவர், 'யாரோ ஒரு பெரிய முனிவர் வந்திருக்கிறார்!' என்று நினைத்தார்.

"எனக்குப் பசியாக இருக்கிறது... சாப்பாடு போடு" என்றார் முனிவர்.

உடனே நிதாதர் தன் மனைவியிடம் கூறி ருசியாகச் சமைக்கச் சொன்னார்.

சமையல் தயாரானதும் முனிவரைச் சாப்பிடச் செய்தார்.

முனிவர் சாப்பிட்டு முடித்ததும், "என்ன... திருப்தியாகச் சாப்பிட்டீர்களா?" என்று நிதாதர் கேட்டார்.

முனிவர் நிமிர்ந்து பார்த்து, "நான் எங்கே சாப்பிட்டேன்? எவனுக்குப் பசியோ அவன்தான் சாப்பிடுவான். அவனுக்குத் தானே திருப்தி ஏற்படும்!" என்று வினவினார்.

சீடருக்கு ஒன்றும் புரியவில்லை. குழம்பிப்போய் நின்றார். பரிதாபமாக முனிவரைப் பார்த்தார்.

முனிவர், "இப்போது சாப்பிட்டது நான் இல்லை! என் உடல்தான் சாப்பிட்டது! அதனால் உடலுக்குத்தான் திருப்தியோ அதிருப்தியோ ஏற்படும். நான் ஆன்மா, எனக்கு அதில் திருப்தியோ அதிருப்தியோ இல்லை!" என்றார்.

உடனே அந்தச் சீடருக்கு, 'இவர்தான் நம் குரு ரிபு!' என்ற உண்மை புரிந்துவிட்டது.

அவர் குருவின் காலில் விழுந்து வணங்கினார்.

அதன் பிறகு 'மீண்டும் அந்த குரு வெளியே கிளம்பிச் சென்று, ஆயிரம் வருடங்கள் கழித்து திரும்ப ஊருக்குள் வந்து கொண்டிருந்தார்.

அந்தச் சமயத்தில் நிதாதர், தர்ப்பைப் புல் மூட்டையைத் தன் தலையில் வைத்துக் கொண்டு தெரு ஓரமாக நின்று கொண்டிருந்தார்.

அதைப் பார்த்த முனிவர் தன் சீடர் அருகில் சென்றார்.

இப்போது அந்தச் சீடருக்குத் தன் குருவை அடையாளம் தெரியவில்லை.

"ஏன் இப்படி தெரு ஓரமாக ஒதுங்கி நின்று கொண்டிருக்கிறாய்?" என்று முனிவர் கேட்டார்.

"ராஜா யானை மீது அமர்ந்து பவனி வந்து கொண்டிருக்கிறார். அதைத்தான் இப்படி ஓரமாக ஒதுங்கி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்று சீடர் பதிலளித்தார்.

அதற்கு முனிவர், "அது சரி... அதில் யார் ராஜா? எது யானை?" என்று வினவினார்.

சீடர் ஆச்சரியத்துடன் முனிவரைத் திரும்பிப் பார்த்து, "அதாவது, மேலே இருக்கிறாரே அவர்தான் ராஜா! கீழே இருக்கிறதே அதுதான் யானை!" என்று விளக்கம் கூறினார்.

"அது சரி... 'மேலே' என்று சொல்கிறாயே, அப்படியென்றால் என்ன? 'கீழே' என்று சொல்கிறாயே, அப்படியென்றால் என்ன?" என்று கேட்டார் முனிவர்.

அதைக் கேட்டதும் சீடருக்கு ஒரு மாதிரி ஆகிவிட்டது.

உடனே அவர் என்ன செய்தார் தெரியுமா?

அப்படியே ஒரே தாவாகத் தாவி அந்த முனிவரின் தோள் மீது சென்று உட்கார்ந்து கொண்டு, "மேலே என்றால் என்ன? கீழே என்றால் என்ன?' என்றுதானே கேட்டீர்கள்?" இதோ நான் மேலே இருக்கிறேன். நீங்கள் கீழே இருக்கிறீர்கள்!" என்றார்.

முனிவர் அப்போதும் விடவில்லை.

அடுத்த கேள்வியைக் கேட்டார்.

"அது சரி... நான் மேலே நீ கீழே என்று சொல்கிறாயே நான் யார்? நீ யார்? என்று வினவினார்.

உடனே சீடர், 'தன் குருதான் வந்திருக்கிறார்!' என்று புரிந்து கொண்டார். குருவின் காலில் விழுந்து வணங்கினார்.

"அத்வைதம் என்றால் என்ன?" என்பதை விளக்குவதற்காக அரசன் ரகுகுணனுக்கு ஜடபரதர் கூறிய கதை இது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# காங்கேசன்துறைமுக புனரமைப்பு பணி மூலம் இலங்கை-இந்திய உறவு வலுப்படும்

## அமைச்சர் பசில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்திய அரசு பல்வேறு கால கட்டங்களில் எமக்கு உதவிகள் செய்துள்ளது. தற்போதும் பல உதவிகளை செய்து வருகின்றது என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

காங்கேசன்துறை துறைமுகத்தின் புனரமைப்பு பணிகள் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் சகல பாகங்களையும் அபிவிருத்தி செய்வதில் ஜனாதிபதி அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றார். குறிப்பாக வட மாகாணத்தை விருத்தி செய்வதற்காக பல வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளார்.

வடமாகாணத்தின் அபிவி ருத்திக்கு காங்கேசன்துறை துறைமுகத்தின் பயன்பாடு அவசியம் என்பதை உணர்ந்தே இந்தியாவின் நிதியுதவியுடன் அதனை புனரமைக்க முன்வந்துள்ளார்.

போக்குவரத்துத் துறையை இலகுபடுத்துவதோடு இந்த துறைமுகத்தை மக்களின் பாவனைக்கு உட்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகின்றது.

கடந்த காலங்களில் ஏ-9 வீதி மூடப்பட்டு இருந்த போது ஏனைய மாவட்டங்களுக்கு மக்கள் போக்குவரத்து செய்வதற்கு இந்த துறை முகம் அதிகளவில் பயன்படுத்தப்பட்டது.

அந்த நெருக்கடியான காலகட்டத்தில் பணிபுரிந்த கடற்படையினருக்கு எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இந்த காங்கேசன்துறை துறைமுகத்தின் புனரமைப்பு பணிக்கு உதவி புரிவதன் மூலம் இந்திய-இலங்கை நட்புறவு மேலும் வலுப்பெறுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-6)

# அதிபர்களுக்கான செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தினால் பாடசாலைகளில் தொழில்நுட்ப பாடங்களை விருத்தி செய்தல் தொடர்பான அதிபர்களுக்கான விழிப்புணர்வுச் செயலமர்வு இன்று வியாழக்கிழமை வட்டுக் கோட்டை தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெறுமென யாழ்.வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் ரி.இராசலிங்கம் அறிவித்துள்ளார்.

மேற்படி செயலமர்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# கணனிப்பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலயக்கல்வி அலுவலகத்தில் ஆவணி மாத விடுமுறையில் (18 நாட்கள்) கணனிப் பயிற்சி (ICDL) நடைபெறவுள்ளது. இப் பயிற்சியை கற்க விரும்பும் யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் தங்கள் பெயர்களை யாழ்.கல்வி வலய அபிவிருத்தி பிரிவில் பதிவு செய்து கொள்ளுமாறு பிரதிக் கல்விப் பணிப்பாளர் ரி.இராசலிங்கம் கேட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 20 | 30 |
| உருளைக்கிழங்கு | 95 | 90 | 70 |
| பச்சைமிளகாய் | 70 | 40 | 60 |
| தக்காளி | 40 | 35 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 |
| கோவா | 50 | 40 | 60 |
| கரட் | 50 | 60 | 50 |
| பூசணி | 25 | 30 | 25 |
| புடோல் | 25 | 20 | 20 |
| வாழைக்காய் | 30 | 25 | 40 |
| சின்ன வெங்காயம் | 80 | 50 | 80 |
| பெரிய வெங்காயம் | 55 | 65 | 50 |
| பாகற்காய் | 70 | 90 | 70 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 50 |
| கருணைக் கிழங்கு | -- | 120 | 100 |
| பயற்றங்காய் | 50 | 80 | 70 |
| லீக்ஸ் | 50 | 40 | 40 |
| பீற்றூட் | 30 | 25 | 30 |
| கறிமிளகாய் | 50 | 60 | 50 |
| முருங்கைக்காய் | 65-70 | 90 | 70 |
| போஞ்சி | -- | 120 | 80 |
| கத்தரிதம்புள்ள | 15 | 15 | 15 |
| கீரை - 1 பிடி | 10 | 15 | 10 |
| தேசிக்காய் | 40 | 35 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 25-40 | 30 | 30 |

# இராசி பலன்

*27.07.2011*
*(ஆடி 11, புதன்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு*
*துவாதசி பின்னிரவு 2.45மணிவரை*
*ரோகிணி காலை 6.34 மணிவரை*
*மிருகசீரிடம் காலை 6.35 மணி தொடக்கம்*
*இராகுகாலம் 12.02-1.32 மணிவரை*
*சுபநேரம் 4.32-6.02 மணிவரை*

**மேடம்** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், காரியத்தில் கண்ணும் கருத்துமாகச் செயற்படுவீர்கள், வீட்டை அழகு படுத்துவதில் நாட்டம் செல்லும், வாக்கு மேன்மையுண்டு.

**இடபம்** கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், பெரியமனிதரின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மிதுனம்** பயணத்தால் பலன் கிடைக்கும், சிலருக்கு உதவுவதற்காக சற்று அலைய நேரிடலாம், சுப செலவுகள் ஏற்படலாம், தேவையற்ற சஞ்சலங்கள் தோன்றி மறையும்.

**கடகம்** வருமானம் பெருகி வளம் காணும் நாள், உற்சாகத்துடன் பணி புரிவீர்கள், குடும்பச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், கௌரவமான நாள்.

**சிங்கம்** குறைந்தளவில் எதிர்பார்த்த காரியமொன்றில் கூடியளவில் ஆதாயம் கிடைக்கலாம், தூர தேசச்செய்தி மனமகிழ்ச்சியைத் தரும், உற்சாகத்துடன் பணியாற்றுவீர்கள்.

**கன்னி** தொழில் முன்னேற்றத்திற்கு மங்கையர் வழி ஒத்துழைப்பு கிடைக்கும், வர வேண்டிய பண வரவுகள் வசூலாகலாம், பயண நன்மையுண்டு.

**துலாம்** பொது வாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்வது நல்லது, புதிய முயற்சிகளில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம், பிரயாணத்தில் விழிப்புணர்ச்சி தேவை.

**விருச்சிகம்** தொலைபேசி வழியில் அனுகூலச் செய்திகள் வந்து சேரும்,வருமானம் திருப்தி தரும், கூட்டாளிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும், செல்வாக்கான நாள்.

**தனுசு** காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரும் நாள், இனிமையான அனுபவங்கள் ஏற்படும், மூத்தோரால் ஏற்பட்ட மனஸ்தாபத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பீர்கள்.

**மகரம்** செய்தொழிலில் உயர்வும் மேன்மையும் ஏற்படும் நாள், உள்ளம் மகிழும் வகையில் உதிரி வருமானங்கள் வந்து சேரும்,வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முன்வருவர்.

**கும்பம்** மைத்துனர் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொழில் முயற்சியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும்.

**மீனம்** பணப்புழக்கம் இருந்தாலும் திடீர் விரயங்களும் உருவாகும், உடன் பிறப்புக்கள் மூலம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், எடுத்த கருமங்கள் எளிதில் நிறைவேறும்.

வளவன்

# ஒகஸ்ட் 4 இல் புதுப்பொலிவுடன் சங்கிலியன் சிலை திறந்து வைக்கப்படும்

## யாழ். மாநகர முதல்வர் தெரிவிப்பு

யாழ். முத்திரைச் சந்தியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் சங்கிலியன் சிலை எதிர்வரும் 4 ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது என யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோ. பற்குணராஜா தெரிவித்துள்ளார்.

மாநகர சபையில் நேற்று நடைபெற்ற சங்கிலியன் சிலை திறப்பது தொடர்பான கூட்டத்திலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது மாநகரசபை சங்கிலியன் சிலையினை புனரமைப்புச் செய்ய ஆரம்பித்திலிருந்தே அவ் புனரமைப்புப் பணி அரசியலாக்கப்பட்ட விடயமாக பார்க்கப்பட்டது. இந்த சங்கிலியன் சிலையை அகற்றி அவ்விடத்தில் புத்தர்சிலை அமைக்கப்படவுள்ளதாக பல மாறுபட்ட கருத்துக்கள் ஊடகங்களில் வெளிவந்தன.

இச்சம்பவம் உண்மைக்குப் புறம்பான விடயமாகும். இவ் உருவச் சிலை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி திறக்கப்படவுள்ளது. இதன் மூலம் பொய் பிரசாரம் செய்தவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்.

இவ்வாறான தவறான கருத்துக்கள் ஊடகங்களுக்கு எவ்வாறு சென்றது என்பது கேள்விக்குரியதே. ஆயினும் இச்சங்கிலியன் சிலையை அரசியல் மயப்படுத்தி அவதூறு செய்தமையால் அரசியல் மயப்படுத்தப்பட்டே திறக்கப்படும். தமிழ்க்கலாசார முறைப்படி இந்நிகழ்வுகள் நடைபெறும்.' இந்நிகழ்விற்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், புத்திஜீவிகள், சமயப் பெரியார்கள் ஆகியோர் அழைக்கப்பட்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் திறந்து வைக்கப்படும்.

இச்சிலையானது இந்தியச் சிற்பியான புருஷோத்தமனின் கைவண்ணத்தில் நிறுவப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-4)

# வில்லூன்றி புனித தீர்த்தத்தில் ஆடி அமாவாசை தீர்த்தோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வில்லூன்றி ஆலயத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை ஆடி அமவாசைத் தீர்த்தோற்சவமும் தர்ப்பணாதி அனுஷ்டானங்களும் நடைபெறவுள்ளன.

இதில் காலை 5.45 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனையும் காலை 6.45 மணிக்கு விசேட பூசையும் காலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் காலை 8 மணிக்கு வில்லூன்றி புனித தீர்த்தத்தில் தீர்த்தவாரியும் காலை 8.30 மணிக்கு தீர்த்த மண்டபத்தில் அனுக்கிரகமும் காலை 10.30 மணிக்கு சுவாமி கோயிலுக்கு எழுந்தருளலும் இடம்பெறும்.

காலை 8.30 மணிக்கு விநாயகப் பெருமான் தீர்த்தவாரி கொண்டருளியதன் பின்னர் பொதுமக்கள் அமாவாசை தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர்த் தர்ப்பணங்கள் செய்து கொள்ளவும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ஸ்ரீ)

# சிறுகதைத் தொகுப்பு நூல் அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீபாத தேசிய கல்வியற் கல்லூரி விரிவுரையாளர் ம. நிரேஷ்குமார் எழுதிய இவர்களும் யதார்த்த வாதிகள் தாம் எனும் சிறுகதைத் தொகுப்பு நூல் அறிமுகவிழா எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.31 மணிக்கு கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி பிரதான மண்டபத்தில் பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக ஈழத்தின் மூத்த எழுத்தாளர் செங்கை ஆழியான், சிறப்பு விருந்தினராக ஈழத்தின் மூத்த எழுத்தாளர் தெணியான் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நூலின் ஆய்வுரையை புத்தளம் வலயக் கல்விப் பணிமனையின் தமிழ்ப் பிரிவு பிரதிப் பணிப்பாளர் எம்.எம். சியான் நிகழ்த்துவார். (ஸ்ரீ-2)

# யாழ். பொதுநூலகத்தின் சிறுவர் நூலகப் பகுதி கையளிப்பு

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாண மாநகரசபை பொதுசன நூலக சிறுவர் நூலகப் பகுதி சிங்கப்பூர் சர்வதேச நிறுவனத்தினால் மேம்படுத்தப்பட்டு கையளிக்கும் நிகழ்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 11.30 மணிக்கு யாழ். பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி. யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் சிங்கப்பூர் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜோர்ச் ஜோ சம்பிரதாயபூர்வமாக யாழ். மாநகர மேயரிடம் கையளிக்கவுள்ளார்.

இச்சிறுவர் நூலகம் சிங்கப்பூர் சர்வதேச நிறுவனத்தின் அனுசரணையில் நவீன முறையில் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-51)




# விளையாட்டு விழாவும் சிறுவர் நூலக திறப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் மேற்கு முன்பள்ளி மழலைகளின் 37 ஆவது வருடாந்த் விளையாட்டு விழாவும் சிறுவர் நூலக திறப்பு விழாவும் இன்று பிற்பகல் இரண்டு மணிக்கு மத்திய முன்பள்ளி மைதானத்தில் முன்பள்ளித் தலைவர் கா. சிவசோதி தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத் துறை அமைப்பின் ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவு உதவிக்கல்விப் பணிப்பாளர் செல்வி.ஜெயா தம்பையா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வலிகிழக்கு பிரதேச சபை செயலாளர் திருமதி ஜெயந்தா சோமராஜ், யாழ். வலயக்கல்வி அலுவலக முன்பள்ளி உதவிக்கல்விப்பணிப்பாளர் க. விமலநாதன், முன்பள்ளி பல நோக்கு கூட்டுறவு சங்கத்தலைவர் தி.கமலநாதன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-70)

# 70 இலட்சம் பெறுமதியான வலம்புரிச்சங்கு பிடிக்கப்பட்டது

(பொற்பதி)

வடமராட்சி கடற்பரப்பில் 70 இலட்சம் பெறுமதியான வலம்புரிச்சங்கு ஒன்று பிடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சங்கு தென்னிலங்கையிலிருந்து வந்து கடலட்டை மற்றும் கடல் சங்கு பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் தொழிலாளர்களால் நேற்று முன்தினம் மாலை பிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகூ மேலும் தெரிய வருவதாவது, பொற்பதிப்பகுதியிலிருந்து நேற்று முன்தினம் காலை கடலுக்கு சென்ற தென்னிலங்கை மீனவர்கள் மாலை வரை சங்கு பிடிப்பதில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை இச்சங்கு பிடிக்கப்பட்டு கரைக்கு கொண்டு வரப்பட்டது.

அவ்வாறு கரைக்கு கொண்டு வரப்பட்ட சங்கை பல மக்கள் பார்வையிட்டதாகவும் பிடிக்கப்பட்ட அன்றைய தினமே விற்பனைக்காக தென்னிலங்கைக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (ஸ்ரீ-64)

# நூல்வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சு.சுரேஸ்குமார் எழுதிய அசேதன இரசாயன நட்சத்திரம் எனும் நூல் எதிர்வரும் 30ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு யா/கொக்குவில் இந்துக் கல்லூரி பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் ஐன்ஸ்டீன் அறிவியல் கழகத்தால் வெளியிடப்படவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக இரசாயனவியற்றுறை விரிவுரையாளர் டாக்டர் பி.அபிமன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இந்நூலின் ஆய்வுரையை கொக்குவில் இந்துக் கல்லூரி இரசாயனவியல் ஆசிரியர் செல்வி ந.கலா நிகழ்த்தவுள்ளார். (ஸ்ரீ)

# ஆடிப்பூரத்திருவிழா

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் திருக்கோயில் ஆடிப்பூரத்திருவிழாவை முன்னிட்டு கடந்த 24 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதிவரை காலை, மாலை தினமும் விஷேட அபிஷேகங்களும் பூஜையும் இலட்சார்ச்சனைகளையும் திருமுறைப் பாராயணமும் தீபாராதனையும் நடைபெறும்.

அத்தோடு ஆடிப்பூரத் தினமான எதிர்வரும் ஒகஸ்ட்மாதம் 2ஆம் திகதி மூலமூர்த்தி அம்பாளுக்கு 108 சங்காபிஷேகமும் நடைபெறும். (ஸ்ரீ)

# விலங்கு விசர்நோய் தடுப்பூசியேற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபை எல் லைக்குள் அமைந்த வண்ணார் பண்ணை பொது சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இதற்கமைய நாளை வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரை முருகமூர்த்தி வீதியிலும் காலை 11.30 தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை கலைவாணி சனசமூக நிலையத்திலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

இதே போன்று நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை தாமரை வீதியிலும் காலை 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை பெரியதம்பிரான் வீதியிலும் வைத்து வழங்கப்படவுள்ளது.

எனவே இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தமது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி ஊசியினை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

# உயர்தரப்பரீட்சை அனுமதி அட்டை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த உயர்தரப்பரீட்சை-2011 இற்கு தோற்றும் யாழ். இந்துக்கல்லூரி மாணவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் இன்று காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் வைத்து வழங்கப்படவுள்ளதாக அதிபர் வீ.கணேசராசா அறிவித்துள்ளார்.

எனவே உயர்தரப்பரீட்சைக்கு தோற்றும் அனைத்து மாணவர்களும் சமூகம் தந்து அனுமதி அட்டையை பெற்றுக்கொள்ளுமாறு அவர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)






காணி உரித்து பதிவதற்கான அரச நிகழ்ச்சி திட்டமான மண்ணின் மகிமை (பிம்சவிய) திட்டத்திற்கான ஆரம்ப வைபவம் நல்லூர் பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் காணியமைச்சின் மேலதிக செயலாளர் ஏ.பி.பொரேலேசா, காணியமைச்சின் சிரேஷ்ட செயலாளர் எம்.பி.உதயகாந்தா ஆகியோர் உரையாற்றுவதையும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-அ.சாள்ஸ்)

# பலாலிக்கும் சென்னைக்குமிடையில் பயணிகள் விமானசேவை

பலாலிக்கும் சென்னைக்கும் இடையே பயணிகள் விமான்சேவையை விரைவில் ஆரம்பிக்க இருநாட்டு அரசுகளும் கொள்கையளவில் இணக்கம் கண்டுள்ளன.

பலாலிவிமானநிலையத்தின்ஓடுபாதையைப் புனரமைத்து நீளமாக்கும் பணிகள் தற்போது முடிவடையும் நிலைக்கு வந்துவிட்டன.

இதனையடுத்து சென்னைக்கும் பலாலிக்கும் இடையிலான விமானசேவைகளை ஆரம்பிப்பதற்கு இருநாட்டு அதிகாரிகள் மட்டத்திலும் தீவிரமான பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

பலாலி விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக அறிவித்து சிவில் விமானப் போக்குவரத்துக்குரிய வசதிகளை இலங்கை அரசு ஏற்படுத்தியதும் சென்னைக்கான சேவை ஆரம்பிக்கப்படும் என்று கொழும்பில் உள்ள இந்தியத் தூதரக வட்டாரங்கள் தெரி வித்தன.

புதிய சேவையை அடுத்த மாதம் ஆரம்பிக்க இந்திய அதிகாரிகள் எதிர்பார்க்கின்றனர். (ஸ்ரீ)

# உபபயிர்ச் செய்கைக்கான விதைகள் இந்தியாவிலிருந்து இறக்குமதி

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உப பயிர்ச் செய்கைக்காக ஒரு இலட்சத்து 85 ஆயிரம் கிலோகிராம் விதைகளை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்ய விவசாய அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் கீழ் 50 ஆயிரம் பயறு விதைகள், 75 ஆயிரம் கிலோகிராம் மரமுந்திரிகை விதைகள் மற்றும் 50 ஆயிரம் கிலோகிராம் உழுந்து விதைகளை இறக்குமதி செய்யவுள்ளதாக அமைச்சின் செயலாளர் கே.ஈ. கருணாதிலக குறிப்பிட்டார்.

அத்துடன் 10 ஆயிரம் கிலோகிராம் கௌப்பி விதைகளும் இறக்குமதி செய்யப்படவுள்ளன.

இந்த விதைகள் விவசாய திணைக்களத்தின் ஊடாக கொள்வனவு செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பயிர்ச் செய்கை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இந்த விதைகளை அடுத்த மாதமளவில் இலவசமாக வழங்கவுள்ளதாக செயலாளர் கூறினார்.

இந்த விதைகளின் தரம் குறித்து விவசாயத் திணைக்களம் உறுதிப்படுத்துமென செயலாளர் கே.ஈ.கருணாதிலக குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# நீதிமன்றத்தால் அபராதம்

(கிளிநொச்சி)

தர்மபுரப்பகுதியில் பத்தாயிரத்து 500 மில்லி லீற்றர் கோடாவை தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் ஒருவர் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ. சிவகுமார் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையில் குற்றவாளியாகக் கண்டு 60 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்த தவறின் 6 மாத சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

★ ★ ★ ★ ★

விஸ்வமடுப் பகுதியில் 750 மில்லிலீற்றர் கோடாவை தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ. சிவகுமார் குறித்தநபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையில் குற்றவாளியாகக் கண்டு 10 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் இரண்டு மாத சிறைத்தண்டனையும் வழங்கியதோடு ஏற்கனவே இவருக்கு முற்குற்றம் உள்ளதால் கட்டாயமாக மூன்று மாத கடூழிய சிறைத் தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

★ ★ ★ ★ ★

பரந்தன் கிளிநொச்சிப் பகுதியில் 10 கிராம் கஞ்சாவை தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பெயரில் ஒருவர் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ. சிவகுமார் குறித்த நபரை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ஸ்ரீ-3)

# கொக்குவில் இந்துவின் உயர்தர மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரியின் க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி காலை 9.30 மணிக்கு வழங்கப்படவுள்ளது எனவும் குறித்த மரணவர்கள் பெற்றோருடன் வருகை தந்து அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறும் அதிபர் அறிவித்துள்ளார்.

அத்துடன் மாணவர்கள் நாளை வியாழக்கிழமை கல்லூரிக்கு வருகை தந்து அனுமதி அட்டைகளிலிலுள்ள விபரங்களைச் சரிபார்த்துக் கொள்ளுமாறும் அவர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

# சங்கீத சாகரம் நடைபெறாது

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் எதிர்வரும் 30, 31 ஆம் திகதிகளில் கொழும்பு பல்கலைக்கழக இசைத்துறையினரையும் யாழ்ப்பாண மாவட்ட கலைஞர்களையும் ஒன்றிணைத்து நடாத்த இருந்த சங்கீத சாகரம் என்ற பல் இசை சங்கமம் நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தினால் நடைபெறமாட்டாது என பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆயுர்வேத பாதுகாப்பு சபையின் உறுப்பினர்கள், பிரதேச வைத்தியர்கள் அனைவரையும் நாளை வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு கைதடி சித்த போதனா வைத்தியசாலையில் நடைபெறும் நடமாடும் வைத்திய சேவையில் கலந்து கொள்ளுமாறு நல்லூர் ஆயுர்வேத பாதுகாப்புச் சபைத் தலைவர் கேட்டுக் கொள்கின்றார்.

இதில் பதிவு செய்யப்படாத வைத்தியர்களுக்கான பதிவு நடவடிக்கைகள் நாளையும் நாளை மறுதினமும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

# புதிய நிர்வாக சபை தெரிவு

(கொழும்புத்துறை)

வசாவிளான் புனித யாகப்பர் கோவில் பகுதி மக்கள் மீளக் குடியேறவும் ஆலயத்தை புனரமைப்பு செய்யும் நோக்கிலும் நேற்று முன்தினம் புதிய நிர்வாக சபையொன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதில் தலைவராக அருட்தந்தை அன்ரனி பாலா, செயலாளராக சூசைமுத்து ஆரோக்கிய நாதன், பொருளாளராக யோசப் சதீஸ், உப செயலாளராக எஸ்.சீலன் ஆகியோர் உட்பட 11 பேர் கொண்ட நிர்வாக சபையினர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-51)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யா/பெரியபுலம் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கனகசிங்கம் மண்டபத்தில் பழைய மாணவர் சங்கத் தலைவர் செ. இளங்கோ தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் புதிய நிர்வாக சபைத் தெரிவு இடம்பெறவுள்ளதோடு பாடசாலை அபிவிருத்தி சம்பந்தமான விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளமையால் சகல அங்கத்தவர்களையும் தவறாது சமூகமளித்து உதவுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-6)



# விடுதலைப்புலிகளின் தலைவர்களை இலங்கை அரசிடம் ஒப்படைக்கவேண்டும்

## நோர்வேயிடம் ரோவின் கோரிக்கை

இலங்கையில் விடுதலைப்புலிகளுக்கு உதவியதன் பிரதிபலனை அனைத்து நோர்வே மக்களும் அனுபவிக்க நேர்ந்துள்ளதாகவும் போர்க்குற்றம் மற்றும் பயங்கரவாதத்துடன் தொடர்புடைய விடுதலைப் புலிகளை தற்போதாவது இலங்கை அரசாங்கத்திடம் ஒப்படைக்க வேண்டும் எனவும் பயங்கரவாதத்திற்கு எதிரான நோர்வே அமைப்பின் தலைவர் போல்க் ஆர் ரோவின் தெரிவித்துள்ளார்.

நோர்வேயின் நிதி இலங்கையின் விடுதலைப்புலிகளின் பயங்கரவாதத்திற்காக செலவிட்டுள்ளதாக தெரிவித்துள்ள ரோவின் நோர்வே அரசாங்கம் இலங்கை மக்களிடம் மன்னிப்பு கோர வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

புலிப்பயங்கரவாதிகள் இலங்கையில் தொடர்ந்து தாக்குதல் நடத்திக் கொண்டிருந்த போது நோர்வே அரசாங்கம் சமாதான பேச்சுவார்த்தை குறித்து குரல் கொடுத்து வந்தது. நோர்வே அரசாங்கம் பயங்கரவாதத்திற்கு உதவுவதை நிறுத்தப் போவதாக பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் எனவும் ரோவின் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

# கப்பம் கோரி கல்கிஸையில் கடத்தப்பட்ட மாணவன் மீட்பு

50 இலட்சம் ரூபா கப்பம் கோரி கல்கிஸை பகுதியில் கடத்தப்பட்ட மாணவன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

யக்கல பகுதியில் குறித்த மாணவன் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அவர் தற்போது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கல்கிஸை டெம்ளர்ஸ் வீதியில் அமைந்துள்ள வீடொன்றிற்கு வான் ஒன்றில் வருகை தந்த குழுவினர் குறித்த மாணவனின் தாயை கட்டிப்போட்டுவிட்டு நேற்று முன்தினம் மாலை இந்தக் கடத்தலை மேற்கொண்டதாக பொலிஸார் குறிப்பட்டனர்.

கொழும்பு பிரபல பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் 15 வயது மாணவன் ஒருவனே இவ்வாறு கடத்தப்பட்டிருந்தார்.

குறித்த மாணவனின் தந்தை பிரபல நிறுவனம் ஒன்றில் ஆய்வுப் பணிப்பாளராக பணிபுரிவதுடன் தற்போது சுற்றுலா நிமிர்த்தம் சென்றிருந்ததாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை கைது செய்வதற்கான விசாரணைகளை கல்கிஸைபொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

(ஸ்ரீ-2)

# இந்திய கரையோரப் பிரிவினரால் 13 இலங்கை மீனவர்கள் கைது

(கொழும்பு)

ஒரிசா கடற்பரப்பினுள் சட்டவிரோதமாக நுழைந்த குற்றச்சாட்டின் பேரில் 13 இலங்கை மீனவர்கள் இந்திய கரையோர பிரிவினரால் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளதுடன் அவர்களிடமிருந்து மூன்று மீன்பிடி ரோலர்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

வழமையான ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது இந்த ரோலர்களைக் கண்டு கரையோர பாதுகாப்பு கப்பலான சரங்க இடைமறித்தது. ரோலர்களிலிருந்த 13 மீனவர்கள் கடல் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாக கடல் பொலிஸ் பொறுப்பதிகாரியான பட்டேல் தெரிவித்தார்.

இந்த மீனவர் தடுத்துவைக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்படுவதாகவும் ஏராளமான மீனவர்கள் காணப்பட்ட இந்த ரோலர்கள் குடிவரவு மற்றும் சுங்க அதிகாரிகள், பொலிஸார் ஆகியோரால் அவதானமாக பரிசோதிக்கப்படுவதாக அவர் கூறினார்.

(ஸ்ரீ-2-4)

## கௌரவிப்பு நிகழ்வு

நெல்லியடி கொமர்ஷல் வங்கியில் அருணலு வங்கிக் கணக்கு வைத்திருக்கும் 2010 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் சித்தியடைந்த 42 மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 4 மணியளவில் நெல்லியடி முருகமூர்த்தி ஆலயமண்டபத்தில் வங்கி முகாமையாளர் ஆர் .கஜரூபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக வடமராட்சி கல்வி வலய பணிப்பாளர் வி.செல்வராஜா சிறப்பு விருந்தினராக சிறப்பு விருந்தினராக கொமர்ஷல் வங்கியின் பிராந்திய முகாமையாளர் எஸ். பி. ரஜீவன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-48)

# நாட்டின் தேர்தல் முறைமையை மாற்றியமைக்க வேண்டும்

## சட்டவல்லுநர்கள் கருத்து

(கொழும்பு)

மோசடிகளற்ற தேர்தல் ஒன்றிற்காக நாட்டின் தேர்தல் முறைமையை உடனடியாக மாற்ற வேண்டுமென சட்ட வல்லுநர்கள் குறிப்பிடுகின்றனர்.

தற்போது நடைமுறையிலுள்ள தேர்தல் முறைமை காரணமாக அரசியற் கட்சிகளுக்கு இடையிலும் ஒரே கட்சிக்குள்ளும் மோதல்கள் ஏற்படுவதாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பிரதிஹா மஹாகாமஹேவா தெரிவித்துள்ளார். இதன் காரணமாகவே பலவன் முறைகளும் மோசடிச் சம்பவங்களும் இடம்பெறுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போது நாட்டில் காணப்படும் தேர்தல் முறைமைக்குப் பதிலாக ஜேர்மன் போன்ற நாடுகளில் நடைமுறைப்படுத்தப்படும் தேர்தல் முறைமையை அமைத்தால் தற்போதைய நிலைமைக்கு தீர்வை பெற்றுக் கொள்ள முடியுமென சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சிப்லி ஆசீஸ் கூறினார்.

எவ்வாறாயினும் எமது நாட்டிற்கு பொருத்தக்கூடிய வகையில் அந்த முறையில் சில மாற்றங்கள் ஏற்படுத்தப்படவேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

அரசியல்வாதிகளின் சில நடவடிக்கைகள் காரணமாக தற்போது கர்ணப்படும் தேர்தல் முறையில் மாற்றம் ஏற்படுத்தப்படவில்லை என சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் செயலாளர் சிரேஷ்ட சட்டத்தரணி யு.ஆர் சில்வா குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்ட போதிலும் சில அரசியல்வாதிகள் தமது தேவைகருதி இவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை என அவர் சு-ட்டிக்காட்டினார்.

(ஸ்ரீ-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை




## வள்ளல்கீரை/ கங்குன் (வள்ளைக்கொடி)

Botanical Name: Ipomoea aquatica
Family: Convolvulaceae
English:Knakun

கங்குன் கீரையானது ஓராண்டு அல்லது ஈராண்டு செடியாகும். ஓடிவளரக்கூடியது. ஓடித்தண்டுகளில் கணுக்களில் வேர்களைக் கொண்டிருக்கும். இலைகள் தனியிலை, ஒன்றுவிட்ட இலையமைப்பை கொண்டது. 5 தொடக்கம் 12 செ.மீ நீளமும் 4.5 தொடக்கம் 7 செ.மீ அகலமும் உடையது. இதன் இலைகள் நீள்வட்டமாக இருக்கும். இலைகளை விட இலைக்காம்பு நீண்டதாக இருக்கும். நீரில் பயிராகும் கொடி. நீரின் மீது நீண்டு ஓடும். இதன் பூக்கள் ஒழுங்கானவை, இருபாலானவை. ஊதா நிறம் கொண்ட பெரியபூக்கள், சதைப்பிடிப்பான பழங்கள், விதைகள், மென்மையான உரோமங்களை கொண்டது. பூக்களை ஆவணி தொடக்கம் கார்த்திகை மாதம் வரை அவதானிக்கலாம்.

**பரம்பலும் இனவிருத்தியும்:**

மழைக்காலத்தில், வயல் வெளிகளிலும் வாய்க்கால்களிலும் வாய்க்கால் அருகிலும் படர்ந்து வளரும் ஒரு கொடியாகும். சில வேளை நெல்வயல்களில் களையாக பற்றிபடர்ந்திருக்கும். ஈரலிப்பான சொற்ப நீருள்ள உலர்ந்த பிரதேசங்களில் பரம்பல் அதிகமாகக் காணப்படும். விதைகள் மூலம் இனவிருத்தி செய்யலாம்.



**100கிராம் கங்குனிலுள்ள சத்துக்கள்:**

ஈரலிப்பு- 90.3கிராம்
புரதம்-2.9 கிராம்
கொழுப்பு-0.4 கிராம்
நார்ப்பொருள்-1.2கிராம்
காபோவைதரேற்-3.1கிராம்
கல்சியம்-110மி.கிராம்
பொசுபரசு-46மி.கிராம்
இரும்பு 3.9 மி.கிராம்
β கரோட்டின்-1980மைக்கிரோகிராம்
தயமின்-50 மைக்ரோகிராம்
றைபோபிளேவின் -130 மைக்ரோகிராம்
நியாசின்-0.6 மில்லிகிராம்
விற்றமின் C -137மி.கி

**மருத்துவப்பயன்கள்:-**

✷ இதன் இலைகளை கறிசமைத்து உண்டுவர தேகத்திற்கு குளிர்ச்சி, புஷ்டி, கண்ணொளி என்பவற்றைக் கொடுக்கும்.

✷ பாலூட்டும் தாய்மார் இதனை உண்டுவந்தால் தாய்ப்பால் சுரப்பதை அதிகரிக்கச் செய்யும். அதனால்தான் வள்ளல் தாய்போல் பிள்ளையை வளர்க்கும் எனப்படும். எனவே கிடைக்கும் போதெல்லாம் வள்ளல் கீரையை உணவில் சேர்த்து கொள்வது மிகுந்த நன்மையைக் கொடுக்கும்.

✷ இதன் கீரையை 40 தொடக்கம் 50 நாட்களுக்கு தொடர்ச்சியாக சமைத்துண்ண நீரிழிவு நோய்நீங்கும். இதன் பூமொட்டுக்களை தேசிப்புளி விட்டரைத்து வட்டக்கடிக்கு பூசலாம்.

✷ 35 கிராம் இலையுடன் 5கிராம் துளசி இலையை கலந்து பச்சையாக உண்ணலாம். இதற்கு நீரிழிவு தீரும்.

✷ கங்குன் கீரை தேவையான அளவு, பெருச்சீரகம் 1/2 தேக்கரண்டி, தேங்காய்த்துருவல் 1/2 மூடி,மல்லி 3தேக்கரண்டி, வெந்தயம் 1/2 தேக்கரண்டி, வெங்காயம் பொடியாக நறுக்கியது 1/2 கப், சிறிய மஞ்சள் துண்டு, தேவையான உப்பு முதலில் இலையை கழுவி அம்மியில் மல்லி, மஞ்சள் இவற்றை பட்டுப்போல் அரைத்து பின்பு தேங்காய், பெருஞ்சீரகம் வைத்து அரைக்கவும். பின்னர் அம்மியை கழுவி அரைத்த விழுதை அரிசிகளைந்த நீரில் கரைத்து அதில் உப்பு போட்டு அடுப்பில் வைத்து கொதிக்க விடவும். கொதிவந்ததும் வெங்காயம் போடவும். நன்கு கொதித்து கீரை, வெங்காயம் வெந்ததும் இறக்கும் சமயம் வெந்தயம் போடவும். 5நிமிடம் கழித்து இறக்கி விடவும். கங்குன்கீரை சூப் ஆனது நீரிழிவு நோயாளிகளுக்கு சிறந்தது. தாய்ப்பாலூட்டும் தாய்மாரும் அருந்தலாம். மலச்சிக்கல் நீங்கும்.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர் சித்த மருத்துவத்துறை
யாழ். பல்கலைக்கழகம் கைதடி

# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை
# 2011 (ஆகஸ்ட்) மாதிரி வினாத்தாள்

ஆசிரியர் :- புண்ணியாமீன்

பகுதி - II

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

(1)

நவயுக ஆடைகளின் நாயகன்
கடந்த இரு தசாப்தங்களாக
தலைநகரில் தலை நிமிர்ந்து நிற்கிறது
**ஸ்ரீலதா துணியகம்**
நீங்கள் அழகானவர்கள், ஆடையில்லாதவன் அரைமனிதன்.
ஆள் பாதி ஆடை பாதி என்பார்கள்.
உங்கள் மேனியழகை மேலும் மெருகூட்ட நாடுங்கள் - ஸ்ரீலதா துணியகம் நங்கையர்களே.
உங்கள் எண்ணம் போல் வண்ண வண்ண ஆடைகளைத் தெரிவு செய்ய நீங்கள் தேர்ந்தெடுக்க வேண்டிய ஒரே இடம்.
இந்தியா, சிங்கப்பூர், மலேசியா நாடுகளிலிருந்து தருவிக்கப்படும் சகல வயதினருக்கும் ஏற்ற ஆடைகளை ஒரே தடவையில் தெரிவு செய்ய... ஒரே ஒரு முறை விஜயம் செய்யுங்கள். எமது குளிரூட்டப்பட்ட காட்சியறைக்கு.

1ம், 2ம் வினாக்களில் சரியான விடையின் கீழ் கோடிடுக.

01. மேலே கூறப்பட்டுள்ள விபரணம்
1. ஒரு அறிவுறுத்தலாகும். 2. ஒரு விளம்பரமாகும்
3. ஒரு சுவரொட்டியாகும்

02. மேலுள்ள விபரணங்களின்படி கூறப்படுவது
1. அங்கு சகல விதமான பொருட்களும் விற்பனைக்கு உண்டு
2. வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்படும் துணி வகைகள் மாத்திரம் விற்பனைக்கு உண்டு.
3. சகலருக்கும் ஏற்ற ஆடைவகைகள் விற்பனைக்கு உண்டு.

03. மேலுள்ள விபரணத்திலிருந்து பின்வருவனவற்றுக்கு விடை எழுதுக.
1. பழமொழி ஒன்று ....................................
2. அடுக்குத் தொடர் ஒன்று ....................................
3. பெயராகவும், வினையாகவும் வரக்கூடிய சொல் ஒன்று ...............

04. பின்வரும் சொற்றொடர்களால் குறிக்கப்படும் கருத்தை எழுதுக.
1. ஆடை இல்லாதவன் அரை மனிதன்
....................................................................
2. இரு தசாப்தங்களாக ....................................
3. மெருகூட்டல் ....................................

05. பின்வரும் இரு சொற்களாலும் ஒரே கருத்தைப் புலப்படுத்தக்கூடிய சொல் ஒன்றை மேலுள்ள விபரணத்திலிருந்து தெரிவு செய்து எழுதுக.
1. உடல் - மெய் ....................................
2. பெண் - மங்கை ....................................
3. முறை - தரம் ....................................

06. நங்கை எனும் சொல்லின் எதிர்ப்பதத்தை எழுதுக. ...............

(2) கடிதம் ஒன்றை தபாலிடுவதற்காக தபால் நிலையத்திற்குச் சென்றிருந்த குமரேசனின் கண்களுக்கு ஆங்கிலத்தில் எழுதப்பட்ட பெயர்ப்பலகைகள் தென்பட்டன. அவற்றின் தமிழ்க் கருத்தை எழுதுக.

01. 1. POST MASTER ....................................
2. TELEPHONE CALLS ....................................
3. MONEY ORDER ....................................
4. STAMP ....................................

02. முத்திரை வாங்குவது, கடிதம் தபாலிடுவது தவிர்ந்த தபால் நிலையம் ஒன்றிலிருந்து நம்மால் பெற்றுக்கொள்ளக் கூடிய சேவைகள் இரண்டு எழுதுக.
.................................... ....................................

03. வீடுகளுக்குக் கடிதங்களை விநியோகிக்கும் ஊழியர் எப்பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றார்?
....................................

04. அவர் அணிய வேண்டிய சீருடையின் நிறம் என்ன?
....................................

05. சில அரசசார்பான கடிதங்களில் தபால்தலை ஒட்டப்படாமல் அ.ப.எனும் இரு எழுத்துக்கள் இடம்பெறுகின்றன. அ.ப என்பதன் சுருக்கத்தை விரித்து எழுதுக.
....................................

06. கடிதங்களை அனுப்புவதற்காகச் சிலர் மேலதிகமாகப் பணம் கட்டி பதிவுத் தபாலில் அனுப்புகின்றனர். பதிவுத் தபாலில் கடிதம் அனுப்புவதனால் ஏற்படும் நன்மை ஒன்று எழுதுக.
....................................


(3) என்னிடம் 376 முத்திரைகள் இருந்தன. அவற்றில் $\frac{1}{4}$ பங்கு வெளிநாட்டு முத்திரைகள் எனின், என்னிடமுள்ள உள்நாட்டு முத்திரைகள் எத்தனை?
....................................

(4) 1 லீற்றர் 500 மில்லி லீற்றர் பாணியின் விலை 120 ரூபா எனின், 1 லீற்றர் பாணியின் விலையைக் காண்க?
....................................

(5) $\frac{7}{10}$ என்பதைத் தசமத்தில் எழுதுக. ....................

(6) மு.ப 11.00 மணிக்கு வீட்டை விட்டு வெளியேறிய சுந்தரம் தனது பயணத்தை முடித்துக் கொண்டு மீண்டும் வீடு வந்து சேர பி.ப 6.30 மணியானது. சுந்தரம் வெளியே கழித்த காலம் எவ்வளவு?
........... மணித்தியாலம் ........... நிமிடம்

(7) ஒரு வியாபாரி முதல் தர தேயிலையில் 4 கிலோகிராம், தரம் குறைந்த தேயிலையில் $1\frac{1}{2}$ கிலோகிராம் வாங்கி ஒன்றாகக் கலந்தான். பின்பு அவற்றை 250 கிராம் கொண்ட சிறிய பக்கற்றுக்களில் அடைத்தான் எனின், அவன் தயாரித்த தேயிலைப் பக்கற்றுக்கள் எத்தனை?
....................................

(8)



இவ்வுருவின் சுற்றளவைக் காண்க.
.................... சென்றிமீற்றர்

(9) பின்வரும் பாடலை வாசித்தபின் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

கல்லைச் சிற்பி கண்டனன்
கண்ணைக் கவரும் சிற்பமாய்
கல்லை மாற்றி அமைத்தனன்
கண்ட மக்கள் போற்றினர்

மண்ணைக் குயவன் கண்டனன்
தண்ணீர் வைக்கும் பானையாய்
மண்ணை நொடியில் மாற்றினன்
மக்கள் தாகம் தீர்த்தனர்.

01. மேற்படி பாடலில் கூறப்பட்டுள்ள இரண்டு தொழில்களும் யாவை?
1. .................................... 2. ....................................

02. அவ்விரு தொழில்களுக்கும் தேவையான உபகரணங்கள் யாவை?
1. சிற்பிக்கு ....................................
2. குயவனுக்கு ....................................

03. பின்வரும் சொற்களுக்குரிய ஒத்தகருத்துச் சொற்களை எழுதுக?
1. சிற்பம் ....................................
2. நொடியில் ....................................

04. பின்வரும் சொற்களுக்குரிய எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுக.
1. போற்றினர் ....................................
2. தண்ணீர் ....................................

05. மண்ணைக் குயவன் கண்டனன் எனும் வாக்கியத்தில்
1. எழுவாய் எது? ....................................
2. செயற்படுபொருள் எது? ....................................

# ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படவே த.தே.கூட்டமைப்புக்கு மக்கள் அங்கீகாரம்

## அமைச்சர் டலஸ் அழகப் பெரும

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து தமிழ்மக்களின் உண்மையான பிரச்சினைகள் தொடர்பில் பொறுப்புடன் செயற்படுவதன் ஊடாகவே உள்ளூராட்சி மன்றத் தேர்தல்மூலம் வடக்கு மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அங்கீகாரம் வழங்கியிருப்பதாக அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பாக விடுத்திருக்கும் ஊடக அறிக்கையில் டலஸ் அழகப்பெரும இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

கடந்த 23ஆம் திகதி நடைபெற்று முடிந்த 65 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலின் முடிவுகள் இலங்கைக்கு பல்வேறு சுப மானமுடிவுகளைப் கொண்டு வந்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டணி அரசாங்கத்தின் மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கை அணுவளவேனும் குறையவில்லை என்பது அவற்றில் முதலாவதாகும். அது வரலாறு காணாதவாறு மென்மேலும் அதிகரித்திருக்கிறது.

அடுத்ததாக தேர்தல் கண்காணிப்பாளர்கள் தொடக்கம் நாட்டின் அரசியல் தொடர்பாக ஆர்வம் காட்டும் அனைவரும் இது சுதந்திரமானதும் நீதியானதும் மட்டுமல்லாது ஜனநாயகம் முழுமைபெற்ற தேர்தல் என்பதை ஏற்றுக்கொண்டுள்ளன.

இவற்றில் மூன்றாவது விடயமாக 1983 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 23 ஆம் திகதி அரச பயங்கரவாதத்துடன் ஆளுங்கட்சியின் பண்பாடற்ற அரசியல் செயற்பாட்டின்மூலம் ஆரம்பித்த இலங்கை வரலாற்றில் அழிக்க முடியாத இனமற்றும் அரசியல் கரும்புள்ளியான 1983 ஆம் ஆண்டு கறுப்பு ஜுலை ஊடாக வடக்கு மக்களிடமிருந்து அபகரிக்கப்பட்ட சகல ஜனநாயக உரிமைகளையும் அதன் 28 வருடங்கள் பூர்த்தி தினத்தன்று அதாவது 2011 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 23ஆம் திகதி அன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் வடக்கு தமிழ் மக்களிடம் மீண்டும் வழங்கப்பட்டுள்ளது.

அடுத்ததாக இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 18 சபைகளின் அதிகாரத்தை கைப்பற்றியதற்கு அப்பாற்பட்ட அரசியல் பொறுப்பையும் நம்பிக்கையையும் வடக்கு தமிழ் மக்கள் அக்கட்சியினருக்கு வழங்கியிருப்பது இதன்மூலம் புலனாகிறது.



இதற்கமைய இதிலிருந்து அக்கட்சியினர் தேசிய அரசியலில் செயற்பாட்டு ரீதியாக இணையவேண்டும். அத்துடன் பொறுப்புடன் செயற்பட்டு இன நல்லிணக்கத்துக்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றுவதற்கான அனுமதி அவர்களுக்குக் கிடைத்துள்ளது.

ஆகவே இந்தத் தேர்தலிலே கிடைத்த மக்கள் ஆணையை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் சரியாக இனங்கண்டு செயற்படுவார்கள் என்று நம்புகின்றோம். அத்துடன் இலங்கை பற்றி மேற்கத்தேய கருத்தியல் என்ன கூறினாலும் ஜனாதிபதி தலைமையிலான கூட்டணி அரசாங்கம் மீது மக்கள் கொண்டிருக்கும் அபரிமிதமான நம்பிக்கையை வடக்கு, தெற்கு மக்கள் மீண்டுமொருமுறை சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக் காட்டியுள்ளனர்.

அதுமட்டுமல்லாத உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வடக்கில் 3 சபைகளின் அதிகாரத்தை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு வழங்க அம்மக்கள் எடுத்த தீர்மானத்தின் மூலம் கடந்த 1975 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நகர முதல்வர் அல்பிரட் துரையப்பா படுகொலை செய்யப்பட்டதுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு இல்லாமல் போன அரசியல் அதிகாரத்தை மீண்டும் அந்த மக்களே கட்டியெழுப்ப எடுத்திருக்கும் முயற்சி இதில் புலனாகிறது என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# மாவட்ட மட்டத்தில் பொருளாதார மத்திய நிலையங்களை அமைக்க அரசு நடவடிக்கை

நாட்டின் சகல மாவட்டங்களிலும் கிராமிய அபிவிருத்திப் பணிகளுக்கு முன்னுரிமை கொடுக்குமாறு ஆலோசனை வழங்கியிருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மாவட்ட அடிப்படையில் பொருளாதார மத்திய நிலையங்களை அமைப்பதில் கூடுதல் கவனம் செலுத்துமாறு அறிவுறுத்தியுள்ளார்.

அநுராதபுர மாவட்டத்தில் நடைபெறவிருக்கும் தேசத்துக்கு மகுடம் கண்காட்சிக் கூடத்தை பார்வையிடச் சென்ற வேளையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

6 ஆவது தேசத்துக்கு மகுடம் கண்காட்சி அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி சுதந்திர தினத்தன்று அநுராதபுரம் ஓயமடுவ பிரதேசத்தில் நடைபெற ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த முன்னேற்பாட்டுநடவடிக்கைகளை அவதானிப்பதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் அப்பகுதிக்கு விஜயம் செய்தார்.

அதன் போது அதிகாரிகள் மத்தியில் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ராஜபக்ஷ இந்தக் கண்காட்சிக்குச் சமாந்தரமாக அநுராதபுர மாவட்டத்தின் கிராமங்கள் தோறும் அபிவிருத்திப் பணிகளையும் முன்னெடுக்க நடவடிக்கை எடுக்குமாறு பணிப்புரை வழங்கினார்.

எதிர்காலத்தில் நாட்டின் சகல பகுதிகளிலும் கிராமிய மட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அத்துடன் மாவட்ட மட்டத்தில் பொருளாதார மத்திய நிலையங்களை அமைத்து பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட வேண்டும். இதற்கான பொறுப்பை தாம் அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவிடம் ஒப்படைத்திருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இதன் போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய, ஜனாதிபதியின் யோசனைக்கமைய கிராமிய அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் மாவட்ட அடிப்படையிலான பொருளாதார மத்திய நிலையங்களை அமைப்பது தொடர்பில் ஆலோசனைகள் இடம்பெற்று வருவதாகவும் குறிப்பிட்டார்.

எதிர்வரும் சுதந்திர தினக் கொண்டாட்டம் அநுராதபுரத்தில் இடம்பெறவிருக்கும் நிலையில் அதற்குச் சமாந்தரமாக தேசத்துக்கு மகுடம் 6 ஆவது கண்காட்சிக்கான ஏற்பாடுகள் ஓயமடுவவில் 2 ஆயிரத்து 600 ஏக்கர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதியுடன் அமைச்சர் எஸ். எம். சந்திரசேன, பிரதியமைச்சர் ஏர்ள் குணசேகர, பாராளுமன்ற உறுப்பினர் அசங்க சேமசிங்க உட்பட மாகாண மட்ட அரசியல் பிரதிநிதிகளும் பங்கேற்றனர். (ஸ்ரீ-2)


# தீவிர அரசியலில் இறங்க ஹேமா பிரேமதாச தீர்மானம்

## ரணில் தரப்பினர் பெரும் நெருக்கடியில்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் மனைவி ஹேமா பிரேமதாச விரைவில் தீவிர அரசியலில் இறங்கவிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளது. தற்போது வெளிநாட்டில் வசித்துவரும் ஹேமா பிரேமதாச இன்று நாடு திரும்புவார் எனவும் அதன் பின்னர் அவரது மகன் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவாக தீவிர அரசியலில் ஈடுபடுவார் எனவும் அவருடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

அவர் நாடு திரும்பிய பின்னர் அரசியல் நடவடிக்கைகள்ளை எவ்வாறு முன்னெடுப்பது என்பது தொடர்பாக முக்கிய கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளன. பிரேமதாச குடும்பத்துக்கு நெருக்கமான பலர் இந்தக் கலந்துரையாடல்களுக்காக அழைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



சஜித் பிரேமதாசவின் கோட்டை எனக் கருதப்படும் அம்பாந்தோட்டை மாவட்டத்தீலிருந்தே ஹேமா பிரேமதாசவின் அரசியல் செயற்பாடுகள் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேள்ளை ஹேமா பிரேமதாச நாடு திரும்பி அவரது மகனுக்கு ஆதரவாக தீவிர அரசியலில் ஈடுபடப் போவதாக அறிவித்திருப்பது ஐ.தே.க.தலைவர் ரணில் விக்ரமசிங்க பிரிவினருக்குப் பெரும் நெருக்கடியைக் கொடுப்பதாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களில் ஐ.தே.க. படுதோல்வியடைந்திருக்கும் நிலையில் அதற்கான பொறுப்பை கட்சித் தலைவர் என்ற முறையில் ரணில் விக்ரமசிங்கவே ஏற்றுக் கொள்ள வேண்டும் என கட்சிக்குள் அழுத்தங்கள் அதிகரித்திருக்கும் நிலையிலேயே பிரேமதாச குடும்பத்தினர் தமது அரசியலைத் தீவிரப் படுத்தவுள்ளார்கள் என்பது கவனிக்கத்தக்கது. (ஸ்ரீ-2)

# மக்கள் மீள்குடியேற்றப்படாமையால் அரச அலுவலகங்கள் ஸ்தம்பிதம்

(கொழும்பு)

கடந்த 2006 ஆம் ஆண்டில் அசாதாரண நிலை காரணமாக சம்பூர் பிரதேச கிராமங்களை விட்டு வெளியேறிய மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்படாமையால் சம்பூரில் இயங்கிய பல அரச அலுவலகங்களும் பிற இடங்களில் இயங்குகின்றன.

சில அரச அலுவல்கள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. சில அரச அலுவல்கங்கள் மூடப்படும் நிலைக்குள்ளாகியுள்ளன.

சம்பூர் கமநல சேவைகள் நிலையம் அயற் கிராமமான கட்டைப் பறிச்சான் கிராமத்தில் இயங்குகின்றது.

சம்பூரில் பிரதேசத்திற்கான விவசாயிகள் முன்மாதிரி செய்கை நிலையம் கட்டைப் பறிச்சான் கிராமத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தில் இயங்குகின்றது.

சம்பூர் மகா வித்தியாலயம், சம்பூர் ஸ்ரீ முருகன் வித்தியாலயம் ஆகியவை சேனையூர் மத்திய கல்லூரி கட்டடத்தில் இயங்குகின்றன.

கூனித்தீவு நாவலர் வித்தியாலயம், சூடைக்குடா பாரதி வித்தியாலயம் ஆகியவை கிளிவெட்டி கிராமத்தில் தற்காலிக கொட்டில்களில் இயங்குகின்றன.

பொது சுகாதார உத்தியோகத்தர் அலுவலகம் கட்டைப் பறிச்சான் கிராமத்தில் இயங்குகின்றது. சம்பூர் கிராமிய வைத்தியசாலையும் கட்டைப்பறிச்சான் கிராமத்தில் இயங்குகின்றது.

மூதூர் பிரதேச சபையின் சம்பூர் உப அலுவலகம் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. இவ் அலுவலகத்தில் பணியாற்றிய ஊழியர்கள் மூதூர் பிரதேச சபை அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டு அங்கு பணிபுரிகின்றனர்.

மணற் சேனையில் தற்காலிகமாக இயங்கிய தபால்அலுவலகம் மூடப்பட்டு விட்டது. இங்கு தற்காலிகமாக இயங்கிய சம்பூர் தபால் அலுவலகத்தில் பணிபுரிந்த ஊழியர்கள் மூதூர் பிரதேச தபால் அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டு அங்கு பணிபுரிகின்றனர்.


மூதூர் பிரதேச பல நோக்குக்கூட்டுறவுச் சங்கம், சம்பூர் கூனித்தீவு கிளை பண்டக சாலைகள் இயங்குவதில்லை.

இங்கு பணிபுரிந்த ஊழியர்கள் மூதூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க அலுவலகத்தில் பணிபுரிய இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# உற்றறி கோட்பாடு


## பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவுப் பேருரை

08



பேராசிரியர் சபா ஜெயராசா

### உற்றறிகோட்பாடு, இலக்கியங்களை விளங்கிக்கொள்வதற்குரிய வழிமுறையாதல்



பேராசிரியர் சு.வித்தியானந்தன்

**வாசகரும் கட்டுமானக் குலைப்பும்**

வாசகருடைய கருத்துக்கள் ஒரு நூலியத்துக்குரிய பல்வேறு வாசிப்பு செயற்பாட்டை உளப்பகுப்பியற் கண்ணோட்டத்தில் விளக்குகின்றன. ஒவ்வொருவரதும் நனவிலி மொழியமைப்பு வேறுபடுவதனால் குறிப்பிட்ட ஓர் இலக்கியத்துக்குப் பல்வேறு பொருள் கொள்ளும் வாய்ப்பு ஏற்படுக்கின்றது.

வாசகரை முதன்மைபடுத்தும் கோட்பாட்டை பார்த் முன் வைத்தார். "நூலாசிரியரின் இறப்புப்" பற்றிய மொழிவை அவர் முன் வைத்தார்.(Barthes,1977) அமைப்பு வாதம் நூலியத்தை நடுநாயகமாகக் கொண்ட (Text Centred) அணுகுமுறையை வலியுறுத்தியது. அவ்வாறு வலியுறுத்திய வேளை நூலியத்தை மீள் வாசிப்பு செய்வதற்குரிய வழியையும் திறந்து விட்டது. கருத்துக் கொள்வதற்குரிய செயலமைப்பின் மீது அது கவனம் செலுத்தியமை நூலியத்தைத் தகர்ப்பதற்குரிய செயலுக்கும் வழியமைத்தது.

வாசிப்பு என்பது வாசகர்களுடைய வெவ்வேறுபட்ட பொருள் கோடலுக்கு இடமளிப்பது மட்டுமன்றி கால வோட்டத்திலும் வெவ்வேறுபட்ட பொருள் கோடலுக்கும் இடமளிக்க வல்லது. வாசிப்புச் செயல்முறை நிலைத்தது அன்று. அது இயக்கமுள்ள ஒரு செயல் முறை. (dynamic prcess) இன்னொரு விதமாக கூறுவதானால் அது நீர்ம்மை (Fluid) இயல்புடையது. இவற்றை அடியொற்றியே நூலியத்தின் கட்டுமானக் குலைப்பு அல்லது தகர்ப்பு (Deconstructing The Text) பிறிதொரு கண்ணோட்டத்தில் விளக்கப்படுகின்றது.

தெரிதா "வேற்றமைவு"(Diffranc) என்ற எண்ணக் கருவை இத்துறையிலே முன்வைக்கின்றார். (Derrida, 1982:27) ஒரு குறிப்பீட்டிலிருந்து மற்றைய குறிப்பீடு எண்ணிறைந்த வகையிலே வேறுபடுதலை அது புலப்படுத்துகின்றது. அவ்வாறான வேறுபாட்டுத் தொகுதியால் மொழி உருவாக்கப்படுகின்றது. வேறுபட்டுச் செல்கையில் அதற்குரிய கருத்தும் உறுதிகுலைந்து விடுகின்றது. மேற்கூறிய கருத்தமைவை அடியொற்றியே அவர் கட்டுமானக் குலைப்பு என்ற செயற்பாட்டை விளக்குகின்றார்.

வாசிப்பு செயற்பாடு அகவயப்பட்ட செயற்பாடாக இருக்கும் நிலையில் வாசகரின் அகநிலைக்கும் அனுபவநிலைக்கும் ஏற்ற வகையிலே பொருள் கோடலும் பற்பல நிலைகளாகவும் கிளைகளாகவும் விரிவு பட்டுச் செல்லும் வாய்ப்பு ஏற்படுக்கின்றது.

**பெண்ணிய உற்றறிகை**

1. சமூகத்தின் கட்டுமை செய்யப்பட்ட பால் நிலைத்தொடர்புகளை மாற்றியமைத்தலும் அதற்காக வினைப்படலும்

2. பெண்களின் அனுபவங்கள் நேர் நிலையிலும் எதிர் நிலையிலும் கலை இலக்கியகளில் எவ்வாறு புனையப்பட்டுள்ளன என்பவற்றைக் கண்டறிதலும் மீள்வாசிப்புக்கு உட்படுத்துதலும்.

3. நடப்பியலில் உள்ள அதிகாரக் கட்டமைப்பையும் அதன் பின்புலமாக அமையும் அரசியலையும் மாற்றியமைத்தல்.

4. பண்பாட்டில் ஊடுருவி உட்பொதிந்துள்ள ஆண் ஓங்கற் செயற்பாடுகளுக்கு எதிரான வினைப்பாடுகளை முன்னெடுத்தல்.

5. மொழி நிலையில் ஆண் ஓங்கற் கட்டுமானங்களை இனங்காட்டுதலும் மாற்றியமைத்தலும்.

6. கல்வி, தொழில், முகாமைத்துவம், அரசியல் என்ற அனைத்து நிலைகளிலும் பால் நிலைச் சமத்துவத்தை முன்னெடுத்தல்.

1960 ஆம் ஆண்டைத்தொடர்ந்து பெண்ணியத்தின் இரண்டாம் அலை (Second Wave)தோற்றம் பெற்றது. அதன் வெளிப்பாடாகப் பெண்ணியத் திறனாய்வில் பின்வருவன குவியமாக்கப்பட்டன.

1. பெண்களின் எழுத்தாக்கங்கள் வெளியீட்டாளர்களால் தவிர்க்கப் பட்டமையும் உயர்கல்விப் புலமை நிலையில் பெண் ஆய்வுகள் புறக்கணிக்கப்பட்டமையும் என்ற நடப்பியல் நிலவரங்களை வெளிப்படுத்துதல்.

(தொடரும்)

# மனதை பிரயோகித்தல்



**ஆன்மீகம் 01**

மனதை ஏன் சர்க்கஸ் கூடாரம் என்கிறோம்? அது குழப்பமாகத் தோன்றினாலும் பலவிதமான செயல்களின் நேர்த்தியான ஒருங்கிணைப்பாகும். சர்க்கஸ் என்பது ஒரு நிலையில் குழப்பமாகவும் மற்றொரு நிலையில் செயல்களின் அதிகபட்ச ஒருங்கிணைப்பாகவும் உள்ளது. மனதின் அல்லது மூளையின் செயற்பாடுகளைக் கண்டறிய பல ஆராய்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. மூளையின் நியூரான்கள் பாயும் விதத்தைப் பார்த்தால் அதில் தெளிவும், ஒழுங்கும் இருக்கின்றன. அந்தத் தன்மை உடலின் இயக்கமாக மாற்றமடைகின்றது. மூளையின் நியூரான்கள் நடத்தும் ஒருங்கிணைந்த நாட்டிய நாடகத்தின் விளைவாகத்தான் உடலுக்குள் கோடிக்கணக்கான விடயங்கள் நடக்கின்றன. ஆனால், துரதிருஷ்டவசமாக பெரும்பாலான மனிதர்கள் அனுபவத்தில், மனம் என்பது குழப்பமாகவே உள்ளது: எனவே மனம் ஒரு சர்க்கஸ்தான். சர்க்கஸில் உள்ள இரண்டு அம்சங்களும் மனதிலும் இருக்கின்றன. அங்கிருக்கும் கோமாளிகூட தேர்ச்சி பெற்ற வித்தைக்காரர்தான். வெளித் தோற்றத்தில் கோமாளியாக இருந்தாலும் அசாத்திய திறமையுடனும் செயல்களில் சமநிலையோடும் இருப்பார். பெரும்பாலான மனிதர்களுக்கு மனதின் செயல்பாடுகள் இப்படித்தான் இருக்கின்றன.

மனம் அதன் வித்தைகளின் மூலம் உங்களை மாபெரும் உயரங்களுக்கு அழைத்துச் செல்ல முடியும். அல்லது உங்களுக்குள்ளேயே நரகங்களையும் உருவாக்க முடியும். எனவே இந்த வித்தையை நீங்கள் எப்படி நடத்தப் போகிறீர்கள் என்பதிலும் அதற்கு எப்படி பொறுப்பேற்கப் போகிறீர்கள் என்பதிலும்தான் எல்லாம் இருக்கிறது. வாழ்க்கையின் அற்புதமான கருவியாகவும், வாய்ப்பாகவும் இருக்கக்கூடிய மனம், துயரங்களை உற்பத்தி செய்யும் இயந்திரமாக மாறியது எதனால்?


மனிதர்களின் எல்லாத் துயரங்களும் மனதில்தான் உருவாகின்றன. ஒருவருக்கு இனிமையாக இருக்கக்கூடிய மனம், மற்றொருவருக்கு தாங்க முடியாத வேதனையாக இருக்கிறது. இந்த மனக்குழப்பத்தைச் சமாளிப்பதற்காக மனிதர்கள் விதம் விதமான மாற்று வழிகளையும் மனவக்கிரங்களையும் கண்டுபிடித்துள்ளனர். இந்த வக்கிரங்கள் அவர்களுக்கு தற்காலிக விடுதலையையே அளிக்கின்றன. ஆனால் சில காலங்களுக்குப் பின்னர் மனக்குழப்பங்கள் அதிகமாகி விடுகின்றன. மாற்று வழிகள் நிரந்தரத் தீர்வை அளிக்காது. அறிவானது ஒரு மருத்துவரின் கூர்மையான கத்தியைப் போல் எல்லாவற்றையும் பகுதிகளாப் பிரிக்கும் தன்மையுடையது. அறிவினால்தான் நீங்கள் ஒன்றிலிருந்து வேறொன்றை வேறுபடுத்திப் பார்க்கும் திறமையைப் பெற்றுள்ளீர்கள். அறிவின் காரணமாகவே என்னையும் இந்த இருக்கையையும் வேறுபடுத்திப் பார்க்க முடிகிறது. அதனால்தான் நாம் நுழைவாயில் வழியாகத்தான் அறைக்குள் வர முடியுமென்றும், சுவரின் வழியாக வரமுடியாது என்பதையும் புரிந்து கொள்கிறோம். அறிவின் செயல்பாடு இல்லாமல் உங்களால் எதையும் வேறுபடுத்திப் பார்க்க முடியாது.

அறிவின் மூலமாகத்தான் எல்லாவற்றையும் பிரித்துப் பார்த்து வேறுபாடுகாண முடிகிறது. அறிவானது ஒரு கூர்மையான கத்தியைப் போல் எல்லாவற்றையும் பிரித்துப் பார்த்து புரிந்து கொள்கிறது. கத்தி ஏதோவொன்றை நன்றாக வெட்ட வேண்டுமென்றால் வெட்டப்படும் பொருள் கத்தியில் ஒட்டாமல் இருக்க வேண்டும். இன்று கேக் வெட்டினால் நாளை றொட்டி வெட்டுவீர்கள். மறுநாள் வேறொன்றை வெட்டுவீர்கள். வெட்டப்படும் உணவுப் பொருட்கள் கத்தியில் ஒட்டிக் கொண்டிருந்தால் சில காலத்துக்குப்பின் அந்தக் கத்தி உபயோகிக்க முடியாத ஒன்றாகிவிடும். உணவு சமைப்பவர்களுக்கு இதில் அனுபவமிருக்கலாம். வெங்காயம் நறுக்கிய கத்தியை வைத்து மாம்பழத்தையும், ஆப்பிள் பழத்தையும் நறுக்கினால் இந்தப் பழங்களும் வெங்காயத்தின் சுவையோடுதான் இருக்கும். அதுபோல் உங்கள் அறிவு ஏதாவது ஒன்றோடு தன்னை அடையாளப் படுத்திக் கொண்டால் பின்பு அந்த அடையாளத்துடன் தன்னைப் பிணைத்துக் கொள்கிறது. இதனால் உங்கள் மனதின் அனுவம் முழுவதுமாகச் சிதைந்து விடுகிறது.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# உங்கள் கையில் அருள் ரேகையின் பலன்கள்




ஒருவர் ஆன்மீகத்திலும் எதிர்காலத்தைக் கணித்துக்கூறும் ஜோதிடத்திலும் வல்லவராக திகழவேண்டும் என்றால் அவரது கையில் அருள்ரேகை இருக்க வேண்டும்.

அருள்ரேகை (GH)சந்திரமேட்டின் அடிப்பாகத்தில் உற்பத்தியாகி செவ்வாய் மேட்டைத்தாண்டி புதன்மேடு வரை கையின் ஓரத்தில் வளைந்து செல்லும் ரேகையை அருள்ரேகை என்று அழைப்பார்கள்.

இந்த அருள்ரேகை புத்திரேகை மற்றும் ஆயுள்ரேகையை குறுக்கிட்டுச் செல்லும். செவ்வாய் மேட்டை இந்த அருள்ரேகை முற்றிலும் ஆக்கிரமித்து முன்னேறிச் செல்வதால் இந்த ரேகை அமையப் பெற்றவருக்கு இயற்கையிலேயே வீரமும் அஞ்சா நெஞ்சமும் அமைந்து இருக்கும். தெய்வ பலம் அமைந்தவருக்கே இந்த ரேகை அமையும். முனிவர்கள், சித்தர்கள்,அபூர்வமாக சில மனிதர்களின் கையில் இந்த அருள் ரேகை அமைந்து இருக்கும்.

அருள்ரேகை அமைந்தவரின் கை விரல்கள் நீண்டு முனைகள் கூராக அமைந்து இருக்கும்.

**A,B-இருதய ரேகை, C,D-புத்திரேகை, E,F-ஆயுள்ரேகை, G,H-அருள்ரேகை, I,J-ரேகை**

சந்திரமேடுபெரியதாககாணப்படும். அது போல் புத்திரேகை, சந்திர மேட்டை நோக்கி வளைந்து செல்லும்.

சிலரது கையில் அருள் ரேகையில் இருந்து கிளை உற்பத்தியாகி சூரிய மேட்டுக்குச் சென்றால் அவர் மனோ வசியம் செய்யும் கலையில் தேர்ச்சி பெற்றவராக இருப்பார். பொதுவாக அருள்ரேகை பெற்றவருக்கு சோம்பல் குணம் மேலோங்கி இருக்கும். எதிலும் அதிக கவனம் எடுத்துக் கொள்ள மாட்டார்கள்.


அருள்ரேகை நன்றாக அமைந்து குரு மேட்டில் வளையம் பெற்றவர். ஜோதிடத்தில் புகழ் பெற்று விளங்குவார்கள்.

கை ரேகை சாஸ்திரத்திலும் திறமை பெற்று இருப்பார்கள்.

பிறர் செய்த உதவியை மறக்காத குணம் இவரிடம் உண்டு. அருள்ரேகை கையில் நன்கு அமைந்து இருந்தால் அவரிடம் அபார நினைவு சக்தி இருக்கும்.

## ஜோதிடக் களம்

# சண்டாள யோகம் தரும் பலன்கள்




ஒருவருக்கு ஏற்படும் வைராக்கிய குணத்தைக் கொடுப்பவன் இராகு பகவான். புகழைக் கொடுக்கக்கூடிய கிரகம் இராகு. சாதாரணமாக இருக்கும் ஒருவரை கோடீஸ்வரனாக மாற்றுவது இராகுவின் வேலை. அரக்கனாக இருந்து கிரகபலம்பெற்று பெருமையைச் சேர்த்தவன் இராகுபகவான். அரசாங்க உத்தியோகம் கிடைக்க அருள் புரிபவன் இராகுதான்.

ஒருவரது ஜாதகத்தில் நீச்ச கிரகத்துடன் இராகு சேர்ந்திருந்தால் அவருக்குப் பெரும் யோகம் கிடைக்கும். இராகு யோகத்தையும் கேது ஞானத்தையும் வழங்கும் தன்மை கொண்டவை.

ஒருவரது கையில் புத்திரேகைக்கு அடிப்பாகத்தில் விதிரேகை சந்திக்கும் இடம்தான் இராகு மேடு பகுதியாகும்.

அதுபோல் கங்கணரேகைக்கு மேல் சுக்ரமேடு-சந்திரமேடு ஆகியவற்றுக்கு இடைப்பட்ட பகுதியே கேது மேடாகும்.விதிரேகை இந்தப் பகுதியில் இருந்து உற்பத்தியாகி மேல் நோக்கிச் சென்று கொண்டிருக்கும்.

ஜோதிட சாஸ்திரத்தின்படி இராகு- கேதுக்களுக்கு இராசிச் சக்கரத்தில் சொந்த வீடுகள் இல்லை. அவர்கள் எந்த இராசிவீட்டில் அமர்ந்திருக்கிறார்களோ அந்த வீட்டின் ஆதிக்கத்தை இவர்கள் எடுத்துக் கொண்டு அதற்குரிய பலாபலன்களை கொடுப்பார்கள்.

வலிமை மிக்க இராகு-கேதுக்கள் நல்ல இடத்தில் அமர்ந்து இருந்தால் சுபபலன்களை வாரி வழங்குவார்கள். சில குறிப்பிட்ட காலத்துக்குள் பல இலட்சங்களை எளிதில் சம்பாதிக்க வைக்கும் பலம் நிறைந்தவர் இராகு.

ஞானகாரகன் என்று கூறப்படும் பகவான் மெய்ஞ்ஞான, விஞ்ஞான துறைகளை அடக்கி ஆளக்கூடிய வல்லமை பெற்றவர். பஞ்சபூதங்களில் தண்ணீராக காட்சி அளிக்கும் கேது பகவான் நீச்சமொழியில் தேர்ச்சியைக் கொடுப்பான். பரமசத்ருவான சந்திரன், சூரியனுடன் சேரும்போது பல இன்னல்களை கொடுப்பவர்கள் இராகு-கேது என்றால் மிகையாகாது.

கையில் சந்திரமேடு இணைந்து இருக்கும் கேது ஒருவருக்கு சித்தபிரமை எனப்படும் மனநோயை கொடுக்கும் தன்மை கொண்டது. அதுபோல் ஒருவருடைய ஜாதகத்தில் சந்திரனுடன் சேர்ந்தகேது மனநோயை கொடுப்பதை அறியலாம்.

இதை அறியாத கிராமமக்களில் சிலர் பில்லிசூனியம் என்று விசப்பீடை என்றும் சொல்வதுண்டு. சந்திரனுடன் சேர்ந்தகேது தோல் நோய் சம்பந்தமான பாதிப்புக்களைக் கொடுப்பார்.

**A,B-இருதய ரேகை, C,D-புத்திரேகை E,F-ஆயுள் ரேகை, I,J-விதி ரேகை ●இராகுமேடு, ●கேதுமேடு**

ஜாதகத்தில் இராகு அமர்ந்திருக்கும் 7 ஆவது வீட்டில் கேது அமர்ந்திருப்பார். இருவரும் 18 மாதங்களுக்கு ஒருமுறை இடதுபக்கமாக பெயர்ச்சி ஆவார்கள். இராகு-கேது பெயர்ச்சியின்போது அரசு ஊழியர்களுக்கு இடமாற்றம் ஏற்படுவதும் உண்டு. இதற்குக் காரணம் இராகு அரசாங்கம் தொடர்பான கிரகமாகும்.

இராகுவுக்கு நேர் ஏழாம் வீட்டில் சஞ்சரிக்கும் கேது பகவான் குருவுடன் சேர்ந்து அமையும் போது சண்டாளயோகம் ஏற்படுகிறது. இதனால் திடீர் செல்வம்,செல்வாக்கு, எதிர்பாராத பதவி உயர்வு போன்ற சுபபலன்களை வாரி வழங்குவார்.

குரு திசையில் கேது புத்தி அல்லது கேது திசையில் குரு புத்தி காலத்தில் பெரும் யோகத்தை பெறுவார்கள். சண்டாள யோகம் ஒரு விநோதமான யோகம் ஆகும்.

இராகுவினால் ஏற்படும் பாதிப்புக்களில் ஒன்று மனக்குழப்பம் ஆகும். இதுபோல் சிலருக்கு வாழ்க்கையில் எதிர்பாராமல் ஏற்படும் துயர நிகழ்ச்சி, வியாபாரம் முடங்கிப் போதல் போன்றவை ஏற்படலாம்.

இதுபோன்ற பிரச்சினைகளுக்கு தீர்வாக வைடூரியக்கல் பதித்தமோதிரம் அணியலாம். இந்த வைடூரியக்கல் மஞ்சள் கலந்த கறுப்பு நிறம் உடையது.இதில் கருமை கலந்த வெண்மை நிறமுடைய வைடூரியக் கல்லே சிறந்தது.

# உறுதி மொழிகளை மீறினால் மீண்டும் போராட்டம்

## பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சம்மேளனம் அறிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் வழங்கியுள்ள உறுதிமொழிகளை நிறைவேற்றாது அதனை மீறினால் மீண்டும் தொழிற்சங்க போராட்டம் ஆரம்பிக்கப்படும் என பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனத்தின் தலைவர் கலாநிதி நிர்மல் ரஞ்சித் தேவசிறி தெரிவித்துள்ளார்.

விரிவுரையாளர்கள் எழுச்சியுடன் ஐக்கியமாக இருப்பதால் உறுதிமொழிகளுடன் விளையாடுவது சிறந்ததாக இருக்காது எனவும் அவர் கூறியுள்ளார்.

விரிவுரையாளர்களின் தொழிற்சங்க போராட்டத்தை கைவிடுதல் தொர்டர்பாக ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தும் நோக்கில் நேற்று முன்தினம் கொழும்பு திறந்த பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

விரிவுரையாளர்களின் ஊதிய பிரச்சினை உள்ளிட்ட ஏனைய பிரச்சினைகளுக்கு நீண்ட கால தீர்வை வழங்கும் நோக்கில் கூட்டுக்குழு அமைக்கப்பட்டு யோசனை அமுல்படுத்தப்படும் வரை சம்மேளனம் காத்திருக்கும்.

முன்னர் இணங்கியது போன்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வெளியிட்ட 956 இலக்க சுற்று நிருபத்தை திரும்பப் பெறும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# வடக்கில் மருத்துவ உதவிகளை வழங்க அனுமதிக்குமாறு இந்திய மருத்துவ குழு கோரிக்கை

(கொழும்பு).

தமிழ்நாட்டின் மருந்துவ சங்கம் ஒன்று இலங்கையின் வடபிராந்தியத்தில் தமிழ் மக்களுக்கு உதவிகளை வழங்குவதற்கான கோரிக்கையை விடுத்துள்ளது.

சென்னை மருத்துவ தரப்பினர் இந்த தகவலை வெளியிட்டுள்ளனர்.

சமூக ஒருமைப்பாட்டுக்கான மருத்துவ சம்மேளனம் என்ற பெயர் கொண்ட மருத்துவ குழு இந்திய மத்திய அரசிடம் தமது கோரிக்கையை விடுத்துள்ளது.

வடபிராந்திய மக்களுக்கான தமது சேவையை முன்னெடுப்பதற்கு இலங்கை அரசாங்கத்தின் அனுமதியை பெற்றுத் தருமாறு அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

மருத்துவ நிவாரணங்களை வழங்குவதற்கு தமக்கு இலங்கைக்கு வரவேண்டியிருப்பதாகவும் அந்த சம்மேளனம் தெரிவித்துள்ளது.

அத்துடன் இலங்கைத் தமிழ் மக்களுக்கு மருத்துவ உதவிகளை வழங்குவதற்கு தமக்கு சந்தர்ப்பம் வழங்குமாறு கோரி அவர்கள் சென்னையில் ஆர்ப்பாட்டம் ஒன்றையும் மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மருத்துவர்கள் முன்வைக்கும் இந்த கோரிக்கை தொடர்பில் அரச மருத்துவர்களின் சங்கத்தின் உபசெயலாளர் சங்கல்ப மாரசிங்க தெரிவிக்கையில்,

இதுவரை மேற்கொள்ளப்பட்டு வந்த நடவடிக்கைகளின் அடிப்படையில் வடக்கு மக்களுக்கு மருத்துவ வசதிகளை வழங்குவதற்கு இலங்கை மருத்துவர்களால் இயலும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# போதைப்பொருள் வைத்திருந்த நபருக்கு மரணதண்டனை

போதைப்பொருள் தன்வசம் வைத்திருந்ததாக குற்றம் சுமத்தப்பட்டிருந்த ஒருவர் உரிய சாட்சிகளுடன் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டதை அடுத்து கொழும்பு மேல் நீதிமன்றம் அவருக்கு மரணதண்டனை வழங்கி நேற்று முன்தினம் தீர்ப்பு அளித்துள்ளது.சட்டமா அதிபரினால் குறித்த நபருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

ஹெறோயின் வகை போதைப் பொருள் 543 கிராம் குறித்த நபரிடம் இருந்த போது அவர் கைது செய்யப்பட்டிருப்பதாக பொலிஸ் தரப்பால் நீதிமன்றில் கூறப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றில் விசாரணை செய்யப்பட்டு வந்த நிலையில் நேற்று முன்தினம் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றம் தக்க ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டுள்ளதால் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ப்ரீதி பத்மத் சுரசேன மரணதண்டனை வழங்கி தீர்ப்பளித்தார். (எ)

# மனித உரிமைகள் ஆணைக்குழுவில் எண்ணூறு முறைப்பாடுகள் தேக்கம்

(கொழும்பு)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகளுள் 800 முறைப்பாடுகள் இதுவரையிலும் விசாரிக்காமல் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு வருட காலத்திற்கு அதிகமாக மனித உரிமைகள் ஆணைக் குழுவினது நடவடிக்கைகள் செயற்பாடற்று காணப்பட்டது.

இதன் காரணமாக இந்த ஆணைக்குழுவிடம் அதிகளவிலான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதோடு அவற்றினை விசாரிப்பது தொடர்பில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும் மிக விரைவில் இம் முறைப்பாடுகள் விசாரிக்க எடுக்கப்படவுள்ளதாக கூறப்படுகிறது. இந்த முறைப்பாடுகளை விசாரிக்கும் பொருட்டு 5 நீதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த தகவல்களினை முன்னாள் சிரேஷ்ட நீதிபதி பிரியந்த பெரேரா வெளியிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# இலஞ்சம் வழங்கிய குற்றச்சாட்டில் இலங்கை வர்த்தகருக்கு அபராதம்

## சிங்கப்பூர் நீதிமன்றம் தீர்ப்பு

சிங்கப்பூர் விமான நிலையத்தைச் சேர்ந்த ஊழியர் ஒருவருக்கு இலஞ்சம் வழங்கினார் என்ற வழக்கில் குற்றத்தை ஒப்புக் கொண்ட இலங்கை வர்த்தகர் ஒருவருக்கு சிங்கப்பூர் நாட்டு மாவட்ட நீதிமன்றம் ஒன்று 5000 அமெரிக்க டொலர் அபராதம் வழங்கி தீர்ப்பளித்துள்ளது.

பிரதீப் ரூபசிங்க என்ற இவ் வர்த்தகர் பொருட்களை கொள்வனவு செய்கின்றமைக்காக அடிக்கடி சிங்கப்பூர் செல்வது வழக்கம்.

சிங்கப்பூர் விமான நிலையத்தில் பயணிகள் உதவியாளராக கடமையாற்றுகின்ற வில்லியம் வொங் என்பவருடன் இவர் நெருக்கமானார்.

சிங்கப்பூர் விமான நிலையத்தில் இருந்து பயணம் மேற்கொள்கின்றவர்களின் பொதிகளை சோதனை செய்கின்றமையும் அதிக நிறை உடைய பொதிகளுக்கு உரிய தண்டப் பணம் அறவிடுகின்றமையும் வில்லியம் வொங்கின் பிரதான கடமைகள்.

வொங்கை கைக்குள் போட்டுக் கொண்ட இலங்கை வர்த்தகர் 2008 ஆம் ஆண்டு நடுப் பகுதியில் 300 டொலரும் அதே வருடம் ஒக்டோபர் மாதம் 400 டொலரும் வொங்குக்கு இலஞ்சம் கொடுத்துள்ளார்.

இவர் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொண்டமையால் குறைந்த பட்சத் தண்டனைதான் வழங்கப்பட்டது. இதே நேரம் வொங் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டை ஒப்புக் கொண்டார். இவருக்கும் அபராதம் விதிக்கப்பட்டது. (ஸ்ரீ-2)

# பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலருடன் ரணில் சந்திப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் லியாம் பொக்சை சந்தித்து பேச்சவார்த்தை நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. பொதுநலவாய நாடுகளின் அமர்வுகளில் கலந்து கொள்வதற்காக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தற்போது லண்டனுக்கு விஜயம் செய்துள்ளார்.

பொதுநலவாய நாடுகள் பாராளுமன்றின் செயலாளர் நாயகம் சர்மாவுடனும் ரணில் விக்ரமசிங்க பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இதன்போது பொதுநலவாய நாடுகள் பாராளுமன்றின் எதிர்காலத் திட்டங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் மட்டுமன்றி அரசாங்கத்தின் பல முக்கியஸ்தர்களுடன் ரணில் விக்ரமசிங்க பேச்சுவார்த்தை நடத்துவார் எனக் குறிப்பிடப்படுகிறது.

(ஸ்ரீ-2)




★1214-பிரான்சில் இடம்பெற்ற போரில் இரண்டாம் பிலிப் இங்கிலாந்தின் ஜோனை வென்றான்.

★1549-பிரான்சிஸ் சேவியார் அடிகள் ஜப்பானை அடைந்தார்.

★1627-தெற்கு இத்தாலி நகரான சான் செவேரோவை நிலநடுக்கம் தாக்கியது.

★1794-பிரெஞ்சுப் புரட்சி: புரட்சியின் எதிரிகளாகக் கருதப்பட்ட 17 ஆயிரம் பேரைத் தூக்கிலிட ஆதரித்தமைக்காக மாக்சிமிலியன் ரோப்ஸ்பியர் கைது செய்யப்பட்டார்.

★1862-சான் பிரான்சிஸ்கோவில் இருந்து பனாமா நோக்கிச் சென்று கொண்டிருந்த கோல்டன் கேட் என்ற கப்பல் மெக்சிக்கோவில் தீப்பிடித்து மூழ்கியதில் 231 பேர் கொல்லப்பட்டனர்.

★1865-வெல்சிய குடியேறிகள் ஆர்ஜெண்டீனாவின் arrive in Argentina at சூபூட் பள்ளத்தாக்கை அடைந்தனர்.

★1880-இரண்டாவது ஆங்கில- ஆப்கானியப் போர்: மாய்வாண்ட் என்ற இடத்தில் ஆப்கானியப் படைகள் பிரித்தானியரை வென்றனர்.

★1921-பிரெட்றிக் பாண்டிங் தலைமையில் டொறொண்டோ பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களினால் இன்சுலின் கண்டறியப்பட்டது.

★1929-மூன்றாவது ஜெனீவா உடன்படிக்கை.

★1941-ஜப்பானியர்கள் பிரெஞ்சு இந்தோ- சீனாவைக் கைப்பற்றினர்.

★1953-கொரியப் போர் முடிவு: ஐக்கிய அமெரிக்கா, சீனா மற்றும் வட கொரியா ஆகியவற்றுக்கிடையில் போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட்டது. தென்கொரியா இவ்வொப்பந்தத்தில் கையெழுத்திடாவிட்டாலும் உடன்பாட்டை மதிப்பதாக வாக்குறுதி தந்தது.

★1955-ஆஸ்திரியாவில் மே 9, 1945 முதல் நிலை கொண்டிருந்த இரண்டாம் உலகப் போரின் நட்பு நாடுகளின் படைகள் அங்கிருந்து விலகின.

★1975-யாழ்ப்பாணம் மாநகரத் தலைவர் அல்பிரட் துரையப்பா சுட்டுக் கொல்லப்பட்டார்.

★1983-வெலிக்கடை சிறைச்சாலைப் படுகொலைகள்: கொழும்பு வெலிக்கடை சிறையில் இடம்பெற்ற இரண்டாம் கட்ட படுகொலை நிகழ்வில் 18 தமிழ்க் கைதிகள் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டனர்.

★1990-பெலாரஸ் சோவியத் ஒன்றியத்தில் இருந்து விடுதலையை அறிவித்தது.

★1990-திரினிடாட் டொபாகோவில் இஸ்லாமியத் தீவிரவாதிகள் நடத்திய ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியில் பிரதமர் மற்றும் அமைச்சர்களை பணயக் கைதிகளாக ஆறு நாட்கள் வைத்திருந்தனர்.

★1997-அல்ஜீரியாவில் சி செரூக் என்ற இடத்தில் 50 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

★2002-உக்ரைனின் லுவிவ் நகரில் வான் களியாட்ட நிகழ்ச்சியின் போது போர் விமானம் ஒன்று மக்களின் மீது வீழ்ந்ததில் 85 பேர் கொல்லப்பட்டனர். 100 பேர் காயமடைந்தனர்.

### பிறப்புக்கள்

★1824-அலெக்சாண்டர் டுமாஸ், பிரெஞ்சு எழுத்தாளர் (இ.1895)

★1853-விளாடிமிர் கொரலென்கோ, சோவியத் எழுத்தாளர் (இ.1921)

★1876-தேசிக விநாயகம்பிள்ளை, கவிமணி (இ.1959)

★1879-நாவலர் சோமசுந்தர பாரதியார், தமிழறிஞர் (இ.1959)

★1955-அலன் போடர், ஆஸ்திரேலிய துடுப்பாளர்


### இறப்புக்கள்

★1953-சோமசுந்தரப் புலவர், ஈழத்துக் கவிஞர் (பி. 1878)

★1987-சலீம் அலி, இந்தியப் பறவையியல் வல்லுநர் (பி.1896)

# நவீன எண் சோதிடம்

03



## மனிதனின் வாழ்க்கை பெயரில் அடங்கியுள்ளது

**உடல் எண் 1 உயிர்எண்1**

1,10,19,28 அகிய தேதிகளில் பிறந்து,தேதி, மாதம், வருடம் ஆகியவற்றைக்கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 1 வந்தால்,இவர்கள் பூரண சூரிய ஆதிக்கத்தில் பிறந்தவர்கள். ஓர ளவு உயரமானவர்களாகவும் கண் சிறிது சிவந்தும், அழகாகவும் இருப்பர். இவர்கள் எப்போதும் சிந்தனை செய்து கொண்டி ருப்பதோடு தன் வாழ்க்கையை முன்னேற்றுவதற்குப் புதிய புதிய திட்டங்களைத்தீட்டிக் கொண் டிருப்பர். முன்னேற்றத்தில் ஆர்வம் கொண்ட இவர்களில் சிலர் நெருப்பு சம்பந்தப்பட்ட தொழி லாலும், சாப்பாட்டுப் பொரு ளாலும் இரும்பு, மின்சாரம் சம்பந்தமான தொழிலாலும் உயர்வடைவர். இந்த ஆதிக்கத் தில் பிறந்த பலர் அரசாங்க உத்தி யோகத்தில் இருந்து கொண்டு நாட்டை நிர்வகிக்கும் நிர்வா கிகளாகவும் நல்ல மாணவர்களை உருவாக் கும் ஆசிரியர்களாகவும் அர சாங்க ஊழியர்களாகவும் வாழ் கின்றனர். இவர்களது மனம் எப் பொழுதும் ஒரு நிலை கொள் ளாது இருக்கும். உடல் அதிக உஷ் ணமாக இருக்கும். இதனால் குளிர்ச்சிக்காக என்ன சாப்பிட லாம் என்று யோசைனை செய் வர். தன் திருப்திக்காக செலவு செய்யத் தயங்கமாட்டார்கள்.

நல்ல வாழ்க்கைத் துணைவரை அடையும் இவர்கள் குழந்தை களிடம் அதிக பாசம் செலுத்து பவராக இருப்பர். இளமையிலே் பல இலட்சியங்களைக் கொண்ட இவர்கள் தனது இலட்சியத்துக் காகப் போராடி வெற்றி பெறு வர். நேர்மையைத்தவிர போலி களை வெறுப்பவராவர்; இவர்

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | U | O | F |
| I | K | G | M | H | V | Z | P |
| J | R | L | T | N | W | | |
| Q | | S | | X | | | |
| Y | | | | | | | |

களிடம் நாம் உள்ளே இருந்து தேடி வந்தவர்களிடம் இல்லை என்று சொல்லச் சொன்னால் நிச் சயம் சொல்லமாட்டார். இயற் கைக் காட்சிகளையும் மலைப் பிரதேசங்களையும் வரலாற் றுப்புகழ் பெற்ற இடங்களையும் கண்டுகளிக்க ஆசைப்படுவர். இவர் களுக்குப் பல நல்ல நண்பர்கள் அமைகின்றனர். உதவி செய்ய வேண்டும் என்ற மனப்பான்மை கொண்ட, இவர்கள், தன் மனதிற் குப் பிடித்தவர்களுக்குத் தான கவே உதவிசெய்வர். இந்த எண்ணிக் கைக்காரர்களில் சிலர் காதல் வயப் படுபவார் களானாலும் தனது கௌ ரவம் அந்தஸ்து பாதித்து விடாது திருமண வாழ்க்கையை அமைத்துக் கொள்வ துண்டு.

பொதுவாக இவர்களுக்கு நேர் மையான வழியில் பணம் சேரும். தீய வழியில் அதிகமான பணம் சேர்ப்பதற்கு வழி தெரிந்தால்கூட அதை மனதால் செய்யப்பயப் படுவர். உண்மையைத்தவிர, பொய் சொல்ல மனம் கூசும் இவர்களே நாணயத்தின் நாயகர்கள். நோட்டுச் சீட்டு இல்லாது இவர்களை இலட் சக்கணக்கிற்கு நம்பலாம். வாகனப் பிரியரான இவர் அடிக்கடி வாக னங்களை மாற்றிக்கொள்பவராக வும் பழைய வாகனங்கள் மீது அதிக நாட்டங்கொள்பவராகவும் இருப்பர். இவர்களை மற்றவர்கள் நன்கு மதிப்பார்கள்.

பலருக்குத்தலைவராகவும் பலரை வாழ வைக்கும் மனிதராகவும் தனது தேசப்பற்று மிக்கவராகவும் குடும் பத்தைப் பாதுகாப்பவராகவும் விளங் குவர். இவருடைய பிறந்ததேதி, எண் ணிற்குத் தகுந்தாற்போல் பெயர் அமைந்து விட்டால் மேற் குறிப் பிட்ட நற்பலன்களோடு எல்லா வளங்களும் பெற்று வாழ்வார். ஆனால் பெயர் பொருத்தமான தாக அமையாவிட்டால் அப்பெய ரெண்களுக்குத் தகுந்த மாதிரி நல் லதும் கெட்டதும் கலந்து வாழ்க்கை இருக்கும். இதனால் இந்த எண் ணிக்கையில் பிறந்தவர்கள் கீழே குறிப் பிட்டுள்ள பொருத்தமான எண்களில் பெயரை அமைத்துக் கொண்டு கெட்ட செயல்களை நீக்கி நன்மை யைப் பெற்று வாழ பெயரை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும்.

**தொழில்**

இந்த எண்ணிக்கைக் காரர் களுக்கு,நெருப்பு சம்பந்தமான அனைத்துத் தொழிலும் சிறந்த வையே. மின்சாரம் சம்பந்தமான தொழிலும் இரும்பு சம்பந்தமான தொழிலும் ஏற்றவையே. அத்துடன் ஆபரண சம்பந்தமான தொழிலும் நல்ல பலனைக் கொடுக்கும்.

**பெயர் அமைக்கும் முறை**

சூரியனுடைய பூரண ஆதிக்கம் கொண்ட இவர்களுக்கு சுக்கிர ஆதிக்கத்திலும் சூரிய ஆதிக்கத் திலும் பெயரை அமைத்துக் கொள்ளலாம். இவர்கள் செய்கின்ற வியாபார விலாசத்திற்கும் மேற் குறிப்பிட்ட ஆதிக்கத்திலே பெயரை அமைத்துக் கொள்வது சிறந்தது. உதாரணமாக 19, 37,46,64 போன்ற சூரிய ஆதிக்க எண்களிலும் 15,24, 33,42,69, போன்ற சுக்கிர ஆதிக் கத்திலும் பெயரை அமைத்துக் கொள்ளலாம். இந்த எண்களில் பெயரை அமைத்துக் கொண் டார்களேயானால் தொடர்ந்து முன்னேற்றம் உண்டு.

**நோய்**

சூரிய ஆதிக்கம் கொண்ட இவர்களுக்கு உஷ்ண சம்பந்தமான அனைத்து நோய்களும் வர வாய்ப் புள்ளது. மூலவியாதி, இரத்த அழுத்தம், உஷ்ணகட்டி கண் ணோய் ஆகிய நோய்கள் வரும். அதைத் தவிர்க்கக் குளிர்ச்சியான சாப்பாட்டுப் பொருள்களை ஆரம் பத்திலிருந்தே சேர்த்துக் கொள்வது சிறந்தது. கீரைவகைகள் சாப்பிடு வதால் நன்மையடையலாம்.

**பின்பற்ற வேண்டியவை**

யோகமான எண்-1,6


யோகமான தேதிகள்- 1,10,19,28, 6,15,24,4,13,22,31

யோகமான நிறம் -மஞ்சள், வெளிர் நீலம்

ஆகாத நிறம்- கறுப்பு,சிவப்பு, காப்பிக்கொட்டைக்கலர்.

ஆகாததேதிகள்8,17,26

◆ ◆ ◆



## பெயர் எண்களின் பலன்

பெயர் ஒரு மனிதனுக்கு முக்கியம் என்பதை நாம் அறிவோம். இதுகாறும் சிறந்த எண்கணித ஆராய்ச்சியாளர்கள் 108 எண்களுக்கு மேல் பலன் எழுதியதாக தெரியவில்லை. ஆனால் இங்கு 123 எண்களுக்கு பலன்கள் எழுதப்படுகிறது. இதற்குக் காரணம் வியாபார விலாசங்களுக்கு அதிக நீளமான பெயர் வருவதால், பெயர் அமைக்கக் கஷ்டப்படுகின்றனர். பல எண்களில் பெயர்களை நண்பர் களுக்கு அமைத்துக் கொடுத்து பலன் அளிக்கின்றதா என்று ஆராய்ச்சி செய்துள்ளேன். உதாரணமாக தமிழ் நாட்டில் 10-4-1946இல் பிறந்த ஒரு நண்பருக்கும் மலேசியாவில் 6-4-1944 தேதியில் பிறந்த ஒரு நண்பருக்கும் 123 எண் வருகின்ற மாதிரி பெயரை அமைத்துக் கொடுத்தேன். இருவரும் பெயர் மாற்றிய பின் நற்பலன்களைப் பெற்று வருவதாகத் தெரிந்து இன் னும் பலருக்கு மாற்றியமைமைத்து வெற்றிகண்டேன்.

**1 எண் பலன்**

1 எண் பெயரில் வருகிற மாதிரி இருப்பவர்கள் உலகில் மிகக் குறைவு. அப்படி பெயர் எண் ஒன்று வருகின்றபடி இருக்குமே யானால் முன்னேற்றம் ஏற்பட்டு பின் பல்வேறு சிக்கல்களைத்தான் சந்திக்க நேரும். ஆனால் வீடு, வாகனத்திற்கு 1 எண் வந்தால் சிறந்த யோகத்தைக்கொடுக்கும்.

**2 எண் பலன்**

இந்த எண் பெயரில்வருகிற மாதிரி அமைத்துக்கொண்டால் முன்னேற்றம் நிலையாக இருக்காது. அடிக்கடி தன்னம்பிக்கை இழக்க நேரிடும். காரணமில்லாத க்வலை கள்வரும். ஆடம்பரப் பொருளால் பச்சை நிறம் கொண்ட பொருளால் இலாபம் கிடைக்கும்.

**3 எண் பலன்**

குருபலம் மிகுந்த இந்த எண் தீர்க்கமான யோசனையையும் தன்னுடைய சுய முயற்சியால் உயர்வையும் இல்லற வாழ்க்கையில் மகிழ்ச்சியையும் வயது ஏற ஏற நிலையான வாழ்க்கையையும் ஏற்படுத்தும். கல்வி கேள்வி திறமைகளை வளர்க்கும். ஏற் படுத்தும்.

**4 எண் பலன்**

இந்த எண் பெயரில் வரு கின்ற மாதிரி இருந்தால் இவ ருடைய சிறந்த அறிவு பிறருக் குப் பயன்படும். தன்னுடைய காரியத்திற்குச் செல் லும்போது பயந்து செயல்பட முடியாது போய்விடும். நோய்கள் மிகும். அதிகமாமகப் பேசுவதால் பலருடைய பொல்லாப்பு வரும்.

**5 எண் பலன்**

பூரண புதன் ஆதிக்கம் கொண்ட இந்த எண்ணைப் பெயராகக் கொண்டவர்கள் எவ்வழியிலாவது உச்சநிலையை அடைந்து விடுவர். தனது நேர்மையான குணத்தாலும் தன் கடமையைச் சரிவரச் செய்வதா லும் பெரியோர்கள் கூறுவதை ஆமோதித்து அதன்படி நடப்ப தாலும் நாளுக்கு நாள் இவர்களது புகழ் உயர்ந்து கோண்டே போகும். பொருள் சம்பாதிப்பதில் சமர்த் தரான இவர்கள் பலருக்கு வழி காட்டியாகவும் வாழ்வர். தெய்வ நம்பிக்கையும் தர்ம சிந்தனையும் கொண்டு மகிழ்ச்சியான வாழ்க் கையை நடத்துவர்.

எண் கணித நிபுணர்
கலாநிதி ஆர்.ஐ.துரைமுருகர் D.LIT

(தொடரும்)

# வடக்கில் த.தே. கூட்டமைப்புடன் இணைந்து அபிவிருத்தி பணிகள்

## அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு



(கொழும்பு)

வடக்கில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்படும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி பெற்ற உள்ளூராட்சி சபைகளுக்கான தலைவர்கள் அதிக விருப்பு வாக்கு அடிப்படையிலே தெரிவு செய்யப்படுவர் என அமைச்சர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கூடி முடிவு செய்யும் என்றும் தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் மாத்திரம் வேறு நபர்கள் தலைவர், பிரதித் தலைவர்களாக நியமிக்கப்படுவர் எனவும் தெரிவித்தார்.

தேர்தல் ஆணையாளரின் உத்தியோக பூர்வ விருப்பு வாக்குப் பட்டியல் ஓரிரு தினத்தில் கிடைக்கும். அதன் பின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றியீட்டிய உள்ளூராட்சி மன்றங்களுக்கான தலைவர்கள், உப தலைவர்கள் விபரம் தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்கப்படும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பாக தெரிவான உறுப்பினர்கள் ஜனாதிபதியின் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொள்வர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வடக்கில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வெற்றியீட்டினாலும் வடக்கில் அபிவிருத்திப் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் எனவும் வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணைந்து அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் கூறினார். (ஸ்ரீ-2)

## சாவ.பிரதேச சபைக்கு தெரிவு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பிரதேச சபைக்கு ஐ.தே.க.வின் சார்பில் போட்டியிட்ட கே. சர்வானந்தன் என்பவரே வெற்றி பெற்றதாக தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஊடகங்களில் இப்பெயர் தவறாக பிரசுரமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

யாழ். மாவட்டத்தில் ஐ.தே.க.வுக்கு காரைநகரிலும் சாவகச்சேரி பிரதேச சபையிலும் ஒவ்வொரு ஆசனங்கள் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

## போக்குவரத்து முற்கொடுப்பனவு அட்டைகளை அறிமுகம் செய்வதற்குத் தீர்மானம்

(கொழும்பு)

பொதுமக்களின் போக்குவரத்து தொடர்பில் முற்கொடுப்பனவு அட்டைகளை அறிமுகம் செய்வதற்காக போக்குவரத்து அதிகாரிகள் ஆய்வுகளை மேற்கொண்டு வருவதாக போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த புதிய முறையை 2013 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்ய திட்டமிட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய முறை பற்றி பஸ் சங்கங்களுடன் போக்குவரத்து நிறுவனங்களுடனும் பேசப்பட்ட போது அவர்கள் இது பற்றி மிக ஆர்வமாக இருந்ததாக போக்குவரத்து செயலாளர் விக்டர் சமரவீர தெரிவித்தார்.

இந்த புதிய முற்கொடுப்பனவு அட்டை முறைமை பயன்பாட்டிற்கு வரும் போது சில்லறை காசு பற்றிய பிரச்சினை அற்றுப் போகும். பஸ் நடத்துனர்கள் மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட முடியாமலும் போகும். இதனால் முதலாளிமார் நன்மையடைவர் என அவர் குறிப்பிட்டார்.

நாம் இந்த முறை பற்றி மேலும் ஆராய வேண்டும். அத்துடன் முன்னோடி செயற்றிட்டங்கள் மூலம் இதன் நிலைத்து இயங்கக் கூடிய ஆற்றலை உறுதி செய்ய வேண்டும். தனியார் துறையினர் இந்தத் திட்டத்தில் முதலீடு செய்யத் தயாராக உள்ளனர் என விக்டர் சமரவீர மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## இரும்பு தடுப்பை அகற்றியதற்கு 18 ஆயிரம் ரூபா நஷ்டஈடு

(கொழும்பு)

காலி பஸ் தரிப்பிடத்தில் இரும்பு தடுப்பை அகற்றியதன் மூலம் அரசாங்கத்திற்கு 18 ஆயிரம் ரூபா நஷ்டத்தை ஏற்படுத்தியமையால் தடுப்பை நீக்கிய நபரிடம் அந்தப் பணம் அறவிடப்பட்டதாக காலி மாநகரசபை குறிப்பிடுகின்றது.

நஷ்டத்தொகை 18 ஆயிரம் ரூபாவென மாநகர சபையின் பொறியியலாளர் பிரிவினால் மதிக்கப்பட்டதாக காலி பதில் மேயர் பௌசுல் நியாஸ் தெரிவித்தார்.

இதற்கமைய பாராளுமன்ற உறுப்பினர் நிஷாந்த முத்து ஹெட்டிகமவின் பிரதிநிதி ஒருவர் வருகைதந்து குறித்த பணத்தை செலுத்தியதாக பதில் மேயர் கூறினார்.

தனியார் பஸ் உரிமையாளர்களின் கோரிக்கைக்கு அமைய பாராளுமன்ற உறுப்பினர் நிஷாந்த முத்துஹெட்டிகம தலைமையில் அண்மையில் குறித்த இரும்பு தடுப்பு அகற்றப்பட்டது.

எவ்வாறாயினும் குறித்த பஸ் தடுப்பு மீண்டும் அமைக்கப்பட்டதுடன் பஸ் தரிப்பிட நிர்மாணப் பணிகள் பிரதம பொறியிலாளர் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன. (எ)

## அமைச்சர் விமல் வீரவன்ச தேர்தல் சட்டங்களை மீறினார்

### ஆளும் கட்சி வேட்பாளர் குற்றச்சாட்டு

வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச தேர்தல் சட்டங்களை மீறிச் செயற்பட்டதாக நடைபெற்று முடிந்த தேர்தலில் வெற்றியீட்டிய கடுவெல ஆளும் கட்சி வேட்பாளர் புத்ததாச குற்றம் சுமத்தியுள்ளார்.

ஜீ.எச்.புத்ததாச ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் தேர்தல்களில் போட்டியிட்டு அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கொண்டார்.

அரச சொத்துக்களையும் பாதுகாப்பு தரப்பினரையும் அமைச்சர் விமல் வீரவன்ச துஷ்பிரயோகம் செய்ததாக அவர் குற்றஞ் சுமத்தியுள்ளார்.

தேர்தலில் தமக்கு விருப்பமான வேட்பாளர் ஒருவர் வெற்றியீட்ட வேண்டும் என்பதற்காக பல்வேறு வழிகளில் விமல் வீரவன்ச இடையூறு ஏற்படுத்தியதாக புத்ததாச தெரிவித்துள்ளார்.

விமல் வீரவன்சவின் நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் முறைப்பாடு செய்ய உத்தேசித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

## பொலிஸார் தமிழ்மொழியை கற்றுக் கொள்ள வேண்டும்

### திருமலை நீதிவான் தெரிவிப்பு

(கொழும்பு)

பொலிஸார் தமிழ்மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டுமென திருகோணமலை நீதிவான் அறிவித்துள்ளார்.

தமிழ்மொழி அகடமி ஆரம்ப நிகழ்வுகளில் கலந்து கொண்டபோது அவர் இதனைத் குறிப்பிட்டார்.

தமிழ்மொழியில் முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் பொலிஸார் தமிழ்மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டுமென நீதிவான் உத்தரவிட்டதாக திருகோணமலை பொலிஸ் அத்தியட்சகர் பந்துல விஜேவர்த்தன தெரிவித்துள்ளார்.

தமிழ்மொழியில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டால் அதனை மக்களும் புரிந்து கொள்வார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

போதியளவு மொழியறிவு இல்லாத காரணத்தினால் பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்வதில் சிக்கல்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## வவுனியாவில் புதிய பஸ் நிலையம் அமைப்பதற்கு நடவடிக்கை

வவுனியா புதிய பஸ் நிலையம் அமைப்பதற்குரிய இடம் அடையாளம் காணப்பட்டு மூன்று ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளது.

வவுனியா அரசினர் பண்ணையின் நெல் வேளாண்மை செய்யப்படும் காணி, பஸ் நிலைய புதிய கட்டட தொகுதிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு காணிக்கு மண் போட்டு நிரப்புவதற்கு கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளது என வவுனியா மாவட்ட அரச அதிபர் தெரிவித்தார்.

நிர்மாண பணிகள் நிறைவு பெற்றதும் வெளிமாவட்டங்களுக்கு செல்லும் சகல பஸ்களும் இந்த நிலையத்தில் இருந்தே புறப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

தற்போதைய பஸ் நிலையத்தின் இடப்பற்றாக்குறையினை நிவர்த்தி செய்யும் நோக்குடன் புதிய பஸ் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ஸ்ரீ)

## சனல்-4 காணொளி போலியானது; நல்லிணக்க ஆணைக்குழு தெரிவிப்பு

இலங்கையில் போர்க் குற்றங்கள் இடம்பெற்றதாக பிரித்தானியாவின் சனல்-4 தொலைக்காட்சி வெளியிட்ட காணொளி போலியான தகவல்களை உள்ளடக்கியதென கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தொழில்நுட்ப நிபுணர்களின் ஊடாக குறித்த காணொளி தொடர்பில் விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதாக நல்லிணக்க ஆணைக்குழு குறிப்பிடுகின்றது.

குறித்த காணொளியில் காணப்படும் பல விடயங்கள் செம்மைப்படுத்தப்பட்டவை எனவும் சில காட்சிகள் பொய்யான பின்னணி மற்றும் கட்டமைப்புகளுடன் உருவாக்கப்பட்டவை எனவும் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இந்த விசாரணைகளின் போது சனல் 4 காணொளி தொடர்பில் பல்வேறு வல்லுநர்கள் வெளியிட்ட கருத்துக்கள் குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டதாக ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்கமைய இந்த விசாரணைகளின் பெறுபேறுகளை கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-2)

## உள்ளூராட்சி மன்றத் தலைவர்களின் பெயர்களை அனுப்பிவைக்க கோரிக்கை

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களின் பெயர்களை நாளை வியாழக்கிழமைக்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறு வெற்றி பெற்ற கட்சிகளின் செயலாளர்களிடம் தேர்தல்கள் ஆணையாளர் வலியுறுத்தியுள்ளார்.

மேயர், உப மேயர், தலைவர் மற்றும் உப தலைவர் ஆகிய பதவிகளுக்காக நியமிக்கப்படும் நபர்களின் பெயர்களை கட்சிகளின் செயலாளர்கள் ஊடாக தேர்தல்கள் செயலகத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் டபிள்யூ பி.சுமனசிறி குறிப்பிட்டார்.

அத்துடன் உள்ளூராட்சி மன்றங்களின் எதிர்க்கட்சி தலைவர் பதவிக்கு நியமிக்கப்படுபவர்களின் பெயர்களையும் அனுப்பி வைக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட அனைத்து உறுப்பினர்களினதும் பெயர்கள், எதிர்வரும் இரண்டு தினங்களுக்குள் தேர்தல்கள் செயலகத்திற்கு கிடைக்கும் என அவர் சுட்டிக்காட்டினார்.

இதன் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட அனைத்து உறுப்பினர்களினதும் பெயர்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தலை இந்த வார இறுதியில் வெளியிட முடியும் என எதிர்பார்ப்பதாக தேர்தல்கள் ஆணையாளர் கூறினார். (ஸ்ரீ-2)

(10) A பகுதியிலிருக்கின்ற உபகரணங்களிலிருந்து பெறக்கூடிய சேவைகள் B பகுதியில் உள்ளன. அவற்றைச் சாரியான முறையில் தொடர்புபடுத்துக.

| A பகுதி | B பகுதி |
|---|---|
| 1. வில்லை | A. வடக்குத் திசையைத் தெரிந்து கொள்ளல். |
| 2. மின்சூள் விளக்கு | B. தூரவுள்ள பொருட்களை அவதானித்தல் |
| 3. கைத்தாளம் | C. சிறிய பொருளொன்றைப் பெருப்பித்துப் பார்த்தல் |
| 4. திசைகாட்டி | D. இரும்பைச் சூடாக்குதல். |
| 5. பட்டறை | E. இருட்டில் ஒளியைப் பெறுதல் |
| 6. தொலைகாட்டி | F. அசைவுக்கேற்ப இசையைப் பெறுதல் |

(11) பின்வரும் பழமொழிகளில் விடுபட்டுள்ள இடங்களைப் பூர்த்திசெய்க.

01. தொட்டிற் .................... சுடுகாடு வரை.

02. அடிக்கு மேல் .................... அடித்தால் .................... நகரும்.

03. .................... வளையாதது ஐம்பதில் ....................

◆ பின்வரும் வினாக்களில் கேட்கப்பட்டுள்ள விடயங்களில் மிகச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

(12) இலங்கையின் மின்சக்தி உற்பத்தி எவ்வளத்தில் தங்கியுள்ளது?
1. சூரிய ஒளி 2. நீர் 3. நிலம் 4. காடு

(13) பின்வருவனவற்றுள் மின்னைக் கடத்தக்கூடிய பொருள் எது?
1. பிளாஸ்திக்கு 2. இறப்பு 3. தோல் 4. தகரம்

(14) துவிச்சக்கரவண்டியில் இரவு நேரத்தில் மின்சாரத்தைப் பெறுவதற்குப் பொருத்தப்பட்டுள்ள உபகரணம் எது?
1. மின்விளக்கு 2. தடுப்பு 3. டைனமோ 4. சில்லு

(15) மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்ட ஒரு பிரதேசம் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
1. தீபகற்பம் 2. தீவு 3. களப்பு 4. கண்டம்

(16) பின்வரும் சங்கீதக் கருவிகளில் கஞ்சக் கருவியாக இருப்பது எது?
1. சல்லரி 2. புல்லாங்குழல்
3. மிருதங்கம் 4. வயலின்

(17) மேசை விரிப்பு ஒன்றில் காணப்பட்ட அலங்காரம் உருவில் உள்ளது. இவ் அலங்காரம் என்ன வகைச் சித்திரமாகும்?



1. ஸ்டென்சில் 2. கொலாஜ்
3. அச்சுப் பதிப்பு 4. கோலவுரு

(18) இலங்கையில் அதிக மழைவிழ்ச்சியுடைய பிரதேசம்
1. அம்பாந்தோட்டை 2. வட்டவளை
3. நுவரெலியா 4. கண்டி

(19) எமது நாட்டின் தேசிய மலர் எது?
1. நா மலர் 2. செந்தாமரை
3. வெண்தாமரை 4. நீல அல்லி

(20) சிலுவை அடையாளம் பின்வரும் எவ் வேத நூலுடன் தொடர்புடையது?
1. குர் ஆன் 2. பைபிள்
3. திரிபீடகம் 4. பகவத்கீதை

(21) உலகிலேயே மிக நீளமான நதி எது?
1. நைல்நதி 2. கங்கைநதி
3. வளவகங்கை 4. மகாவலிகங்கை

(22) பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தை எழுதுக.

01. அப்பி பலதுரு கமு ....................

02. நங்கி கிரி பொ(B)வா ....................

(23) பின்வரும் சொற்களுக்கான சிங்கள வடிவத்தைத் தமிழ்ச் சொற்களில் எழுதுக.

01. ஞாயிறு சந்தை ....................


02. தேங்காயின் விலை என்ன? ....................

(24) பின்வரும் தாவர வகைகளை அட்டவணையில் உள்ளவாறு வகைப்படுத்தி எழுதுக.

தென்னை, பப்பாசி, வேம்பு, பனை, கித்துள், மா, பலா, சோளம்

| ஆணிவேர் கொண்டவை | நார்வேர் கொண்டவை |
|---|---|
| | |

(25) ஒரு பாடசாலையில் 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயார் செய்வதற்காக தரம் 3 தரம் 4 மாணவர்களிடம் முன்னோடிப் பரீட்சை ஒன்று வைக்கப்பட்டது. அப்பரீட்சையின் போது 75 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களின் விபரங்கள் தொடர்பான வரைபு பின்வருமாறு.




01. எந்த வகுப்பில் ஆண்பிள்ளைகள் கூடுதலாக சித்திப்புள்ளி பெற்றுள்ளனர்.?
....................

02. தரம் 4B யில் சித்திப்புள்ளி பெற்ற மொத்த மாணவர்கள் எத்தனை பேர்?
....................

03. தரம் 4ல் சித்திப்புள்ளி பெற்ற மொத்த ஆண்பிள்ளைகள் எத்தனை பேர்?
....................

04. எந்த வகுப்பில் குறைந்தளவு மாணவர்கள் சித்திப்புள்ளி பெற்றுள்ளனர்?
....................

05. தரம் 3B யில் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 32 பேர் எனின் சித்திப்புள்ளி பெறாத மாணவர்கள் எத்தனை பேர்?
....................

06. தரம் 4ல் 42 பெண்பிள்ளைகள் பயிலுகின்றனர் எனின் பரீட்சையில் சித்திப்புள்ளி பெறாத பெண்பிள்ளைகள் எத்தனை பேர்?
....................


(26). எங்கள் பாடசாலை மாணவர் மன்றத்தில் நான் முதன் முதலாகப் பேசிய போது .................... எனும் தலைப்பில் சரியான எழுவாய், பயனிலைகளுடன் ஒரு வாக்கியத்தில் நான்கு சொற்களுக்குக் குறையாதவாறு ஆறு வாக்கியங்கள் எழுதுக.

# பிரதமர் மன்மோகன், அமைச்சர் சிதம்பரம் மீது முன்னாள் அமைச்சர் ராசா புகார்



நான் தவறு ஏதும் செய்யவில்லை. எனக்கு முன்பிருந்த அமைச்சர்கள் கடைப்பிடித்த அதே கொள்கையை பின்பற்றித்தான் தொலைத்தொடர்பு உரிமங்களை வழங்கினேன். தவறு செய்ததாக என்னை குற்றம் சுமத்தினால் பிற அமைச்சர்களையும் சிறைக்குள் தள்ள வேண்டும். ஸ்வான் யுனிடெக் நிறுவனங்களின் பங்குகளை விற்பதற்கு சிதம்பரம் தான் ஒப்புதல் அளித்தார். இது பிரதமருக்கும் தெரியும். இதை பிரதமர் இல்லையென மறுக்கட்டும் பார்க்கலாம் என்று நீதிமன்றில் ராஜா சவால் விடுத்தார்.

ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை தொடர்பான வழக்கு பாட்டியாலா நீதிமன்றில் நடைபெற்று வருகிறது. குற்றம்சாட்டப்பட்டோருக்கு குற்றப்பத்திரிகையின் நகல் கடந்தவாரம் தரப்பட்டு விட்டது. குற்றம் நடைபெற்ற குறித்த தகவல்களை தொகுப்பதற்கு முன் அவர்கள் தரப்பு கருத்துக்களையும் கேட்பதற்காக குற்றம் சாட்டப்பட்டோருக்கு ஒரு வாய்ப்பை நீதிமன்றம் வழங்கும். அதன்படி நேற்று முன்தினம் அமைச்சர் ராஜா தன் வாதங்களை நீதிமன்றில் அடுக்கினார்.



அப்போது ராஜாவின் வழக்கறிஞர் சுஷில்குமார் கூறியதாவது, ஸ்வான் மற்றும் யுனிடெக் நிறுவனங்களுக்கு குறை ந்த விலைக்கு ஸ்பெக்ட்ரம் வழங்கியது ஏன் என சி.பி.ஐ குற்றம் சாட்டுகிறது. 1658 கோடி ரூபாய் வரை அளித்து அவர்கள் ஸ்பெ க்ட்ரம் உரிமம் பெற்றனர். உரிமம் பெற்று விட்டதாலேயே எல்லாம் முடிந்துவிடாது. அதன் பின்னர் சேவையை தொடங்குவதற்கு பல கட்டங்கள் உள்ளன. அதற்கு பணம் தேவை. அந்த சமயத்தில் மத்திய அரசின் பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவை கூட்டத்தில் மிக முக்கியமாக முடிவு எடுக்கப்பட்டது. அது வரை 49 சதவீதம் வரை மட்டுமே அனுமதிக்க முடியும் என்று இருந்த வெளிநாட்டு முதலீட்டின் வரம்பை 74 சதவீதமாக உயர்த்தியது அரசாங்கத்தின் இந்த முடிவை பயன்படுத்தி அந்நிறுவனங்கள் தங்களது பணத்தேவையை பூர்த்தி செய்ய முடிவெடுக்கின்றன. அதன் விளைவாக பங்குகளை விற்கின்ற இந்த பங்குகள் விற்பனை என்பது முழுக்க முழுக்க சட்டதிட்டங்களுக்கு உட்பட்டே நடந் துள்ளது. இந்த யுனிடெக், ஸ்வான் ஆகிய இரு நிறுவனங்களின் பங்குகளை விற்பது என முடிவெடுத்த போது அதற்கான ஒப்புதலை அளித்தவர் அப்போதைய நிதியமைச்சர் சிதம்பரம். இந்த ஒப்புதலை அளித்த போது பிரதமரும் இருந்தார். அவரும் இதை நன்றாக அறிவார். நான் கூறுவதை இப்போதும்கூட முடியுமானால் பிரதமர் மன்மோகன்சிங் மறுத்துப் பார்க்கட்டும். (ஸ்ரீ-2)

## மன்மோகனும் சிதம்பரமும் இராஜினாமா செய்யவேண்டும்

## நிதின்கட்காரி கோரிக்கை

(புதுடில்லி)

பாட்டியலா நீதிமன்றில் பிரதமரையும் சிதம்பரத்தையும் தொடர்புடுத்தி ராஜா வாதிட்ட விவகாரம் டில்லி அரசியல் வட்டாரங்களில் காட்டுதீயாகப் பரவியது. இதையடுத்து உடனடியாக நிருபர்கள் கூட்டத்திற்கு பா.ஜ ஏற்பாடு செய்தது.

அதில் அக்கட்சியின் தலைவர் நிதின் கட்காரி பேசும் போது, இத்தனை நாட்களாக பிரதமர் மீதும் சிதம்பரம் மீதும் குற்றம்சாட்டி வந்தோம். ஸ்பெக்ட்ரம் ஊழலை ராஜா மட்டுமே செய்திருக்க முடியாது.

பலரும் சம்பந்தப்பட்டிருக்கின்றனர் என்று கூறிவந்தோம். ஆனால் இப்போது நேரடி சாட்சியமாக நீதி மன்றில் ராஜாவே குற்றம் சுமத்தியுள்ளார்.

இதன் பிறகு மன்மோகன் சிங்கிற்கோ, சிதம்பரத்திற்கோ அவரவர் பதவிகளில் ஒரு நிமிடம் கூட நீடிப்பதற்கு தகுதி இல்லை. உடனடியாக அவர்கள் இராஜினாமா செய்திட வேண்டும் என்று கூறினார்.

(ஸ்ரீ-2)

## பாரதச் செய்திகள்



# ராஜாவின் குற்றச்சாட்டுக்கு அமைச்சர் சிதம்பரம் மறுப்பு

(புதுடில்லி)

யுனிடெக் மற்றும் ஸ்வான் நிறுவன பங்குகளை விற்க நான் அனுமதிக்கவில்லை என மத்திய அமைச்சர் சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

ஸ்பெக்ட்ரம் ஊழல் தொடர்பாக கைதாகியுள்ள முன்னாள் அமைச்சர் ராஜா சி.பி.ஐ நீதிமன்றில் வாதாடுகையில், பிரதமர் மற்றும் அப்போதைய நிதியமைச்சர் சிதம்பரம் முன்னிலையில் தான் ஸ்பெக்ட்ரம் தொடர்பான விவகாரங்கள் நடந்தன என தெரிவித்தார்.

இதற்கு மறுப்பு தெரிவித்து மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம் குறிப்பிடுகையில், ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் 2001 ஆம் ஆண்டு நடைமுறையில் இருந்து நுழைவுக் கட்டணத்தையே பின்பற்ற வேண்டும் என்று தொலைத்தொடர்புதுறை அமைச்சகம் விரும்பியது. 2 ஜி ஸ்பெக்ட்ரம் ஏலத்தின் மூலம் ஒதுக்கீடு செய்யும்படி அறிவுறுத்தினோம்.

ஆனால் இதையெல்லாம் தொடர்புத்துறை அமைச்சகம் ஏற்கவில்லை.ஸ்வான் மற்றும் யுனிடெக் நிறுவனங்கள் ஏற்கனவே 2 ஜி ஸ்பெக்ட்ரம் உரிமத்தை பெற்றுக் கொண்டன. இந்த நிறுவனங்கள் புதிய பங்குதாரரை சேர்த்துக் கொண்டது எப்படி என்பது குறித்து நானும் பிரதமரும் ஆராய்ந்தோம். மற்றபடி இதற்கு அனுமதி கொடுத்ததெல்லாம் தொலைத் தொடர்பு அமைச்சகம் தான் என்றார்.

(ஸ்ரீ)

## பத்மநாப சுவாமி கோவில் பொக்கிஷங்களை பாதுகாக்க இரும்புக்கதவுகள் அமைப்பு



(புதுடில்லி)

பத்மநாப சுவாமி கோவில் பாதாள அறை பொக்கிஷங்களை பாதுகாக்க இரும்பு கதவுகள் அமைக்கப்பட வேண்டும் என உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கேரள தலைநகர் திருவனந்தபுரத்தில் பிரசித்தி பெற்ற பத்மநாப சுவாமி கோவில் உள்ளது. இக்கோவிலின் பாதாள அறைகளில் ஒன்றரை இலட்சம் கோடி ரூபாய்க்கும் மேல் மதிப்புள்ள பொக்கிஷங்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இப்பொக்கிஷங்களை பாதுகாக்க மாநில அரசு சிறப்பு பொலிஸ் ஏற்பாடு செய்துள்ளது.

இப்பொக்கிஷங்கள் குறித்து மதிப்பீடு செய்ய ஐந்து பேர் கொண்ட குழுவை உச்ச நீதிமன்றம் சமீபத்தில் நியமித்தது. இதன் தலைவராக தேசிய அருங்காட்சியக இயக்குநர் ஆனந்தபோஸ் நியமிக்கப்பட்டுள்ளார். பொக்கிஷங்கள் குறித்து பொலிஸின் நம்பிக்கைக்குரிய புகைப்படக்கலைஞர்கள் எடுக்கலாம் என்றும் உச்ச நீதிமன்றம் தனது உத்தரவில் குறிப்பிட்டுள்ளது.

பாதாள அறைகளில் பாதுகாக்கப்பட்டுள்ள பொக்கிஷங்களுக்கு மேலும் பாதுகாப்பாக இருக்க இரும்பு கதவுகள் கொண்டு உறுதிமிக்க அறைகள் அமைக்க வேண்டும். பல நூற்றாண்டுகளாக பயன்படுத்தப்படாமல் இருக்கும் பொக்கிஷங்களை வெளியே எடுக்கும்போது ஏதாவது மாற்றங்கள் ஏற்படுகிறதா என்பதை அறிய வல்லுநர்களை குழுவினர் உதவிக்கு அழைக்கலாம்.

கோவிலில் பாதாள அறைகளில் ஏ,சி,டி இ,எப் என ஐந்து அறைகள் ஏற்கனவே திறக்கப்பட்டு அவற்றில் உள்ளவை குறித்து ஆய்வு செய்யப்பட்டுவிட்டது. ஆனால் இரண்டாவது அறையான பி அறை மட்டும் இது வரை திறக்கப்படாமல் உள்ளது.

மேலும் இவ்வறையை மறுஉத்தரவு வரும் வரை திறக்க வேண்டாம் என உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பொக்கிஷங்களில் ஏதாவது கலைநுட்பப் பொருட்கள் காட்சிக்கு வைக்க பயன்படுமா என்பதையும் குழுவினர் ஆய்வு செய்ய வேண்டும். மதிப்பீடு செய்யும் பணிகள் தொடர்ச்சியாக எந்தவொரு தடங்கலுமின்றி நடைபெற வேண்டும். இதற்கான செலவுகளை மாநில அரசும் கோவில் நிர்வாகமும் சேர்ந்து ஏற்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவில் குறிப்பிட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## பிரதமரை விசாரிக்கும் அதிகாரம் லோக்பால் மசோதாவில் இடம்பெறவில்லை

(புதுடில்லி)

அரசு தயாரித்துள்ள லோக்பால் வரைவு மசோதாவில் பிரதமரை விசாரிக்கும் அதிகாரம் அளிக்கப்படவில்லை என உள்துறை அமைச்சர் சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

உயர்பதவியில் உள்ளவர்களின் ஊழல்களை விசாரிக்க லோக்பால் அமைப்பை உருவாக்க வேண்டும் என சமூக ஆர்வலர் அன்னா ஹசாரே உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினார். இவரது கோரிக்கை ஏற்கப்பட்டு லோக்பால் வரைவு மசோதாவை உருவாக்க குழு அமைக்கப்பட்டது.

அன்னா ஹசாரே தலைமையில் ஒரு குழுவும் மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி தலைமையிலான அரசுத் தரப்பில் ஒரு குழுவும் வரைவு மசோதாவைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டன. ஆனால், பிரதமரையும் விசாரிக்கும் அதிகாரம் லோக்பால் அமைப்புக்கு இருக்க வேண்டும் என அன்னா ஹசாரே வற்புறுத்தினார்.

இதையடுத்து இந்த வரைவு மசோதா தயாரிக்கும் குழுவிலிருந்து அவர் விலக்கப்பட்டு அரசுத் தரப்பினரே தற்போது வரைவு மசோதாவை உருவாக்கியுள்ளனர்.

இது குறித்து உள்துறை அமைச்சர் சிதம்பரம் குறிப்பிடுகையில், பாராளுமன்றில் மழைக்கால கூட்டத்தொடரில் லோக்பால் மசோதா தாக்கல் செய்யப்படும். தற்போது தயாரிக்கப்பட்டுள்ள வரைவு மசோதாவில் பிரதமரை விசாரிக்கும் அதிகாரம் சேர்க்கப்படவில்லை. பாராளுமன்றில் தாக்கல் செய்யப்பட்ட பின் தேவையான திருத்தங்களைச் செய்து கொள்ளலாம். சட்டத்தில் அரசு எந்த தில்லுமுல்லும் செய்யவில்லை. ஊழல் தடுப்பு சட்டத்தில் பிரதமரையும் விசாரிக்கும் அதிகாரம் உள்ளது. எனவே அரசுத் தரப்பிலிருந்து பார்க்கும் போது நாங்கள் எடுக்கும் முடிவு நியாயமானதாகத் தெரியும் என்றார். (ஸ்ரீ-2)

# பகுதியளவிலான உறக்கம் மூளையின் செயற்பாட்டை பாதிக்கின்றது

## மருத்துவ ஆய்வில் தகவல்

(கொழும்பு)

பகுதியளவிலான உறக்கம் மூளையின் பாதிப்பாக அண்மையில் நடத்தப்பட்ட மருத்துவ ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளது.

பிரித்தானியாவில் ஸ்டான்போர்ட் பல்கலைக்கழக ஆய்வாளர்களினால் எலிகளிடம் இந்த ஆய்வு நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

உறக்கமின்மை மற்றும் அல்சீமர் போன்ற நோய்களுக்கும் பகுதியளவிலான உறக்கம் ஏதுவாக அமைகிறது என குறிப்பிடப்படுகிறது.

இடையிடையே உறங்குவதன் மூலம் மூளையின் வழமையான செயற்பாடுகளில் மாற்றம் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

சிலவகை விலங்குகளிடம் ஆய்வு நடத்தப்பட்டதாகவும் இடையிடையே உறங்கிய விலங்குகளினால் பழக்கப்பட்ட பொருட்கள் அடையாளம் காண முடியாத நிலைமை ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆழந்த உறக்கத்தின் போது இன்றைய நாளின் செயற்பாடுகள் மீட்கப்பட்டு தேவையான விடயங்கள் மட்டும் மூளையில் சேமிக்கப்படுவதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஒப்டோ ஜெனடிக்ஸ் என்னும் நவீன ஆய்வு முறையின் மூலம் இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

முழுமையாக உறங்காது இடைக்கிடையே உறங்குவது மூளையின் செயற்பாட்டுக்கு பாதகத்தை ஏற்படுத்துவதாக ஆய்வாளர்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஸ்ரீ-4)

# பலஸ்தீனத்துக்கு ஆயுதம் ஏற்றிச்சென்ற படகு சாக்கடலில் கைப்பற்றப்பட்டது

சாக்கடலில் ஆயுதங்களுடன் பயணித்த படகொன்றை தாம் கைப்பற்றியுள்ளதாக இஸ்ரேலிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் படகிலிருந்த பலஸ்தீனியர்கள் இருவரிடம் விசாரணை நடைபெற்று வருகின்றன. துப்பாக்கிகள், வெடிமருந்துப் பொருட்கள் மற்றும் ஏனைய ஆயுதங்கள் குறித்த கப்பலில் காணப்பட்டதாக இஸ்ரேல் இராணுவத்தினர் கூறினர். மேற்படி ஆயுதங்கள் ஜோர்தானில் இருந்து பலஸ்தீனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுக் கொண்டிருந்ததாக இராணுவத்தினர் தெரிவித்தனர்.

கடந்த மார்ச் மாதம் காசாவுக்கு ஆயுதங்களை எடுத்துச் சென்ற கப்பலொன்றையும் இஸ்ரேலியர்கள் இடைமறித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)



அரசமுறைப் பயணமாக தென்கொரியா சென்றுள்ள இந்திய ஜனாதிபதி பிரதீபா பாட்டீலுக்கு தலைநகர் சியோலில் தென்கொரிய ஜனாதிபதியின் மனைவி லீ யாங் -பாக் உற்சாக வரவேற்பு வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# சிரியாவில் பல கட்சிகளை அங்கீகரிக்கும் மசோதாவை அந்நாட்டு அமைச்சரவை ஏற்பு

(டமாஸ்கஸ்)

சிரியாவில் பல கட்சிகளை அங்கீகரிக்கும் மசோதாவை அந்நாட்டு அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இதன்மூலம் அந்நாட்டு அரசியலில் மாற்றம் வரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும் இது வெறும் கண் துடைப்பு என எதிர்க்கட்சிகள் கூறியுள்ளன.

சிரிய அரசியல் சாசனப்படி அந்நாட்டு பாராளுமன்ற ஜனநாயக அரசியல் கொண்டது. என்றாலும் அரபு சோசலிச மறுமலர்ச்சி கட்சி (ஆளும் பாத் கட்சி) தான் 1963 இல் இருந்து ஆட்சியில் உள்ளது. சிரிய அரசியல் சாசனத்தின் 8 ஆவது பிரிவு பாத் கட்சி தான் நாட்டையும் சமூகத்தையும் வழி நடத்தும் எனக் கூறுகிறது.

சிரியாவில் தற்போது 11 க்கும் மேற்பட்ட கட்சிகளுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது. இக்கட்சிகள் புாத் கட்சியின் மேலாண்மையை ஏற்றுக் கொண்டுள்ளன. 30 இக்கும் மேற்பட்ட கட்சிகள் தலைமறைவாக இயங்கி வருகின்றன.


கடந்த மார்ச் 15 ஆம் திகதி முதல் சிரியாவில் ஜனாதிபதிக்கு எதிராக நடந்து வரும் போராட்டத்தில் அரசியல் சீர்திருத்தக் கோரிக்கை தொடர்ந்து வலியுறுத்தப்படுகிறது. போராட்டத்தை அடக்கும் வகையில் தற்போது பல கட்சிகளையும் அங்கீகரிக்கும் மசோதாவை அந்நாட்டு அமைச்சரவை ஏற்றுக் கொண்டுள்ளது.

இம்மசோதா விரைவில் பாராளுமன்றில் தாக்கல் செய்யப்பட்டு ஒப்புதல் அளிக்கப்படும்.

இம்மசோதாவின் படி மதம், பழங்குடியினர் விவகாரம், மண்டல மற்றும் தொழில் ரீதியான அமைப்புகள் ஆகியவற்றின் அடிப்படையிலான கட்சிகள் அனுமதிக்கப்படமாட்டாது. அதேபோல சிரிய நாட்டவர் அல்லாத பிறர் கட்சி ஆரம்பிக்கக்கூடாது. (ஸ்ரீ-2)

# அணுவாயுதங்களை ஏந்திச் செல்லும் ஏவுகணைத் தயாரிப்பில் பாகிஸ்தான்

(இஸ்லாமாபாத்)



இந்தியாவின் முக்கிய நகரங்களை தாக்கும் விதத்தில் அணு ஆயுதங்களை ஏந்திச் செல்லும் 24 ஏவுகணைகளை இந்தாண்டின் இறுதிக்குள் தயாரித்து இராணுவத்தில் சேர்க்க பாகிஸ்தான் திட்டமிட்டுள்ளது.

குறைந்தபட்ச தடை பராமரிப்பு என்ற திட்டத்தின் கீழ் பாகிஸ்தான் இந்தாண்டின் இறுதிக்குள் 24 ஏவுகணைகளை தயாரிக்க உள்ளது. இத்திட்டம் அந்நாட்டு இராணுவத்தின் அணு ஆயுதப் பிரிவான போர்த்திட்டப் பிரிவின் மேற்பார்வையில் நடக்க உள்ளது. குறைந்தபட்ச தடை பராமரிப்பு என்ற திட்டம் இந்தியாவுக்கு எதிராக உருவாக்கப்பட்ட அரசியல் கொள்கை என பாகிஸ்தானில் இருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்று கூறியுள்ளது. போர் திட்டப்பிரிவு, தேசிய கமாண்ட் ஆணையத்தின் (என்.சி.ஏ.) கீழ் இயங்கி வருகின்றது.

இந்த ஆணையத்தின் தலைவராக பாகிஸ்தான் பிரதமர் உள்ளார். முப்படை தளபதிகள் இதன் உறுப்பினர்கள் சமீபத்தில் நடந்த என்.சி.ஏ கூட்டத்தில் இந்த ஏவுணைகள் தயாரிப்பு குறித்து போர் திட்டப்பிரிவு முப்படை தளபதிகளுக்கு விளக்கம் அளித்துள்ளது. இந்த ஏவுகணைகள் அணு ஆயுதங்களை ஏந்திக் கொண்டு குறைந்த பட்சம் 700 கி.மீ அதிக பட்சம் 1000 கி.மீ தூரம் வரை செல்லும் திறன் உடையவை.

மேலும் இவை தரையில் இந்து வானில் உள்ள இலக்கையும் வானில் இருந்து வானில் உள்ள இலக்கையும் தாக்கக்கூடிய தொழில் நுட்பம் கொண்டவை. இந்த தூர எல்லைக்குள் இந்தியாவின் முக்கிய நகரங்கள் அனைத்தும் வந்து விடும் என்பது குறிப்பிடத்தக்கது.

திட்டமிட்டபடி இந்தாண்டின் இறுதிக்குள் 24 ஏவுகணைகளும் தயாரிக்கப்பட்டால் பாகிஸ்தான் இதுவரை ஓராண்டில் தயாரித்த ஏவுகணைகளில் இது தான் மிக அதிகமாக இருக்கும் என பாகிஸ்தான் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இத்தகவலை பாக்.அரசு மறுத்தாலும் அதிகாரிகள் சிலர் உறுதிப்படுத்தியுள்ளனர். அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் உடனான இந்தியாவின் அணுசக்தி ஒப்பந்தங்களால் பாகிஸ்தான் கவலை அடைந்துள்ளது தான் இந்த திட்டத்திற்கு காரணம் என அவர்கள் தெரிவித்தனர். (ஸ்ரீ-2)




# பிறந்தநாள் விழாவில் 5 பேர் சுட்டுக்கொலை

## அமெரிக்காவில் பயங்கரம்

(வோஷிங்டன்)


அமெரிக்காவில் பிறந்தநாள் விழாவில் ஏற்பட்ட வாய்த் தகராறில் ஆத்திரமடைந்த ஒருவர் துப்பாக்கியால் சுட்டதில் 5 பேர் பலியாகினர். பின் தன்னைதானே சுட்டு இறந்துள்ளார். தல்லாஸ் நகரில் இருந்து 32 கி.மீ. தொலைவில் உள்ளது கிராண்ட் பிரார். அங்கு இடம்பெற்ற பிறந்த நாள் விழாவில் 50 க்கும் மேற்பட்டோர் கூடியிருந்தனர்.

அப்போது விழாவுக்கு வந்திருந்த ஒருவர் தவறாக நடக்க முயன்றதாகத் தெரிகிறது. அதை ஒரு தம்பதியினர் தட்டிக் கேட்டனர். அப்போது எதிர்பாராத விதமாக அந்த நபர் துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டார்.

அதில் 5 பேர் சம்பவ இடத்திலேயே இரத்த வெள்ளத்தில் பலியாகினர். மேலும் 4 பேர் காயமடைந்தனர். தகவலின் பேரில் பொலிஸ் உள்ளே புகுந்தது. அதைக் கண்ட கொலையாளி தன்னைத்தானே சுட்டுக் கொண்டு தற்கொலை செய்து கொண்டார். (ஸ்ரீ-2)

# டயானாவின் வைர நகைகள் கேத்மிடில்டனுக்கு அன்பளிப்பு

(லண்டன்)



இங்கிலாந்து இளவரசர் வில்லியம்-கேத் மிடில்டன் திருமணம் கடந்த ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி கோலாகலமாக நடந்தது. முன்னதாக திருமணம் நிச்சயதார்த்தத்தின் போது மறைந்த தனது தாயார் டயானாவின் மோதிரத்தை கேத் மிடில்டனுக்கு அணிவித்தார். அந்த மோதிரம் நீலக்கல் மற்றும் வைரம் பதிக்கப்பட்டது. இது உலக மக்களை மிகவும் கவர்ந்தது.

இந்த நிலையில் தற்போது மனைவி இளவரசி கேத் மிடில்டனுக்கு தனது தாயார் டயானாவின் ஒரு ஜோடி வைர கம்மல்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். இதுவும் வைரம் மற்றும் நீலக்கல் பதிக்கப்பட்டவை. இவை ஏற்கனவே அவர் வழங்கிய நிச்சயதார்த்த மோதிரத்துக்கு ஒத்ததாக உள்ளன.

மோதிரம் மற்றும் கம்மல்கள் அனைத்தும் 18 கரட் வைரங்களால் ஆனவை. இவை இளவரசி டயானாவுக்கு மிகவும் பிடித்தமானவை. கடந்த 1980 முதல் 1990 ஆம் ஆண்டுகளில் பல டசின் கம்மல்களை அவர் அணிந்து மகிழ்ந்தார். சமீபத்தில் கனடா மற்றும் அமெரிக்கா சென்றபோது இளவரசி கேத் மிடில்டன் இந்த கம்மலை அணிந்து தான் சென்று இருந்தார். கடந்த 1983 ஆம் ஆண்டு கனடா சென்ற டயானாவும் இதே கம்மலை தான் அணிந்து இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

பணம் அழகான நாயை விலைக்கு வாங்கி விடும். ஆனால் பணத்தால் அதன் வாலை ஆட்டிவிக்க முடியாது. - தல்லிங்ஸ்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## ஊழ்வினை வந்துறுத்தும்போது மாரகச் சிந்தனையே வெளிப்படும்

வடபகுதியில் நடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலின் முடிவுகள் வெளிப்படுத்திய அதிர்வலைகள் நீண்டதொரு வரலாற்றுச் சிறப்பம்சமாக அமைந்து விட்டது என்பது மறுக்க முடியாத உண்மை.

ஏனெனில் யாருமே எதிர்பார்க்காத வகையில், தமிழ் மக்கள் தங்கள் தீர்ப்பினை வழங்கியிருந்தனர்.

யாருக்கு வாக்களிப்பது என்று அடுத்தவருக்கும் சொல்லாமல் வீட்டிலிருந்து வாக்களிப்பு நிலையம்- மை பூசுதல், வாக்களித்தல்- மௌனம் காத்தல்- மீளவும் வீடு திரும்புதல்- வழமை போல் தம் வேலையில் ஈடுபடுதல் என்ற ஒழுங்கில் மிகவும் பௌவியமாக தமிழ் மக்கள் நடந்து கொண்டனர்.

தமிழ் மக்களிடம் இத்தகையதொரு ஒற்றுமையை, உத்வேகத்தை- உணர்வுபூர்வமான முடிபை உண்டுபண்ணிய பெருமை இந்த நாட்டின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையே சாரும்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ் மக்களுக்கு உத்வேகத்தைக் கொடுத்தவர் ஜனாதிபதி என்றால்,

ஜனாதிபதிக்கு அந்தச் சிந்தனையைத் தூண்டியது சனல் 4 என்று கூறலாம்.

இதற்கு மேலாக வன்னிப் போரில் அரசு வெற்றியீட்டிய பின்னர், தமிழர்கள் தலையெடுக்காத வகையில் சில திட்டங்கள் ஜனாதிபதி தரப்பால் தீட்டப்பட்டது.

அதில் இரு பிரதான கட்சிகள் மட்டுமே இருக்க முடியும் என்பது முக்கியமானதாகும்.

அதாவது இலங்கையில் இனத்தின் பெயரால் அரசியல் கட்சிகள் இயங்க முடியாது. அதே சமயம் சிறுபான்மை இனங்கள் தங்களுக்கென அரசியற் கட்சிகளைக் கொண்டிருக்க முடியாது.

இரண்டு பிரதான கட்சிக்குள் இந்த நாட்டின் அனைத்து மக்களையும் உள்ளடக்குவதே அரசின் நோக்கமாக இருந்தது.

தமிழ் மக்கள் எக் காலத்திலும் தங்கள் இனம் பற்றிச் சிந்திக்காமல் இருப்பதை உறுதி செய்வதற்காக முன்னெடுக்கப்பட்ட திட்டம் நீதி மன்றத்தின் தலையீட்டால் நின்றுபோனது.

எனினும் தமிழ் அரசியல் கட்சியான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியை தனித்துப் போட்டியிடாமல் தடுத்து, ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிடுவதற்கான ஏற்பாட்டை ஜனாதிபதி செய்திருந்தார்.

ஜனாதிபதியின் இந்தத் திட்டம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தமிழ் அரசியல் தரப்பாக இருப்பதை தடுப்பதாகும்.

எனினும் ஜனாதிபதியின் இச் சிந்தனை தோல்விக்குரியது என்பதை தேர்தல் முடிபுகள் அறுதியிட்டுக் கூறியுள்ளன.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது வீணைச் சின்னத்தில் தேர்தல் களத்தில் இறங்கியிருந்தால் தேர்தல் முடிபுகள் அதற்கும் இதற்குமாக இருந்திருக்கும். ஆனால் வெற்றிலைச் சின்னம் வீணை பற்றிய நினைப்பையே மறைத்து விட்டது.

ஆக, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தனது வீணைச் சின்னத்தில் அன்றி வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட வேண்டும் என்ற ஜனாதிபதியின் முடிபும் வடபுலத்தில் அரச தரப்பிற்கு ஏற்பட்ட மாபெரும் தோல்விக்கு ஒருவகைக் காரணம் எனலாம்.

என்ன செய்வது? ஊழ்வினை வந்து உறுத்தும்போது மாரகச் சிந்தனைகளே வெளிப்படும்.

# இலங்கைத் தமிழ் மக்களுக்கான தீர்மானத்தை நாடாளுமன்றத்திலும் நிறைவேற்ற வேண்டும்

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை

(சென்னை)

இலங்கைத் தமிழர்களுக்கான தீர்மானத்தை நாடாளுமன்றத்திலும் நிறைவேற்ற வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக்குழுக் கூட்டம் சென்னையில் நேற்று முன்தினம் தொடங்கியது. கட்சியின் பொதுச் செயலாளர் ஏ.பி. பரதன், துணைப்பொதுச் செயலாளர் எஸ் சுதாகர்ரெட்டி, தேசிய செயலாளர்கள் டி.ராஜா, குருதாஸ், தாஸ் குப்தா, மத்திய கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் ஆர். நல்லகண்ணு உள்ளிட்டோர் கூட்டத்தில் பங்கேற்றனர். இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு,

✷ இலங்கை அரசால் 2008 இல் கூட்டத்தில் எடுக்கப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி உள்நாட்டு போர் நடைபெற்ற இடங்களில் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் தமிழர்களைக் காணவில்லை என்று கூறப்பட்டுள்ளது.

✷ கடைசியாக நடைபெற்ற போரில் 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று ஐ.நா. சபையால் நியமிக்கப்பட்ட குழுவின் முதல் கட்ட அறிக்கை கூறுகின்றது. இது ஒரு அப்பட்டமான இன அழிப்பு போர்க் குற்றமாகும். உலக அளவில் மனித உரிமை பிரச்சினையாக எழுந்துள்ள இதற்கு இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன. ஆனால் இந்தியா மட்டும் மௌனம் சாதிக்கிறது. இது பலத்த சந்தேகங்களை உருவாக்கியுள்ளது. இந்திய வெளியுறவுக் கொள்கையின் தோல்வியாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது.

✷ தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட இலங்கைப் பிரச்சினையும் ஒரு காரணமாகும். புதிதாகப் பொறுப்பேற்றுள்ள முதல்வர் தமிழக மக்களின் உணர்வுகளுக்கு வடிவம் கொடுக்கும் விதத்தில் சட்டப் பேரவையில் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளார். இந்த உணர்வை மதிக்கும் வகையில் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கைத் தமிழ் மக்களுக்கான தீர்மானத்தை நாடாளுமன்றத்திலும் நிறைவேற்ற வேண்டும் என்று தா. பாண்டியன் வலியுறுத்தியுள்ளார். (ஸ்ரீ-2)

## பொன்சேகா கைதுக்கு எதிரான

# அடிப்படை உரிமைமீறல் மனு தொடர்பில் நீதிமன்றம் கால அவகாசம்

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா கடந்த 2010ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8ஆம் திகதி கைது செய்யப்பட்டமைக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை மனிதவுரிமை மீறல் மனுவைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதா அல்லது விலகிக்கொள்வதா என்பதைத் தீர்மானிக்க காலஅவகாசம் வழங்குமாறு பொன்சேகா சார்பில் ஆஜரான சட்டத்தரணி நேற்று முன்தினம் உயர் நீதிமன்றில் விடுத்த கோரிக்கையையடுத்து உயர்நீதிமன்றம் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 28ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கியது.

இராணுவப் பொலிஸாரினால் பொன்சேகா கைதுசெய்யப்பட்டு, தடுத்துவைக்கப்பட்டுள்ளமை சட்ட விரோதமானது என அறிவித்து அவரை விடுதலை செய்யுமாறு உத்தரவிடக் கோரி இம்மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த மனு நேற்று முன்தினம் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்க தலைமையிலான நீதியரசர்கள் குழுவின் முன் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது மனுதாரர் சார்பில் ஆஜரான சிப்பிலி அசிஸ் இந்த கோரிக்கை விடுத்தார்.

வழக்கில் பிரதிவாதிகளான சட்டமா அதிபர், பாதுகாப்புச் செயலாளர் உள்ளிட்டோர் சார்பில் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சஞ்சய் ராஜரத்தினம் ஆஜராகியிருந்தார். (ஸ்ரீ-2)

# யுத்தத்தின் போது காணாமல் போனோர் மற்றும் கைதானோரின் பட்டியல் தயாரிப்பு

## ஜே.வி.பி.தெரிவிப்பு

யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் காணாமல்போன மற்றும் அறிவிக்காமல் கைது செய்யப்பட்ட தமிழ் கைதிகள் பற்றிய தரவுகள் பட்டியலிடப்படவுள்ளதாக ஜே.வி.பி ஆதரவு சோசலிஷ இளைஞர் ஒன்றியத்தின் தலைவர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் பெருமளவிலான இளைஞர்- யுவதிகள் இவ்வாறு சட்டவிரோதமான முறையில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

இவ்வாறு எவ்வித தகவல்களும் இன்றி குறிப்பட்ட சில முகாம்களில் தடுத்து வைக் கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் பற்றிய தரவுகளை பட்டியலிடும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஜே.வி.பி. கட்சியின் இளைஞர் பேரவையினால் இந்த பட்டியல் தயாரிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ் அரசியல் கைதிகள் பற்றிய தரவுகள் விரைவில் அம்பலப்படுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-4)

## யோகாசன தியான வகுப்புக்கள்

சிவானந்தா மகரிஷி யோக நிலையத்தினரால் எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு வேதாந்தமட தியான மண்டபத்தில் புதிய யோகாசன தியான வகுப்புக்கள் நடைபெறும். இப்பயிற்சி வகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களில் காலை 6.30 மணி தொடக்கம் 7.30 மணிவரை நடைபெறவுள்ளன.

இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள விரும்புவோர் வேதாந்த மடம், குமாரசாமி வீதி, கந்தர் மடம் என்னும் முகவரிக்கு வருகை தந்து விண்ணப்பதாரியின் முழுமையான விபரங்களை வழங்கி பயிற்சிகளில் ஈடுபடலாம்.

அத்தோடு காரைநகர் புது வீதியில் அமைந்திருக்கும் கிழவன்காடு கலா மன்றத்திலும் யோகாசன தியான வகுப்புக்கள் செவ்வாய், வியாழன் ஆகிய தினங்களில் மாலை 6 மணி தொடக்கம் 7.30 மணி வரை நடைபெற்று வருகின்றன. அப்பயிற்சி வகுப்பிலும் ஆண், பெண், இன, மத வயது வேறுபாடுகளின்றி அனைவரும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு தலைவர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## நாள் கணக்கில் சிந்தியுங்கள்



அனைத்திலும் கடவுளைக் காண்பது தான் மனிதனின் இலட்சியம். அனைத்திலும் பார்க்க முடியாவிட்டால் நாம் மிகவும் நேசிக்கும் ஒன்றிலாவது பார்க்க வேண்டும்.

அறிவு, உள்ளம் ஆகிய இரண்டில் எதைப் பின்பற்றுவது என்ற போராட்டம் எழும்போது உள்ளம் சொல்வதையே நீங்கள் பின்பற்றுங்கள். ஏனென்றால் அறிவாற்றலால் ஒரு போதும் சொல்ல முடியாத மிக உயர்ந்த மனநிலைக்கு இதயம் ஒருவனை அழைத்துக் கொண்டு போகிறது.

உண்மை, தூய்மை சுயநலமின்மை ஆகிய இந்த மூன்றும் எங்கெல்லாம் காணப்படுகின்றனவோ அவற்றை பெற்றிருப்பவர்களை நசுக்கக்கூடிய ஆற்றல் விண்ணுலகிலோ மண்ணுலகிலோ எங்கும் கிடையாது. இந்த மூன்றையும் பெற்றுள்ள ஒருவனை பிரபஞ்சம் முழுவதும் எதிர்த்து நின்றாலும் அதை எதிர்த்து நிற்கக் கூடிய ஆற்றல் அவனுக்கு உண்டு.

எண்ணமே நம்மில் தூண்டும் சக்தி, மனத்தை உயர்ந்த எண்ணங்களினால் நிரப்புங்கள். நாட்கணக்காக சிந்தியுங்கள். தோல்விகளை பொருட்படுத்தாதீர்கள்.

# இலங்கை தமிழர்களே, நீங்கள் தனியாக இல்லை; உங்களுக்காக என்றும் குரல் கொடுப்போம்

## ஆந்திர மனித உரிமை செயற்பாட்டாளர்கள் தெரிவிப்பு

ஈழத்தமிழர்களுக்கு நீதி கிடைக்க ஒன்றிணைந்து குரல் கொடுப்போம் என ஆந்திர மனித உரிமை செயற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆந்திர மாநிலத் தலைநகர் ஐதராபாத்தில் உள்ள ஊடகவியலாளர் மன்றத்தில் கடந்த 23 ஆம் திகதி போர்க்குற்றங்கள், இனப்படு கொலைக்கு எதிரான மன்றத்தின் ஆந்திர மாநிலக் குழுவின் சார்பாக தமிழின அழிப்பை நிறுத்து! இலங்கை போர்க்குற்றவாளிகளைத் தண்டி என்ற தலைப்பில் அரங்கக் கூட்டம் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் போர்க்குற்றங்கள், இனப்படுகொலைக்கு எதிரான மன்றத்தின் ஆந்திர மாநிலக் குழுவில் உள்ள பல்வேறு மனித உரிமை அமைப்புகள், மக்கள் அமைப்புகள் கலந்து கொண்டன.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட சிவில் உரிமைகள் கண்காணிப்பு குழுவைச் சேர்ந்த அனீஸ் ஃபாத்திமா உரையாற்றுகையில்,

சிறுபான்மையினருக்கு எதிராக அநீதிகள் உலகம் முழுவதும் நிகழ்ந்து கொண்டு தான் இருக்கின்றன. மொழி, நிறம், கலாசாரம், மதம் இவற்றில் சிறுபான்மையினராக இருப்பவர்களைப் பெரும்பான்மை சமூகம் தொடர்ந்து ஒடுக்குவது நிறுத்தப்பட வேண்டும். சிங்களவர்கள், தன் சொந்த நாட்டில் சிறுபான்மையாக உள்ள மக்களைப் பெண்கள், குழந்தைகள் என்று கூடப் பார்க்காமல் இனப்படுகொலை செய்து விட்டு அதை பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்று கூறி மறைக்கப் பார்க்கின்றார்கள் என்றார்.

தி மார்ச் அமைப்பின் சந்தனா சக்ரபர்த்தி உரைநிகழ்த்துகையில்,

வெளிஉலகினர் யாரும் அனுமதிக்கப்படாது சாட்சிகளற்ற ஒரு இன அழிப்புப் போரை நடத்தியிருக்கின்றது. இலங்கை அரசு சனல்4 இன் ஆவணப்படத்தின் மூலம் இந்தக் கொடூரங்கள் இன்று உலகிற்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. நடந்து முடிந்த போரானது ஆயிரத்திற்கும் அதிகமானவர்களை விதவைகளாக்கியுள்ளது. போர் முடிந்த பின்பும் தொடர்ந்து பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளாகும் பெண்கள் மற்றும் சிறுமிகள், ஆதரவற்ற முதியோர்கள், அநாதைகளாக்கப்பட்ட குழந்தைகள் என்று தொடர்ந்து கொண்டிருக்கின்றது போரின் முகம்.

மனிதத்தன்மையற்ற இந்தக் கொடூர செயல்களுக்கு எதிராக நாம் இன்னும் அமைதியாகவே இருக்கப் பேரகிறோமா? மானிடத்திற்கெதிராக நடந்தேறும் அவலங்களுக்கு எதிராக மனித உரிமை ஆர்வலர்கள், கல்வியாளர்கள் மற்றும் பொது மக்கள் யாவரும் இணைந்து தங்கள் மொழி, மாநிலம், நாடு என்று தங்களைச் சுருக்கிக் கொள்ளாமல் செயலாற்ற வேண்டும் என்றார்.

சென்னை பல்கலைக்கழகப் பேராசிரியர் மணிவண்ணன் உரைநிகழ்த்துகையில்,

உலகின் மற்ற பகுதிகளில் நடக்கும் பிரச்சினைகளப் பற்றிப் பேசும் போதெல்லம் வராத ஒரு கேள்வி, இலங்கைப் பிரச்சினை பற்றிப் பேசும் போது மட்டும் வருகிறது. அது நீ தமிழனா? அதனால் தான் இப்பிரச்சினை பற்றி பேசுகிறாயா? என்ற கேள்வி. இலங்கை போரில் இந்தியாவின் தொடர்பு பற்றிக் கேள்வி எழுப்பப்பட்ட போது,

நாங்கள் சிறு ஆயுதங்கள் மட்டுமே வழங்கினோம் என்று இந்திய அரசு பதிலளித்தது. ஆயுதங்களில் சிறியது பெரியது என்று என்ன வித்தியாசம் இருக்கின்றது? எல்லா ஆயுதங்களும் மக்களைத் கொல்லத்தானே பயன்பட்டது. இதனால்தான் காங்கிரசின் துரோகத்தை மன்னிக்காத தமிழர்கள் 1967 க்குப் பின் கடந்த தமிழகத் தேர்தலில் அதனை மிக மோசமாகத் தோற்கடித்தார்கள்.

சுதந்திரத்திற்குப் பின் சிங்களவர்கள் அதிகாரத்தை தங்கள் பக்கம் வைத்துக் கொள்ளும் முனைப்பில் ஈடுபட்டனர். தமிழர்களுக்கான அரசியல் உரிமைகளைப் பறித்தனர்.

அவர்கள் மொழி மற்றும் கலாசார அடையாளங்களை அழிக்கத் தொடங்கினர். இப்போது போருக்குப் பின்னர் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள தமிழர்கள் உளவியல் ரீதியாக துன்புறுத்தப்படுகிறார்கள். தமிழர்களின் வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன. மீதி எஞ்சியிருப்பதையும் இலங்கை இராணுவமும் புதிதாகக் குடியமர்த்தப்பட்டு வரும் சிங்களவர்களும் ஆக்கிரமித்துக் கொள்கிறார்கள்.


இதையெல்லாம் மக்களுக்குத் தெரியப்படுத்தாமல் இலங்கை அரசு சொல்லும் பொய்களையெல்லாம் செய்திகள் என்று தி இந்து போன்ற சில ஊடகங்கள் வெளியிட்டு வருகின்றன. ஒரு பொய்யை ஆயிரம் முறை திரும்பத் திரும்ப சொல்லும் போது அது உண்மையாக உருமாறுகிறது என்பதை இலங்கையும் அதற்கு ஆதரவான ஊடகங்களும் ஓகயாண்டு வருகின்றன என்றார்.

உலகிலுள்ள எல்லா மக்கள் இயக்கங்களும் ஒன்று தான். அவற்றின் ஒற்றை நோக்கம் மக்களின் நலன்என உரையாற்றிய ரமேஸ், மக்கள் ஒன்று சேர்ந்தால் இலங்கை, இந்தியா ஏன் உலகமே எதிர்த்தாலும் தமிழர்களின் வெற்றி நிச்சயம். எல்லா மக்கள் இயக்கங்களும் ஒன்றாக இணைய வேண்டிய நேரம் இது. இலங்கைத் தமிழர்களே, நீங்கள் தனியாக இல்லை.

உங்களின் போராட்டங்களைக் கண்டு நாங்கள் கண்ணீர் வடிக்கின்றோம். உங்களுக்கு நாங்கள் தலை வணங்குகின்றோம் என்று பொருள் பொதிந்த ஒரு தெலுங்குப் பாடலை மேடையில் முழங்கினார்.

மனித உரிமை மன்றத்தின் சீவன்குமார் உரையாற்றுகையில்,

மக்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராடுவது ஒரு உலகளாவிய நிகழ்வு. ஆனால், ஆட்சியாளர்கள் பிரச்சினைகளுக்




கான உண்மையான காரணங்களை ஆராயாமல் தங்களால் முடிந்த வழிகளில் எல்லாம் போராட்டங்களை அடக்கிவிட முயற்சிக்கிறார்கள். அரசின் இத்தகைய முயற்சிகளை மக்கள் ஒன்றிணைந்து முறியடிக்க வேண்டும். இலங்கை பிரச்சினையின் மூல காரணங்களை மக்களிடம் விளக்க வேண்டும். தொடர் கூட்டங்கள், போராட்டங்கள் மூலம் உலகத்தின் கவனத்தை இப்பிரச்சினை தொடர்பாகத் திருப்ப வேண்டும் என்றார்.

வீக்சனம் இதழின் ஆசிரி யரான வேணுகோபால் உரை நிகழ்த்துகையில்,

தமிழ் நாட்டில் இருந்து வெளி வரும் ஆங்கில நாளிதழான தி இந்து இலங்கையிலிருந்து வெளிவரும் சிங்களப் பத்திரிகைகளைக் காட்டிலும் அதிக துரோகத்தைத் தமிழர்களுக்கு இழைத்து வருகிறது. இப்பத்திரிகைக்கு ராஜபக்ஷ வழங்கிய பேட்டியில்,

சனல் 4 வீடியோவை மற்ற திரைப்படங்களைப் போல அது ஈழத் தமிழர்களால் தயாரிக்கப்பட்ட ஒரு படம் என்கிறார். அவருடன் அமர்ந்து மதிய உணவருந்தி விட்டு வரும் இந்தப் பத்திரிகையின் ஆசிரியரும் அதை அப்படியே ஏற்றுக் கொண்டு தன் பத்திரிகையில் முதல் பக்கத்தில் வெளியிடுகிறார்.

ஈழப்பிரச்சினையைப் பின்வரும் முறையில் அணுகுவது நல்ல புரிதலை அளிக்கும்.

மனித நேயம் மற்றும் அரசி யல் பார்வை, உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை பற்றி ஒவ்வொரு அறிக்கையிலும் ஒவ்வொரு விதமாகக் குறிக்கப்பட்டுள்ளது.

நடுநிலையாளர்கள் இந்த எண்ணிக்கை ஒரு இலட்சத்திற்கும் அதிகம் என்று உறுதியாக கூறுகிறார்கள். மனிதநேய ஆர்வலர்கள் இதை உன்னிப்பாக கவனிக்க வேண்டும். தான் எந்த போர்க்குற்றங்கள்ளயும் செய்ய வில்லை என்று திரும்பத் திரும்ப கூறி வரும் ராஜபக்ஷ அரசாங்கம் பின்னர் எதற்காக சர்வதேச விசாரணைக்கு மறுப்பு தெரிவித்து வருகிறது.

தமிழர்கள் தங்கள் சொந்த மண்ணிலேயே இரண்டாந்தர குடிமக்களாக நடத்தப்பட்டார்கள். 1956 இல் தமிழை ஆட்சி மொழியில் இருந்து நீக்கினார்கள். இது போன்று தொடர்ந்து தமிழர்கள் ஒடுக்கப்பட்டதனால் தான் விடுதலைப்புலிகள் போன்ற ஆயுதக் குழுக்கள் உருவானார்கள்.



தமிழர்களைக் கொன்று அழித்ததைப் பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்று ராஜபக்ஷ கூறிவருகின்றார். மன்மோகன் சிங் அதையே முன்மாதிரியாகக் கொண்டு பசுமைவேட்டை என்ற பெயரில் இந்தியாவில் நிகழ்த்தப் போகிறார்.

விசாரணையின்றி தன் சொந்த அரசாங்கத்தாலேயே கொல்லப்பட்ட தமிழ் மக்களுக்காக குரல் கொடுப்பது நம் அனைவரின் கடமை என்றார். கடந்த 2 ஆம் திகதி போர்க்குற்றங்கள்; இனப்படுகொலைக்கு எதிராக மன்றத்தின் கர்நாடக மாநிலக் குழுவின் சார்பாக அரங்க கூட்டம் பெங்களூருவில் நடைபெற்றது இங்கு குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2-4)


## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரியின் ஆங்கில பாட ஆசிரியை
செல்வி சித்ரூபா சின்னையா அவர்களின்
பாசமிகு தந்தையும் எமது கல்லூரியின்
முன்னாள் ஆசிரியரும் ஆன
அமரர் மருதர் சின்னையர்
(ஓய்வுபெற்ற அதிபர்)
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருடன் நாமும் துயர் பகிர்ந்து கொள்வதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
நலன்புரிக்கழகம், யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.
கோப்பாய்.
(5549)


காங்கேசன்துறை துறைமுக புனரமைப்பு பணிகள் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் இந்திய தூதுவர் அசோக் கே. காந்தா மங்கல விளக்கேற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-அலுவலகச் செய்தியாளர்)

# சறுக்கியது இந்தியா; லோர்ட்ஸ் டெஸ்டில் படுதோல்வி

# சாதித்தது இங்கிலாந்து அணி



இந்திய வீரர்களை வேகத்தில் சரித்த மகிழ்ச்சியில் அண்டர்சன்...

டெஸ்ட் அரங்கில் நம்பர்-1 இடத்தில் இருக்கும் இந்திய அணிக்கு மிகப்பெரும் அடி. அதிகம் எதிர்பார்க்கப்பட்ட லோர்ட்ஸ் டெஸ்டில் இங்கிலாந்திடம் 196 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வியடைந்தது.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த 2000ஆவது டெஸ்ட் போட்டியில் வென்ற இங்கிலாந்து அணி சொந்த மண்ணில் சாதித்துக் காட்டியது.

இங்கிலாந்து சென்றுள்ள இந்திய அணி முதல்கட்டமாக 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கின்றது.

முதல் டெஸ்ட் போட்டி லோர்ட்ஸ் மைதானத்தில் நடந்தது. இது டெஸ்ட் அரங்கில் 2000- வது போட்டி என்பதால் மிகுந்த எதிர்பார்ப்பு காணப்பட்டது. நாணயச் சுழற்சியில் வென்ற இந்தியா முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 8 விக்கெட்டுக்களையிழந்து 474 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

தொடர்ந்து முதல் இன்னிங்சை ஆடிய இந்தியா 286 ஓட்டங்களை எடுத்தது. பின் இங்கிலாந்து அணி 2-வது இன்னிங்சில் 6 விக்கெட் இழப்புக்கு 269 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் 2-வது இன்னிங்சை இடைநிறுத்தியது .இதையடுத்து இந்திய அணியின் வெற்றிக்கு 458 ஓட்டங்கள் தேவை என்ற கடின இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

4-ம்நாள் ஆட்டநேர முடிபில் இந்திய அணி 2-வது இன்னிங்சில் ஒரு விக்கெட் இழப்புக்கு 80 ஓட்டங்களை எடுத்திருந்தது.

**அண்டர்சன் மிரட்டல்**

நேற்றுமுன்தினம் 5வது மற்றும் கடைசி நாள் ஆட்டம் நடந்தது. இந்திய அணியின் முதல்வரிசை துடுப்பட்ட வீரர்கள் சொதப்பலாக ஆடினர். இவர்கள் அண்டர்சன் வேகத்தில் வரிசையாக சரணடைந்தனர். முதல் இன்னிங்சில் சதம் அடித்த டிராவிட் இம்முறை அண்டர்சன் பந்தில் 36 ஓட்டங்களுக்கு வெளியேறினார். பின் லக்ஸ்மன், காம்பீர் இணைந்து போராடினர்.

டெஸ்ட் அர்ங்கில் தனது 53-வது அரைச் சதம் அடித்த லக்ஸ்மன் 113 பந்துகளில்(8 பவுண்டரிகள் உட்பட) 56 ஓட்டங் களை எடுத்த போது சுவானின் சுழலில் சிக்கினார்.

**சச்சின் வீண்**

அடுத்து வந்த சச்சினுக்கு அதிர்ஷ்டம் அதிகமாக கைகொடுத்தது. அண்டர்சன் பந்தில் அணித்தலைவர் ஸ்றொரஸ் கை நழுவியதால் முதலில் கண்டம் தப்பினார். ஆனாலும் இந்த வாய்ப்பை அவர் பயன்படுத்த தவறினார்.

இதே ஓவரில் அண்டர்சன் பந்தில் வெறும் 12 ஓட்டங்களில் ஆட்டமிழந்து ஏமாற்றினார்.

இதையடுத்து லோர்ட்ஸ் அரங்கில் தனது 100- வது சதம் அடிக்கும் சச்சினின் கனவு தகர்ந்தது.

**ரெய்னா ஆறுதல்**

பின்னர் வந்த சுரேஷ் ரெய்னா-தோனி இணைந்து அணியை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இந்த நேரத்தில் பொறுப்பற்ற ஷொட் அடித்த தோனி 49 பந்துகளில் 16 ஓட்டங்களுடன் டிறாம் லெட் பந்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த இறுதிவரிசை துடுப்பட்ட வீரர்கள் அதிக நேரம் தாக்குப்பிடிக்க முடியவில்லை. அண்டர்சன் பந்தில் ஹர்பஜன் 12 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். பிரோட் வேகத்தில் பிரவீன் குமார் 2 ஓட்டங்களுடன் போல்ட் ஆனார். போராடிய ரெய்னா டெஸ்ட் அரங்கில் தனது 6-வது அரைச்சதம் கடந்து ஆறுதல் தந்தார். ரெய்னாவை 136 பந் துகளில் 78 ஓட்டங்களைப் பெற்றபோது அண்டர்சன் தனது 5 வது விக்கெட்டாக வெளியேற்றினார்

இஷாந்த் சர்மா ஓரு ஓட்டத்தில் வெளியேற இந்திய அணி 2-வது இன்னிங்சில்261 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

196 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்ற இங்கிலாந்து அணி தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது

முதல் இன்னிங்சில் இரட்டை சதம் அடித்த இங்கிலாந்து வீரர் பீற்றர்சன் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இவ்விரு அணிகள் மோதும் 2 வது டெஸ்ட் நாளை மறுதினம் நோட்டிங்காமில் ஆரம்பமாகின்றது.




லாட்ஸ் மைதானத்தில் ரசிகர்களுக்கு 'ஆட்டோகிராப்' வழங்கிய இந்திய வீரர் யுவராஜ.

# கோபா அமெரிக்கா கால்பந்து உருகுவே அணி சம்பியன்



கோபா அமெரிக்கா கால்பந்து இறுதிப் போட்டியில் உருகுவே அணி 3-0 என்ற கோல் கணக்கில் பராகுவே அணியை வீழ்த்தி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

தென்அமெரிக்கக் கண்டத்தில் எல்லா நாடுகளும் பங்கேற்கும் கோபா அமெரிக்கா கால்பந்துப்போட்டி ஆர்ஜென்டினாவில் நடந்தது.

பியூனஸ்அயர்சில் நடந்த இறுதிப் போட்டியில் உருகுவே-பராகுவே அணிகள் பலப்பரீட்சை நடத்தின. இதில் தொடக்கம் முதலே உருகுவே அணி வீரர்கள் தாக்குதல் ஆட்டத்தை தொடுத்தனர். இதற்கு ஈடுகொடுக்க முடியாமல் பராகுவே அணி தடுமாறியது.

**உருகுவே வெற்றி**

ஆட்டத்தின் 11-வது நிமிடத்தில் உருகுவே அணி முதல் கோல் போட்டது. அந்த அணி வீரர் லூயிஸ் சுரேஸ் அடித்த பந்தை பராகுவே கோல் காப்பாளர் ஜஸ்டோ வில்லர் டைவ் அடித்து தடுக்க முயன்றார்.

ஆனால் அது மின்னல் வேகத்தில் கோலுக்குள் சென்றது. 41- வது நிமிடத்தில் உருகுவே அணி 2-வது கோல் அடித்தது. அந்த அணி வீரர் எஜிடோ ரியாஸ் கடத்திக் கொடுத்த பந்தை சக வீரர் டிகோ பார்லன் இடது காலால் அடித்து கோலாக்கினார். முதல்பாதியில் உருகுவே அணி 2-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

ஆட்டநேரம் முடிய ஒரு நிமிடமிருக்கையில் உருகுவே அணி மீண்டும் ஒருகோல் அடித்தது. 2-வது கோலை அடித்த டிகோ பார்லன் இந்தக் கோலையும் அடித்தார்.

கடைசிவரை பராகுவே அணியால் பதில் கோல் எதுவும் அடிக்கமுடியவில்லை. முடிபில் உருகுவே அணி 3-0 என்ற கோல் கணக்கில் பராகுவேயை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை தனதாக்கியது.

2 கோல்கள் அடித்த டிகோ பார்லன் 2010 ஆம் ஆண்டு உலகக் கோப்பை போட்டியில் சிறந்த வீரர் விருதைபெற்றவர் ஆவார்.

**15 ஆவது முறையாக சம்பியன்**

உருகுவே அணி 16 ஆண்டுகளுக்கு பிறகு கோபா அமெரிக்கா கோப்பையை கைப்பற்றியுள்ளது. கடைசியாக 1995-ம் ஆண்டில் இந்தக் கோப்பையை வென்று இருந்தது.

மொத்தத்தில் உருகுவே அணி 15 -வது முறையாக கோபா அமெரிக்கா கோப்பையை வென்று சாதனை படைத்துள்ளது.

34 லட்சமே மக்கள் தொகை கொண்ட சிறிய நாடான உருகுவே கோப்பையை வென்றதை தொலைக்காட்சியில் பார்த்ததும் அந்த நாட்டு ரசிகர்கள் தங்கள் அணி வெற்றி பெற்றதும் தேசியக்கொடியுடன் தெருக்களில் ஆடிப்பாடி வெற்றியைக் கொண்டாடினார்கள்.

பராகுவே அணி தோல்வி கண்டதால் அந்த நாட்டு ரசிகர்கள் சோகத்தில் மூழ்கினர். பராகுவே அணி இந்தப் போட்டியில் 5 சமநிலை மற்றும் 2 ஆட்டங்களில் பெனால்டி ஷூட் அவுட் முறையில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

கால் இறுதியில் அந்த அணி பிறேசிலை சாய்த்திருந்தது குறிப்பிடத்தக்கது.

உருகுவேஅணி 1930 மற்றும் 1950ஆம் ஆண்டுகளில் உலகக் கோப்பையை வென்றுள்ளது.

கடந்த உலகக்கோப்பைப் போட்டியில் 4 ஆவது இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை மெய்வன்மைச் சங்கத்தின் பெண்களுக்கான தடகளப் போட்டி

இலங்கை மெய்வன்மைச் சங்கம் பெண்களுக்காக அகில இலங்கை ரீதியில் நடத்திய தடகளப் போட்டிகளில் வடமாகாண வீராங்கனைகள் ஆறு பதக்கங்களை வென்றுள்ளனர்.

கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் கொழும்பு தியகமவில் அமைந்துள்ள ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் அகில இலங்கை ரீதியாக வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

வவுனியா மாவட்டத்தை சேர்ந்த ரி.அனுசா பெண்களுக்கான திறந்த போட்டியில் கலந்து கொண்டு தட்டெறிதலில் 43.50 மீற்றர் தூரம் எறிந்து இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தை பெற்றுக்கொண்டார்.

20 வயது பிரிவினருக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த அளவெட்டி அருணோதயாக் கல்லூரி வீராங்கனைகளான அருந்தவம் பவித்திரா (2.60 மீற்றர்) , இராசதுரை காவேரி (2.50 மீற்றர்) ஆகியோர் முறையே இரண்டாம் மூன்றாம் இடங்களைப் பெற்று வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை பெற்றுள்ளார்கள்.

18 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஆர். தர்சினி குண்டெறிதலில் 9.32 மீற்றர் எறிந்தும் தட்டெறிதலில் 27.26 மீற்றர் எறிந்தும் இரண்டாம் மூன்றாம் இடங்களைப் பெற்று வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை பெற்றுள்ளார்.

3000 மீற்றர் வேகநடைப் போட்டியில் வவுனியா பூம்புகார் கண்ணகி வித்தியாலய வீராங்கனை 17.18 செக்கனில் நடந்து மூன்றாம் இடத்தைப்பெற்று வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

பொதுசன நூலகம்
நகர சபை, யாழ்ப்பாணம்.



# முகமூடிக் கொள்ளையர்களால் மோட்டார் சைக்கிள்கள் அபகரிப்பு

## கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் இரு முறைப்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

முகமூடியணிந்த கொள்ளையர்கள் வாளினைக் காட்டி அச்சுறுத்தி மோட்டார் சைக்கிள், கைத்தொலைபேசி, பணம் என்பவற்றை அபகரித்துச் சென்றுள்ளதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் நேற்று முறையிடப்பட்டுள்ளது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் உரும்பிராய் விளாப்பியடி ஞானவைரவர் கோவிலுக்கு அருகாமையில் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, மோட்டார் சைக்கிளில் வீதியால் பயணித்துக் கொண்டிருந்த இளைஞர்கள் இருவரை வழிமறித்த மூன்று பேர் கொண்ட கொள்ளையர் குழு வாள் மற்றும் கூரிய ஆயுதங்களைக் காட்டி மோட்டார் சைக்கிள், கைத்தொலைபேசி, பணம் மற்றும் மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் என்பவற்றை பறித்து சென்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸாரிடம் தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் கொள்ளையர்களை தேடும் முயற்சியில் ஈடுபட்டனர்

கொள்ளைச் சம்பவம் தொடர்பாக முறைப்பாடு செய்வதற்காக பாதிக்கப்பட்டவர்கள் நேற்று பொலிஸ் நிலையத்திற்கு சென்றனர்.

அப்போது கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டவர்களால் கொண்டுவரப்பட்ட மோட்டார் சைக்கிளின் இலக்கத்தை முறைப்பாட்டில் கொடுத்தனர்.

இந்த முறைப்பாட்டில் கொடுக்கப்பட்ட இலக்கத்தையுடைய மோட்டார் சைக்கிள் கொள்ளையடிக்கப்பட்டதாக தெரிவித்து இன்னொருவர் முறைப்பாடு செய்திருந்தார்.

மோட்டார் சைக்கிளை வழி மறித்து கொள்ளையடிப்பதற்கு முன்பு அப்பகுதியிலுள்ள வீடொன்றிக்குள் புகுந்து மோட்டார் சைக்கிள், கைத்தொலைபேசிகள் என்பவற்றை கொள்ளையர்கள் அபகரித்ததுடன் அந்த மோட்டார் சைக்கிளை வைத்தே மற்றைய மோட்டார் சைக்கிளை கொள்ளையடித்துள்ளனர். இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட கொள்ளைச் சம்பவங்களை அடுத்து அப்பகுதியில் பல மணி நேரம் பரபரப்பு ஏற்பட்டது. குறித்த கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-6)

# முதல்வர் ஜெயலலிதா...


அமைச்சர்ஜெயலலிதாவிற்குநன்றிதெரிவித்ததாக கூறினார்.

இலங்கை பிரச்சினையில் தமிழக அரசு எடுத்து வரும் துணிச்சலான முடிவுகளுக்கு நாம் தமிழர் கட்சி என்றும் துணையாக இருக்கும் என்றும் ஜெயலலிதாவிடம் தான் உறுதியளித்ததாக சீமான் தெரிவித்தார்.

கடந்த சட்டசபைத் தேர்தலில் தி.மு.க தலைமையிலான கூட்டணிக்கு எதிராக, குறிப்பாக காங்கிரஸ் கட்சியை குறிவைத்து சீமான் பெரும் பரப்புரையை மேற்கொண்டிருந்தார். இவரின் பரப்புரையின்போது காங்கிரஸ், தி.மு.க விற்கு எதிராக இரட்டை இலைக்கு வாக்களிக்குமாறும் அவர் மக்களிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார். தேர்தலில் அ.தி.மு.க அடைந்த பெருவெற்றிக்கு சீமானின் இந்தப் பிரசாரமும் பங்களித்திருந்தது.

இதேபோல் அகில இந்திய முன்னணியின் தலைவர் டாக்டர் சேதுராமனும் நேற்று முதல்வர் ஜெயலலிதாவை சந்தித்து பேசியுள்ளார். (எ)

## 36வது ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் உயர்திரு
## அல்பிரட் தங்கராஜா துரையப்பா
(A.T.துரையப்பா - முன்னாள் யாழ்.மாநகர முதல்வர் அல்பிரட்)

அமரர் துரையப்பா அவர்கள் முன்னாள் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளரும், யாழ்.மாநகர முதல்வரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவரும், சிறிலங்கா அரசாங்கத்தின் விசுவாசியுமாவார்.

என்றென்றும் தங்கள் நினைவுகளுடன்...
உங்கள் வழியே எங்கள் பயணம்...

வடமராட்சி,
துன்னாலை.

தங்கள் நினைவுகளுடன் :
K.A.வைகுந்தநாதன்
(சு.க.அங்கத்தவரும், முன்னாள் பாதுகாப்பு உத்தியோகத்தரும், தற்பொழுது அரசாங்கத்தில் வருமானப் பகுதியிலும் சுகாதாரப் பகுதியிலும் கடமையாற்றி ஓய்வுபெற்றவரும், இலங்கை சமாதான நீதிபதியும், கதிர்காமம் தொண்டனும்)

(5554)




# பதுமனுக்கு...

எடுத்துக்கொள்ளப்பட்டநிலையில் அவரை மீண்டும் தடுப்புக்காவலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பதுமன் என அழைக்கப்படும் சிவசுப்பிரமணியம் வரநாதனுக்கு எதிராக இராணுவ முகாம்கள் மீது தாக்குதல் நடத்தியமை, படையினரை கொன்றமை போன்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இவருக்கு எதிராக 1979 ஆம் ஆண்டின் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் 48 ஆவது இலக்கத்தின் விதிமுறையின் கீழ் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

பதுமனை வரும் செப்டம்பர் மாதம் அடுத்த விசாரணை வரை தடுப்புக்காவலில் வைக்குமாறு திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி கே.எம். வீ.ரணவீர நேற்று உத்தரவிட்டார்.

விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்டக் கட்டளைத் தளபதியாக இருந்தபோது இவர் மீது 2001 ஆம் ஆண்டு ஜூலை-டிசம்பரிற்கும் இடையிலான காலப்பகுதியில் இராணுவத்தினருக்கு எதிராக பல தாக்குதல் நடத்தியுள்ளார் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (எ)

# காணி, பொலிஸ் அதி...

உள்ளூராட்சி சபைத்தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்ற வெற்றியின் தாக்கத்தை இலங்கை அரசாங்கம் புரிந்து கொண்டதோ இல்லையோ தமிழ் மக்களின் அபிலாசைகளையும் அவர்களின் பிரச்சினைகளையும் இலங்கை அரசாங்கம் முழுமையாக புரிந்துகொள்ளவில்லை என்பது துரதிர்ஷ்டமே என சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் என்பனவற்றை பகிர்ந்து கொள்ள முடியாது. அவை பேச்சு வார்த்தைகளுக்கு அப்பால் பட்ட விவகாரங்கள் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளமை குறித்து கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையின் நீடித்த அமைதி, நீதி, ஜனநாயகம் மற்றும் வடக்கின் வளர்ச்சிக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் மிகவும் அவசியமானவை.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை பகிரமுடியாது என அரசாங்கம் தொடர்ந்தும் கடும் நிலைப்பாட்டைக் கொண்டிருந்தால் அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகள் தொடருமென எதிர்பார்க்கக் கூடாது.

ஐக்கிய இலங்கைக்குள் இனப்பிரச்சினைக்கு கண்ணியமான தீர்வொன்றைக் காண்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராகவே உள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்தவேண்டியது அவசியமுள்ள நிலையில் அரசாங்கம் இந்த அவசியத்தை சரியாக புரிந்து கொள்ளவில்லை என்பது கவலைக்குரியது. இந் நிலையை அரசாங்கத்திற்கு எவ்வாறு புரிந்து கொள்ளச் செய்வது என்று எனக்குத் தெரியவில்லை.

ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச மன்னிப்புச்சபை, மனித உரிமைகள் கண்காணிப்பகம் மற்றும் சர்வதேச சமூகம் ஆகியன கோருவது போன்று நம்பத்தகுந்த உள்நாட்டு விசாரணைப்பொறிமுறையொன்றை இலங்கை அரசாங்கம் ஏற்படுத்தத் தவறினால் சர்வதேச சமூகத்திடமிருந்து அரசாங்கம் தனிமைப் படுத்தப்படுவதை எவராலும் தடுக்க முடியாது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை நியமிப்பது காலத்தை வீணடிக்கும் செயல். நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சிங்கள பௌத்த பேரினவாத கட்சிகளான ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளால் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை காண்பது சாத்தியமற்றது எனவும் சுரேஷ் பிரேமச்சந்திரன் மேலும் தெரிவித்துள்ளார். (எ-8)

# போர்க்குற்ற விசாரணை...

என இராஜதந்திரிகள் தெரிவித்ததாக சுமந்திரன் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், இலங்கையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும்போது அது பெரும்பான்மை சிங்கள மக்களால் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வாக அமைய வேண்டும்.

இலங்கை அரசுடனான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இறுதி மூன்று பேச்சுவார்த்தைகளும் குறிப்பிட்ட முன்னேற்றம் காணப்படுகிறது.

போர்க்குற்றம் இரண்டு பகுதியினருக்கும் எதிராக இருப்பதால் அதை விசாரணைக்குட்படுத்தி, எமக்கான தீர்வினை பெற்றுக் கொள்ளப் போகின்றோமா? எனவும் அவர் கேள்வி எழுப்பியதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

புலம் பெயர் தமிழ் மக்கள் தமது செயற்பாடுகளில் மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும் என மீண்டும் வலியுறுத்திய அவர் சிங்கள மக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வு ஒன்றை நோக்கி தாம் செல்லப் போவதாகவும் தெரிவித்துள்ளார். (எ)

# அடிகியல்...

ராஜபக்ஷ கலந்து கொண்டு நியமனக் கடிதங்களை வழங்கி வைப்பார்.

நியமனம் பெறும் பட்டதாரிகள் மூன்றாம் தவணை ஆரம்பத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் கடமையில் இணைத்துக் கொள்ளப்படுவர் என வடமாகாண கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (எ-5)

# அமெரிக்காவின் தீர்மான...

கொக்கா கோலா, போயிங் உட்பட 12 பல்தேசிய நிறுவனங்கள் அமெரிக்க ராஜாங்க அமைச்சர் கிலாரி கிளின்டனுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளன.

இக் கடிதத்தில் இலங்கையின் பொருளாதாரம் விரைவாக வளர்ச்சியடைந்து வருவதாகவும் அவ் வகையில் இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவுகளை பலப்படுத்துவது இரு நாடுகளுக்கும் நன்மையை ஏற்படுத்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான உதவிகளை தடை செய்வதற்கு அமெரிக்கக் காங்கிரஸின் வெளிவிவகார குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து இக்கடிதத்தில் எதுவும் நேரடியாக குறிப்பிடப்படாத போதிலும் அமெரிக்காவுக்கு மறைமுகமான அழுத்தம் ஒன்றை கொடுக்கும் முனைப்பாகவே இது கருதப்படுகின்றது.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக பொறுப்புக் கூறுவதற்கு சுயாதீனமான விசாரணைகள் மேற்கொள்ளப்படும் வரை இலங்கைக்கான உதவிகள் அனைத்தையும் நிறுத்தவேண்டும் என அமெரிக்க காங்கிரஸின் வெளிவிவகார குழு தீர்மானம் நிறைவேற்றியிருந்தது.

இலங்கைக்கான மனிதாபிமான நடவடிக்கைகள், கண்ணிவெடிகளை அகற்றுதல் மற்றும் ஜனநாயகத்தை ஸ்திரப்படுத்துதல் போன்றவற்றுக்கான உதவிகள் தவிர்ந்த இலங்கைக்கு வழங்கப்படுகின்ற ஏனைய அனைத்து உதவிகளும் நிறுத்தப்பட வேண்டும் என காங்கிரஸின் வெளிவிவகாரக் குழுவின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-8)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.07.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.